
கல்கி

குடும்பத்துடன் படிக்க...



மறுக்க முடியுமா மணல் கொள்ளையை!

KALKI
23.9.2007 ரூ.8.00
80 பக்கங்கள்



எல்.கே.ஜி. வயதில் பிஹெச்.டி!

ஈஷா யோக மையம்

ஈஷா கிராமோத்சவம்

செப்டம்பர் 23, 2007 - ஞாயிறு

அண்ணா பல்கலைக்கழக மைதானம்

கிண்டி, சென்னை

காலை 9:30 மணி முதல்

- கிராமிய உணவுத் திருவிழா
- கிராம ஒலிம்பிக் போட்டிகள்



மாலை 5:30 மணி

- 2½ கோடி மரங்கள் நடுதல் – திட்டம் துவக்கவிழா

தலைமை: மாண்புமிகு தமிழக முதல்வர்

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்

முன்னிலை: சத்குரு அவர்கள்

தொடர்ந்து

சத்குரு மஹாசத்சங்கம்

வழங்குபவர்கள்

Coca-Cola India little drops of joy

Media Sponsors

Hello 106.4 fm

மாத இதழ் காட்டுப்பூ உயிரென்னும் பூ மலர...

செப் 23 முதல் எல்லாக் கடைகளிலும்

0422-2580155/9442644709

Online subscriptions: www.ishafoundation.org

அனைவரும் வருக!



வட்டமேஜை

திரைப்படம் தயாரிப்பதில் உள்ள சிரமங்களை திருமாவளவன் புரிந்து கொண்டது போல் டாக்டர் ராமதாஸும் புரிந்து கொள்ள வேண்டும்.

- பா.சு.மணிவண்ணன், திருப்பூர்

அரசியலுக்குக் குறுக்கீடாக நடிப்பது இருக்காது என்று சொன்ன திருமா பேட்டி நச்சென்று இருந்தது.

- -ஏ.பி.எஸ்.ரவீந்திரன், நாகர்கோயில்

கடைசியில் வரும் ஆசிரியர் பக்கம் கருத்துக்கள் நிறைந்த கருவூலம்.

- என்.கோமதி, நெல்லை - 7

- எஸ்.ராஜம் (பாரதி மகன்), விழுப்புரம்

ஆசிரியர் பக்கம் காவல்துறையின் அடாவடியைப் படம்பிடித்துக் காட்டியது.

- வே.ஈஸ்வரன், இராஜபாளையம்

இலவசம் குறித்த தராகவின் பதில் செம டாப்... சிந்திக்கக் கூடியது.

- இந்திரன், நாகர்கோயில்

ரிகோபெர்டோவுக்கு ஏற்பட்ட அவலநிலையைப் படித்ததும் நெஞ்சம் பொறுக்கவில்லை.

- கே.எல்.கந்தரூபி, மேலகிருஷ்ணன் புதூர்

மலரினும் மெல்லியதான இழைகளால் நெய்யப்பட்ட வஸ்திரம்போல அழகுற படைக்கப்பட்டிருந்தது காதல் பொன் மொழிக் கதை.

- சு.இந்துமதி, நெய்வேலி

'சரணாலயம்' சிறுகதை தாயன்பின் சிகரம்.

- முரளிதரன், திருப்பூர்

படித்து முடித்துவிட்டு வேலைக்குக் காத்திருப்பவர்களுக்கு வரப்பிரசாதம் மா.கா.பா பாண்டியராஜனின் அறிவுரை!

- குலசை சு.மி.நஜிமுதீன், காயல்பட்டினம்

வாசகரின் கேள்விக்குச் சூர்யா அளித்த பதில் எங்களுக்கும் ஆனந்தத்தைத் தந்தது.

- கே.கஸ்தூரி, வேலூர் - 6

கிரண்பேடியின் மனம் திறந்த பேட்டி மடைதிறந்த வெள்ளம்!

- ஆர்.ராமசுப்ரமணி, திருவாரூர்

மார்பகப் புற்றுநோய் குறித்த கட்டுரை மங்கையர் உணர வேண்டிய எச்சரிக்கை.

- என். சீதா லட்சுமி, பொள்ளாச்சி

முதல்வரே சிரித்திருப்பார்!

'சீக்ரெட் ஆஃப் சிறுநீரகம்' தெளிந்த நீரோடைபோல உள்ளது. படிக்கப் படிக்க சுவாரஸ்யம் கூடுகிறது.

- சங்கரி ரமேஷ், விழுப்புரம்

'குசும்பு ராஜ்' எழுதிய 'ஜாலி ஸ்டோர்ஸ்' பக்கங்களைப் படித்திருந்தால் முதல்வரே சிரித்திருப்பார்!

- ந.சிவரஞ்சனி, வலங்கைமான்



ஸ்வீட் போஸ்ட்

'அம்முவாகிய நான்...' கவர் ஸ்டோரியில் தரமானதை தட்டிக் கொடுக்கும் பக்குவம் மிளிர்ந்தது.

- மல்லிகா அன்பழகன், சென்னை - 78

- வி.ஆர்.ராஜேஷ், சென்னை -1

ஃபைட்டர் ராஜுசேகரின் அனுபவம் சினிமா ஃபைட்டர்களின் ஆபத்தான பணியைப் படம் பிடித்துக் காட்டியது!

- கே.கஸ்தூரி கதிர்வேல், வேலூர் - 6

காலத்துக்கேற்ற பயனுள்ள கட்டுரை வெளியிடுவதில் 'கல்கி' எப்பொழுதும் தவறுவதில்லை என்பதற்கு உதாரணம் 'வலைத் தளம் மூலம் விசா!'

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

ஆசிரியர் குழு :
சா.ஜெயராஜ், ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623, 2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

நழுவும்

சட்டத்திலுள்ள ஓட்டைகள் காரணமாக தவறு செய்யும் அரசியல்வாதிகளும், முக்கியஸ்தர்களும் இறுதியில் தண்டனையிலிருந்து தப்பி விடுகிறார்கள். இதை கவனிக்கும் சாமான்யன், 'இந்தச் சட்டங்கள் ஏழைகளுக்குத்தான் போலிருக்கிறது' என்று நீதித் துறையின் மீது நம்பிக்கையிழக்கத் துவங்கிவிட்டான். சமீபத்தில் முன்னாள் அமைச்சர் சிபு சோரனை உயர்நீதிமன்றம், அரசு தரப்பு வாதம் சரியில்லாததால் விடுதலை செய்து விட்டது. இதுபோல் பல வி.ஐ.பி.க்கள் விடுதலை ஆகிறார்கள். சாமான்யர்களின் கவலையை நாம் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கே.பி.சிவசுப்பிரமணியத்திடம் பகிர்ந்து கொண்டோம்.

“முன்பெல்லாம் கமிட்டல் ப்ரோசீடிங் என்ற முறை இருந்தது. காவல் துறை வழக்குப் பதிவு செய்த பின், நீதிமன்றத்துக்குச் செல்லும் முன், ஒரு மாஜிஸ்திரேட்டிடம் சாட்சிகளை அழைத்துச் சென்று, சாட்சியங்களை அவர் முன் பதிவுசெய்து விடுவார்கள். சாட்சியங்களைப் பதிவுசெய்து கொள்வதைத் தவிர, காவல் துறை சமர்ப்பிக்கும் ஆவணங்களைப் பரிசீலித்து, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் முகாந்திரம் இருக்கிறதா என்பதையும் மாஜிஸ்திரேட் சொல்லிவிடுவார். பின்னால் சாட்சிகள் பிறழ முடியாது. ஆனால் இந்த முறை தாமதத்துக்கு வழிசெய்கிறது என்று குற்றவியல் சட்டத்திலிருந்து எடுத்து விட்டார்கள். இப்போது காவல் துறையிடம் கொடுக்கப்படும் சாட்சியங்களை நீதிமன்றங்களில் மாற்றிச் சொல்லும் வாய்ப்பிருக்கிறது. காரணம் காவல் துறை, மிரட்டியோ அல்லது வேறு வழியிலோ சாட்சியங்களைப் பதிவுசெய்ய முடியும். குற்றம் சாட்டப்பட்டவர்களும் காவல் துறையும் இணைந்து சாட்சிகளை ஜோடிக்க முடியும். குற்றம்சாட்டி புகார் கொடுத்தவரையே மாற்றி சாட்சியம் சொல்ல வைக்க முடியும். இப்படி பல்டியடிப்பதால் பல வழக்குகளில் குற்றவாளிகள் தப்பி விடுகிறார்கள். இவர்களில்



சீனியர் வழக்கறிஞரான அஜிதா இதுபற்றி என்ன சொல்கிறார்?

“சட்டப்படி ஆணும் பெண்ணும் சமம்தான். ஆனால், வழக்கை நடத்துவதற்கு ஆணுக்கு உள்ளது போன்ற வாய்ப்புகள் பெண்ணுக்குக் குறைவே. சமீபத்தில் சினிமா நடிகர் மன்சூர் அலிகான் மீது சுமத்தப்பட்ட, பாலியல் பலாத்கார குற்றச்சாட்டில் அவருக்கு மேல் நீதிமன்றம் அபராதம் மட்டும் விதித்து, விடுதலை செய்தது. அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு, வாதி சமரசமாகப் போக முடிவு செய்ததால் பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணமும், குற்றவாளிக்குத் தண்டனையும் கொடுக்க வேண்டியது அவசியம். வழக்கைத் தொடர்பவர்களே பிற்காலத்தில் தம்முடைய நிலையிலிருந்து எதிர்மாறான நிலைப்பாட்டை மேற்கொள்கின்றனர். இதற்கு நிறைய உதாரணங்கள் இருப்பினும் சமீபத்திய உதாரணம் ஜீவஜோதி. இதற்கு உளவியல் ரீதியான பல காரணங்கள் உள்ளன. வழக்கு தொடரும் பெண்களுக்கு உரிய பாதுகாப்பு தரும் பட்சத்தில் இதுபோன்ற பிறழ் சாட்சிகளைத் தடுக்கலாம். என்றாலும் பிறழ் சாட்சி சொன்னால் சட்டப்படி தண்டனை

(பக்கம் 6)

மீன்கள்!

மூத்த வழக்கறிஞரும், குடும்ப வன்முறைச் சட்டத்துக்கு முன்னோடியாகப் பல விவாதங் களில் கலந்துகொண்டவருமான கீதா ராமசேஷனும் இது குறித்து நம்மிடம் பேசினார்...

"சட்டங்கள் பெண்களுக்குச் சாதகமாக இருப்பது உண்மைதான். அந்தச் சட்டத்தின் மூலமாக பெண்களுக்கு நீதி கிடைக்க வழி செய்யத்தான் காவல்துறை மற்றும் நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஆனால், நடைமுறை என்பது வேறு விதமாகத்தான் இருக்கிறது. சமுதாயத்தில் ஆண் என்றால் எப்படி வேண்டுமானாலும் இருக்க லாம்; பெண் என்றால் இப்படித் தான் இருக்க வேண்டும் என்ற கட்டுப்பெட்டியான பழைமை வாதங்கள் இன்னமும் தொடர் கின்றன. இறுதி நீதி பெண் களுக்கு மறுக்கப்பட இதுவும் ஒரு காரணம்.

சாட்சிகள் பல்டியடிக்கும்போது, நாம் அவர்கள் மீது சட்டப்படி ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாது. புகார் கொடுத்தவரேகூட பல்டி யடிக்கிறார். இதற்கு மிரட்டல், சலிப்பு, காலதாமதம், பயம், பணம், மறதி என்று பல காரணங்கள் இருக்கின்றன. பெஸ்ட் பேக்கரி வழக்கில் ஜகீரா ஷேக், தன் கைப்பட எழுதிக் கொடுத்த ஸ்டேட்மெண்ட்டை பின்னர்



வி.ஐ.பி.களும் அடக்கம். முன்பெல்லாம் குற் றத்தால் பாதிக்கப்பட்டு புகார் கொடுப்பவர்கள், வழக்கை மும்முரமாகக் கண்காணித்து குற்ற வாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப் பதில் விழிப்பாக இருப்பார்கள். இன்று அவர் களே விலைபோய் விடுகிறார்களே! நீதிமன் றமும், காவல் துறையும் என்ன செய் யும்? இந்தச் சூழலில் மீண்டும் கமிட்டல் ப்ரோசீடிங்கை முழு அளவில் கொண்டுவர வழி வகை செய்ய வேண்டும்.

இப்போது தீர்ப்பு சொல்லிவிட்டு நகல்



கொடுக்கவும், தண்டனையைத் தீர்மானிக்கவும் அதிக நாட்கள் எடுத்துக்கொள்கிறார்கள். இதுவும் தவிர்க்கப்பட வேண்டியது. தொழில்நுட்பம் முன்னேறிய இந்தக் கால கட்டத்தில் தீர்ப்பு களை உடனடியாகவே கொடுக்க முடியும்.

மான் வேட்டை வழக்கில் ஒரு நடிகருக்குச் (அவர் மேலுள்ள மற்ற வழக்குகளைப் பற்றிப் பேசவில்லை) சிறை தண்டனை கொடுத்திருக் கிறார்கள். சட்டப்படி இது சரியாக இருக்கலாம். அதிகபட்ச அபராதமும், குறைந்தபட்ச தண்ட னையும் கொடுத்தால் போதும் என்பது என் கருத்து.

தங்களுக்குச் சாதகமான சட்டங்களை வைத்து, ஆண்களைப் பெண்கள் பழிவாங்கு

கிறார்கள் என்ற கருத்தோட்டமும் சமூகத்தில் இருக்கிறது. இப்போது நீதிபதியாக இருக்கும் ஒருவர் என்னிடம் சொன்னது: கணவன் - மனைவி பிரிந்து போனார்கள். கணவனிடமிருந்து குழந்தையை மீட்க, அவரை மிரட்டும் நோக்கத்தில் மனைவி வரதட்சணை கொடுமை என்று பொய்ப் புகார் கொடுத்துவிட்டார். இப்படிப்பட்ட நிலை இருக்கும்போது, காலப்போக்கில் உண்மையான வரதட்சணைக் கொடுமை புகார்களுக்கும்கூட உரிய மதிப்பும், விசாரணையும் இருக்காது. சட்டத்தின் சலுகைகளை அனுபவிக்கும் பெண்களுக்கும் பொறுப்பு உண்டு. வரதட்சணை கொடுமை புகார்களில், காவல்துறை கட்டப்பஞ்சாயத்து செய்யும் போக்கும் அதிகமாகி வருகிறது.

இப்போது உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் முடிவுகளை உச்சநீதிமன்றக் குழு எடுக்கிறது. முன்பு அரசும், உச்சநீதிமன்றமும் இணைந்து முடிவு செய்தன. ஒரு checks and balance இருந்தது. பாரபட்சமே அற்ற முறையில் நீதிமன்ற நியமனங்கள் அமைய வேண்டும். இப்போது ஜுடிஷியல் கமிஷன் என்று போட்டு இது குறித்துப் பரிசீலிக்கிறார்கள்.

சமுதாயத்தின் எல்லா மட்டங்களும் சீரழிவதுபோல நீதித்துறையும் சீரழிவுக்கு உட்பட்டு இருக்கிறது. இதை ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி பரூச்சா அவர்களே சமீபத்தில் சொல்லியிருக்கிறார். வி.வி.ஐ.பி.க்கள் தண்டனை வலையிலிருந்து தப்பிக்க இந்தப் போக்கும் ஒரு காரணம். ஒழுக்கம், நேர்மை, நாணயம் ஆகியவை ஒவ்வொரு தனி மனிதனிடமும் இருக்க வேண்டும். அப்போதுதான் சமுதாயமும் நல்ல முறையில் இயங்கும். நீதி பரிபாலனமும் பாரபட்சமற்ற முறையில், சாமான்யர்களுக்கும் திருப்தியளிக்கும் விதமாக நடக்கும்'' என்றார் கே.பி.சிவசுப்ரமணியம்.



என்ற நிலை வர வேண்டும்.

பெண்கள் மீதான குடும்ப வன்முறைச் சட்டத்தில் வேண்டுமென்றே ஆண்கள் பெண்களால் பலிகடா ஆக்கப்படுகிறார்கள் என்பது முற்றிலும் தவறானது. பெண்கள் சம்பந்தப்பட்டவை வழக்குகளில் ஐந்தில் மூன்று குடும்ப வன்முறை சம்பந்தப்பட்டவை என்று தேசிய குற்றவியல் ஆவண அமைப்புச் சொல்கிறது. இந்தச் சட்டம் இன்னும் எல்லா மட்டங்களிலும் மும்முரமாக நடைமுறைப் படுத்தப்படுவதற்கு முன்னாலே ஆண்கள் இவ்வாறு அலறுவது அர்த்தமற்றது'' என்கிறார் அஜிதா.

மாற்றியபோது உச்சநீதிமன்றம் கடுமையாகக் கண்டித்தது குறிப்பிடத் தக்கது.


குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தில், போலீஸ் யாரையும் கைது செய்ய முடியாது. ஆனால், வன்முறை தொடர்பாக கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப் படுமானால் அதில் வேண்டுமானாலும் கைது செய்யலாம். இந்தச் சட்டம் திருமணமான பெண்களுக்கு மட்டுமல்லாமல் திருமணமாகாதவர்கள் மற்றும் விதவைப் பெண்களுக்கும் பொருந்தும். இந்தச் சட்டத்தின்படி நேரே நீதிமன்றத்தின் கதவைத் தட்ட பெண்களுக்கு வாய்ப்பிருந்தாலும் கிடைப்பது சிவில் நிவாரணம்தான்.''

– கௌசல்யா

படம் : **ராஜன்**







மணல் கொள்ளை... நீண்ட நெடிய காலமாக தமிழகத்தை அச்சுறுத்தி வரும் முக்கிய பிரச்னை. 'அது செய்கிறோம்... இது செய்கிறோம்' என்று அவ்வப்போது ஆளும் கட்சிகள் அறிக்கைகள் விட்டாலும் எந்தக் கட்சி ஆட்சியிலும் தீர்க்க முடியாத தலைவலியாகவே இருந்து வருகிறது. நீண்ட காலமாகவே மணல் கொள்ளையை வேரோடு அழிக்கப் போராடி வரும் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ் இது பற்றி நம்மிடம் விரிவாகப் பேசினார்...

"மணல் விவகாரத்தில் ஏதோ திடீரென்று நான் போராடுவது போன்ற தோற்றத்தை இங்குள்ளவர்கள் உருவாக்குகிறார்கள். பாலாறு, கொசஸ்தலை, வைகை, காவிரி, தாமிரபரணி, வைப்பார் ஆகிய ஆற்றுப் படுகைகளில் முறைகேடாக மணல் எடுக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஆறுகள் மாசுபடுத்தப்பட்டு வருவதற்குக் கண்டனம் தெரிவித்தும், மணல் திருட்டைத் தடுக்கும் அதிகாரிகள் மர்மமான முறையில் விபத்தில் இறப்பதை வன்மையாகக் கண்டித்தும், கடந்த முப்பது வருடங்களில் பலமுறை ஆர்ப்பாட்டம், போராட்டம் செய்திருக்கிறேன். 2001-ல் ஜெயலலிதா ஆட்சியின்போது, மணல் விற்பனையை அரசே எடுத்துக் கொள்ள வேண்டும்; அதனால் அரசுக்கு வருவாய் கூடும் என்று மனுக் கொடுத்தோம். அரசு மணல் விற்பனையை எடுத்துக்கொண்டாலும், மொத்த ஏஜெண்ட்போல ஒருவர் செயல்பட்டு பல முறைகேடுகளுக்கு வழி வகுக்கப்பட்டது. அரசு உதவியுடன் 'தாதா' தனம் உருவானது. அரசுக்கு வர வேண்டிய வருவாய், ஆளுங்கட்சிக்காரர்களின் பைகளுக்குப் போய்ச் சேர்ந்தது. உடனே பேராசிரியர் அன்பழகன் தலைமையில் ஒரு குழு ஆளுனரைச் சந்தித்து, 'மணல் கொள்ளையைத் தடுக்க வேண்டும்; இடைத்தரகர்களை ஒழிக்க வேண்டும்' என்று மனு அளித்தது. அப்போது இருந்ததைவிட இப்போது ஐம்பது சதவிகிதமாவது முறைகேடுகள் குறைந்திருக்கின்றன என்று ஆளும்கட்சி சொல்லட்டும். அப்படி உறுதியாய்ச் சொன்னால், நான் மணல் தொடர்பான போராட்டங்களை மூட்டை கட்டி வைத்து விடுகிறேன்'' என்று ஆவேசமாகப் பேசினார் ராமதாஸ்.

''விதிப்படிதான் மணல் வியாபாரம் நடப்பதாகவும், மூன்றடி ஆழத்துக்கு மேல் எங்கும் மணல் எடுக்கப்படுவதில்லை என்றும் அமைச்சர் துரைமுருகன் சொல்கிறாரே?'' என்றோம்.

''முப்பதடி வரை தோண்டி மணல் எடுக்கிறார்கள். பல இடங்களில், ஆற்றுப் படுகைகளில் குளங்களும் கண்மாய்களும்





-அரசுக்குச் சவால் விடும் ராமதாஸ்!

உருவாகிவிட்டன. விதிகளை அமல்படுத்த வேண்டிய அதிகாரிகள் இடைத்தரகர்களோடு கைகோத்துக் கொண்டு கொள்ளையடிக்க உதவுகிறார்கள். இரண்டு யூனிட் மணலுக்கு 626 ரூபாய் கொடுத்துவிட்டு, எட்டு யூனிட் அள்ளிச் செல்கிறார்கள். பொக்லைன் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு மணல் எடுக்கப்படுகிறது. கேரளாவில் மணல் எடுக்கத் தடை உண்டு. அப்படியென்றால் அங்கே கட்டுமான வேலைகளுக்கு மணல்? நம் ஊரிலிருந்துதான் திருட்டுத்தனமாகக் கடத்தப்படுகிறது. தமிழகத்தில் உள்ள 86 மணல் குவாரிகளில், நாள் ஒன்றுக்கு அரசுக்குப் பத்துக் கோடி வீதம் இழப்பு ஏற்படுகிறது.''


''ஜெயலலிதா ஆட்சி நடந்த 2005-06-ல் 74 கோடி ரூபாய் வருமானம் வந்ததாகவும், இப்போது 2006-2007-ல் அரசுக்கு 131 கோடி ரூபாய் வருமானம் வந்திருப்பதாகவும் துரைமுருகன் பெருமைபட்டுக் கொண்டுள்ளாரே!' என்ற நமது கேள்விக்கும் சளைக்காமல் பதில் சொன்னார் ராமதாஸ்.

''வருமானம் கூடியிருக்கிறது என்று பெருமைப்பட்டுக்கொள்ளும் அதே வேளையில், முறைகேடுகள் தவிர்க்கப்பட்டுள்ளன என்று சொல்லியிருக்கிறாரா? பத்து மடங்கு கூடுதலாக 1300 கோடி ரூபாய் வருமானம் வருவதற்குப் பதில் 131 கோடி ரூபாய்தான் வந்திருக்கிறது. ஆனால், அதே சமயம் 1300 கோடி மதிப்புள்ள மணல் எடுக்கப்பட்டிருக்கிறது. இதனை மறுக்க முடியுமா? விடையூரில் நான் போராட்டம் நடத்தச் சென்றபோது, 'அன்றும் ஆறு - சாமி; இன்றும் ஆறு - சாமி' என்று போஸ்டர் ஒட்டியிருந்தார்கள்.''

''அரசு அனுமதியுடன் மணல் எடுப்பதைத் தடுத்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளதே?''

''மணல் எடுப்பதைத் தடுப்பது போன்ற நேரடி நடவடிக்கைகளில் எப்போதும் நான் இறங்குவது இல்லை. ஜனநாயக வழிகளில் மட்டுமே என் போராட்டம் இருக்கும்.''





மணலுக்கு மாற்று?

மணலுக்கு மாற்றுதான் என்ன? கட்டுமானப் பொறியியல் பேராசிரியர்கள் ராமமூர்த்தி (ஐ.ஐ.டி.) மற்றும் நாகமணி (அண்ணா பல்கலைக் கழகம்) ஆகியோரிடம் பேசினோம்.

"இயற்கையான மணலுக்கு மாற்று கண்டுபிடிப்பது சவால்தான். கட்டுமானங்களில் இடைவெளிகளை நிரப்புவதும், சிமெண்ட்டுடன் சேர்ந்து கட்டுமானத்துக்கு உறுதி கூட்டுவதும்தான் ஆற்று மணல். எந்தவித அமிலத்தன்மையும் இல்லாமல், கட்டுமானங்களுக்கு எந்த ஆபத்தும் விளைவிக்காத தன்மை உடையது. இதே குணத்துடன் மணல் துகள்களின் பருமனுக்கேற்ப மாற்று மணலை உருவாக்க கருங்கல் அரவை இயந்திரம் உதவும். பெரிய கருங்கற்களை சின்னச்சின்ன ஜல்லிகளாக உடைக்கும்போது, சிதறும் துகள்களை நைஸ் பவுடர் நீக்கித் தேவையான அளவில் சலித்து மணலை எடுக்கலாம். இப்படி எடுக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட மணல், ஆற்று மணலின் குணநலன்களைக் கொண்டிருக்கிறது. அனல் மின் நிலையங்களில் பாய்லரை எரித்த நிலக்கரியின் சாம்பலிலிருந்துகூட மாற்று மணல் உருவாக்க முடியும். இதைக் கொண்டு கட்டுமானங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

ஆனால், இந்த ஆராய்ச்சிகள் மிகச் சிறிய அளவில்தான் நடந்து வருகின்றன. விரிவான ஆராய்ச்சிகள் இன்னும் தேவைப்படுகின்றன."

"மணலின் தேவை அதிகமாகிக் கொண்டே வரும் நிலையில், அதை ஈடுகட்டும் பொறுப்பு அரசுக்கு உண்டல்லவா?" என்றால்,

"ஒப்புக்கொள்கிறேன். அதற்கென்று சகட்டுமேனிக்கு இயற்கையைச் சுரண்டுவதா? கோடிக்கணக்கான மக்களின் விவசாயம் மற்றும் குடிநீர் வாழ்வாதாரமாக இருப்பவை நமது ஆறுகள்தான். மணற்பாங்கான பரப்பு இருந்தால் மட்டுமே பெய்யும் மழை மூலமாகவும், நீரோட்டம் மூலமாகவும் நிலத்தடி நீர்மட்டம் உயரும். ஆனால், இப்போது பல ஆற்றுப் படுகைகளில் மணல் பரப்பு போய், களிமண் பரப்பு வந்து, அங்கு காடு போன்ற செடி கொடிகள் உருவாகிவிட்டன. இந்நிலையில் மழை நீர் பூமியில் உறிஞ்சப்பட்டு நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பே இல்லை. மணல் உருவாவது என்பது காலம் காலமாக நடந்து வந்தாலும் பருவ மழை குறைவதாலும், மலைப் பகுதி அழிக்கப்படுவதாலும் இயற்கையாக அது உருவாவது மிகக் குறைந்து விடுகிறது. இதைக் கருத்தில்கொண்டு நாம் செயல்பட வேண்டும். மற்ற மாநிலங்களில் உள்ளது போல, மணல் விவகாரத்தை கனிம - சுரங்கவளத் துறையிடம் ஒப்படைத்து, அவர்கள் சொல்லும் இடங்களில் மட்டுமே மணல் எடுக்க வேண்டும். இடைத்தரகர்களை ஒழித்து அரசு அதிகாரிகள் நேரடியாக விற்பனை செய்ய வேண்டும். பொக்லைன் இயந்திரம் பயன்படுத்தி மணல் அள்ளக் கூடாது" என்கிறார் ராமதாஸ்.

"மணல் 'தாதா'க்கள் எல்லா அரசியல் தலைவர்களையும் வாயடைக்க வைத்து விடுவார்களே!" என்றோம்.

"என்னை யாரும் அணுக முடியாது. எனக்கு யாரும் வாய்ப்பூட்டுப் போடவும் முடியாது. இந்தப் பிரச்னையில் தொடர்ந்து என் கருத்துக்களை எடுத்து வைப்பேன். குறிப்பாகச் சொல்வதென்றால், மக்களைத் தவிர, பத்திரிகை நண்பர்கள்தான் ஆங்காங்கே நடக்கும் முறைகேடுகளைச் சொல்லி, தடுப்பதற்குப் போராடச் சொல்கிறார்கள்."



"என்னை யாரும் அணுக முடியாது. எனக்கு யாரும் வாய்ப்பூட்டுப் போடவும் முடியாது!"

– ப்ரியன்


தொப்பை தெரிஞ்சு ஓடாச்சு!



"எனக்கு, எல்லாமே நாலு நாலாய் தெரியுது டாக்டர்!"

"ரெண்டு ரெண்டாய்தானே தெரியணும்... நாலு நாலாய் எப்படி? எதுக்கும், நீங்க ஒரு ஸ்பெஷலிஸ்ட்டை பாருங்க!"

– சுஹைல் ரஹ்மான்



"இன்னிக்கு ஜாக்பாட் நிகழ்ச்சி கிடையாதாமே... ஏன்?"

"குஷ்பூவோட டெய்லருக்கு ஒரு வாரமா உடம்பு சரியில்லையாம்!"

– அம்பைதேவா

"அப்பா... நான் ஸ்போர்ட்ஸ்ல வாங்கின ப்ரைஸை வெச்சு ஒரு கிஃப்ட் கடையே வாங்கலாம்."

"நீ எக்ஸாம்ல வாங்கின மார்க்கை வெச்சு ஒரு கோழி முட்டைப் பண்ணையையே வாங்கலாம்!"

– சென்னிமலை சி.பி.செந்தில்குமார்



"திருடனைப் பிடிக்க மப்டியில போயுமா அவங்க 'துப்பு' தெரிஞ்சு தப்பிச்சிட்டாங்க?"

"துப்பு தெரிஞ்சு தப்பிக்கலே, தொப்பை தெரிஞ்சு தப்பிச்சிட்டாங்க."

– எஸ். விஜயராணி



தடம் புரண்ட

உலகம் தமக்குக் கீழ் இயங்க வேண்டும் என்று நினைப்பவர் பாகிஸ்தான் கிரிக்கெட் டீமின் பந்து வீச்சாளர் அக்தர். நூற்றுக்கும் மேற்பட்ட ஒருநாள் போட்டிகளிலும் 43 டெஸ்ட் போட்டிகளிலும் இவரது பங்களிப்பு இருந்திருக்கிறது. 96ஆம் ஆண்டு இந்தியாவுடன் ஒருநாள் போட்டியில் அறிமுகமாக இருந்தார். ஆனால், ஆட்டம் தொடங்கும் முன்பே அக்தருடைய நடத்தையில் திருப்தி கொள்ளாத பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம், உடனே அவரை ஆட்டத்திலிருந்து விலக்கியது. இதனால் அக்தரின் முதல் சர்வதேச ஆட்டம் ஒரு வருடம் தாமதமாக நிகழ்ந்தது. நம்பினால் நம்புங்கள், அதற்கடுத்து வருடாவருடம் விதவிதமாக அவர் தவறுகள் செய்வதும், அவரை பாகிஸ்தான் வாரியம் கண்டிப்பதும் ஆட்டத்திலிருந்து விலக்குவதும் வழக்கமாகிப் போனது. அம்பயரிடம் தகராறு செய்வார். பந்தை ஒழுங்காக வீசாமல் எறிவார். ரசிகர்கள் மீது பாட்டில்களை வீசுவார். பந்தை நகத்தால் சுரண்டி அதைப் பாழாக்குவார். காயம் என்று சாக்குப் போக்குச் சொல்வார். இப்படி ஒவ்வொரு முறையும் தினுசு தினுசான காரணங்களுக்காகத் தண்டிக்கப்பட்டார் அக்தர்.

இந்த முறை எல்லாமே எல்லை மீறியிருக்கிறது. ''என் குடும்ப உறுப்பினர்களை சயித் அஃப்ரிடி கேவலமாகப் பேசினார். அதற்கு பதில் கொடுக்கும்போது ஆசிஃப் நடுவில் புகுந்துவிட்டார். கோபத்தில் மட்டையால் அவனை அடித்துவிட்டேன்'' என்கிறார் அக்தர். அஃப்ரிடியோ ''சேச்சே எனக்கும் அக்தருக்கும் ஒரு தகராறும் கிடையாது. ஆசிப்பை அவன் அடிக்கும்போது, நான் தடுக்காவிட்டால் நிலைமை இன்னமும் மோசமாகியிருக்கும்'' என்று பதில் கூறியிருக்கிறார். 'அடச் சே, என்ன சின்னபுள்ளைத்தனமா இருக்கு. எல்லோரும் வாயை மூடுங்கள்' என்று அனைவர் வாயிலும் பிளாஸ்திரி போட்டிருக்கிறது பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம்.

அனுதாப ஓட்டுகளைப் பெறுவதில் சோயிப் அக்தர் வல்லவர். ''நானும் மனிதன் தானே. இரண்டு நிமிடங்கள் என் நிதானத்தை இழந்தேன். என் வாழ்க்கை இன்று அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது. நான் காயம் அடைந்தால்கூட என்னைச் சந்தேகக் கண்ணோடுப் பார்க்



எக்ஸ்பிரஸ்!

கிறார்கள். என் கடமை உணர்வின்மீது அவ நம்பிக்கை கொள்கிறார்கள். என்னை ஏன் இப்படி நடத்துகிறீர்கள்?'' என்று நடந்த கைகலப்புக்கு அவர் மறுப்புச் சொல்கிறார். பந்து வீச்சில் நூறு கிலோமீட்டர் வேகம் செல்லும் ராவல் பிண்டி எக்ஸ்பிரஸான அக்தர், தவறுகளுக்கு விளக்கம் கொடுக்கும்போது கூனிக்குறுகிப் போவது அவலம்.

தவறு முழுக்க அக்தர் மீதுதான் என்று சொல்லிவிட முடியாது. கிரிக்கெட் வீரர்களை ஆடு மாடுகள்போல நடத்துவதில், பாகிஸ்தான் வாரியத்தை எவராலும் மிஞ்ச முடியாது. 2006ன் சிறந்த கிரிக்கெட் வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் வீரர் முகமது யூசுப் மற்றும் மூன்று முக்கியமான பாகிஸ்தான் வீரர்களும், இப்போது ஐ.சி.எல் பக்கம் சாய்ந்துள்ளனர். பாக். கிரிக்கெட் வாரியத்தின் மோசமான நிர்வாகத்துக்கு இது ஒரு சோறு பதம்.

இப்போது சோயிப் அக்தர் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் காலில் விழுந்திருக்கிறார். ''என்னை வாழ்நாள் முழுக்கத் தடை செய்துவிடாதீர்கள்'' என்று வெளிப்படையாகவே மன்றாடியிருக்கிறார். ஆனால், பாகிஸ்தான் முழுக்க அவருக்காக அனுதாபம் கொள்ள ஒரு ஜீவன்கூடத் தயாராக இல்லை. இனியும் அக்தரை கிரிக்கெட் ஆடவிட்டால் அவர் கொலை செய்யும் அளவுகூட தைரியம் பெற்றுவிடுவார் என்று அவர்மீது ஒரேடியாக சந்தேகம் கொள்கின்றனர். அக்தருக்கு அல்ல... பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு இது போறாத காலம்.

ச.ந.கண்ணன்



கல்கி



2007 செப்டெம்பர் 23
சர்வஜித் புரட்டாசி 6
மலர் : 66
இதழ் : 8

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- *பாரதியார்*

மலரட்டும் கிராமங்கள்; மாறட்டும் பா.ம.க.!

பா.ம.க.வின் மாற்று அபிவிருத்தித் திட்டம் மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்கும் விதமாக அமைந்திருக்கிறது. காந்தி அடிகள், ஜெயபிரகாஷ் நாராயண் ஆகியோர் வகுத்த வழியில் கிராமப் பகுதிகளின் தன்னிறைவு நோக்கி வரையப்பட்டிருக்கிறது- இந்த மாற்றுத் திட்டம்.

தற்போதைய அரசுகள், சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவுவதில் குறியாக இருக்கின்றன. ராமதாஸ் தலைமையில் பா.ம.க. வகுத்துள்ள மாற்றுத் திட்டமோ, சிறப்பு விவசாய - பொருளாதார மண்டலங்களை அமைக்க முற்படுகிறது. இந்த மண்டலங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த விவசாய முறைகளைக் கற்றுத்தர முற்படுகிறது. ஆரம்ப நிலை, உயர் நிலை, மேல் நிலை என விவசாயத்தின் மூன்று பிரிவுகளிலும் சீர்திருத்தங்களையும் வளர்ச்சியையும் புகுத்தி, அவற்றை இயல்பாக இணைக்கும் உயர்நோக்கையும் உள்ளடக்கியிருக்கிறது. உதாரணமாக, ஒரு விவசாயிக்குச் சாகுபடி முறைகள் தெரிந்தால் போதாது. விளைந்ததை நல்ல விதமாகக் காசாக்கத் தெரிய வேண்டும்; விவசாயத்துக்கும் வியாபாரத்துக்கும் அவசியமான அடிப்படை வசதிகளை நிறுவவும் பெருக்கவும் அரசாங்கத்தைச் சார்ந்திராமல், சுயமாக முயற்சி செய்யும் அறிவும் ஆற்றலும் வேண்டும். இவை அனைத்தையும் செய்வதற்குக் கடன் வசதியும் முக்கியமாக வேண்டும்.

தற்போதைய அரசாங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் வசதியை மட்டும் அள்ளித் தந்துவிட்டு, அவர்கள் அதைத்





திருப்பிச் செலுத்த வேண்டாம் என்கிற சலுகையையும் தந்துவிடுகின்றன. திட்ட மிடலுக்கோ விவசாயக் களப்பணிக்கோ அரசின் ஆதரவும் வழிகாட்டலும் அரவணைப்பும் இருப்பதே இல்லை. ராமதாஸ் வரைந்துள்ள திட்டம் இந்தக் குறைகளைத் தீர்க்கும் விதமாக அமைந்திருக்கிறது. களப்பணியில் ஆதரவு தருவதுடன், உணவு பதனிடல், பால் பண்ணை அமைத்தல், மண்வள மேம்பாடு, மழை நீர் அறுவடை போன்ற விஞ்ஞானபூர்வமான முன்னேற்றங்களை விவசாயிகளுக்குக் கற்பிக்கவும் அவர்களை வழி நடத்தவும் முற்படு கிறது. விவசாயத் தேவைக்கான மின்சார உற்பத்திக்கும் வினியோகத்துக்கும் கூட உள்ளூரி லேயே வகை செய்யும் புரட்சிகரமான சிந்தனையை உள்ளடக்கியிருக்கிறது. தொழில் முனை வோர் பயிற்சி மையங்களையும் விவசாயத் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களையும் பரவ லாக நிறுவி, கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சிதர விழைகிறது.

''நகரங்களை நோக்கி கிராம மக்கள் இடம்பெயர்ந்து சென்று அவதிக்குள்ளாகும் போக்குக்கு இந்தத் திட்டத்தின் மூலம் முற்றுப்புள்ளி வைக்க முடியும்'' என்று டாக்டர் ராமதாஸ் நம்பிக்கை தெரிவிப்பதை ஏற்க முடிகிறது. எழுத்தில் இன்று உள்ள திட்டம், முழு மனத்துடன் செயல் வடிவம் தரப்படுமானால், தமிழக கிராமப் பொருளாதாரம் மறுமலர்ச்சி யுறும்.

இத் திட்டத்தினை முன் வைத்ததன் மூலம், கூட்டணி கட்சி என்கிற முறையில் தமிழக அரசின் சிந்தனையைத் தூண்டியிருக்கிறார் பா.ம.க. தலைவர்.

அது மட்டுமல்ல, தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் தகுதி வாய்ந்த கட்சியாக பா.ம.க.வை முன்னிறுத்தியிருக்கிறார்.

ஆனால், கிராம வளர்ச்சித் திட்டத்துக்கு காந்திய சிந்தனைகளை ஏற்கும் பா.ம.க. தலைவர், விடுதலைப்புலிகள் ஆதரவு, ஜாதி அரசியல் போன்ற சில முரணான சித்தாந்தங் களை விடாமல் கைகொண்டிருப்பதுதான் ஏற்கத்தக்கதாக இல்லை. ராமதாஸின் கிராமப்புற அபிவிருத்தித் திட்டம் தமிழகத்துக்கு எவ்வளவுக்கெவ்வளவு நன்மை செய்யுமோ, அவ் வளவுக்கவ்வளவு அவரது முரணான கொள்கைகள் தீமை விளைவிக்கும் என்பதை அவர் சிந்தித்துணர்ந்து மாற்றிக்கொள்வது அவசியம். ●



தூவானம்

காதல்தான் கதைக்களம். அமெரிக்க ரிட்டர்ன் நாயகியைக் காதலித்துத் தோற்று, விரக்தியில் அவளைப் பழி வாங்கத் துடிக்கும் ஹீரோவின் எண்ணம் தான் தூவானமாக வெளிப்பட்டுள்ளது.

படத்தின் ஆரம்பத்தில் அடுத்தடுத்து வரும் காட்சிகளின் வசனத்திலும், காட்சியமைப்பிலும் சுவாரஸ்யம் இருக்கிறது. கோபமாய்ப் போகும் கதாநாயகியிடம் கடமையாய் வணக்கம் சொல்லும் ஹோட்டல் பேரர், பர்மாபஜாரில் மொபைல் விற்கும் நண்பர்கள், உற்சாகமாக நடனமாடும் பிச்சைக்காரன் என ரசிக்க வைக்கும் விஷயங்கள் படத்தில் ஆங்காங்கே கண்சிமிட்டுகின்றன.

படம் முழுக்கப் புதுமுகங்களின் வரவு நம்பிக்கையைத் தருகிறது. அசடு வழியும்போதும் காதலில் தவிக்கும்போதும் சிரித்துக்கொண்டே வில்லத்தனம் செய்யும்போதும் புதுமுகம் ஆதித்யா மிளிர்கிறார். நாயகி நேத்ராவும் சோடை போகாத ரகம்.

இளைஞர்களுக்கான கதை என்பதற்காக ஆபாசமும் இரட்டை அர்த்த வசனங்களும் இல்லாமல் இருப்பது ஆறுதல்.

பாடல்களின் காட்சியமைப்பில் சேர்த்திருக்கிற சின்னச் சின்ன விஷயங்களில் புதுமை இருக்கிறது. 'ஏதேதோ மாற்றம்' பாடல் கிராபிக்ஸ் கவிதை. சில இடங்களில் பின்னணி இசை காட்சியோடு இழைகிறது. மது அம்பாட்டின் ஒளிப்பதிவு மார்கழி மாதத்துப் பனிச் சாரல்.

இத்தனை இருந்தும் படத்தோடு ஒன்ற முடியாமல் செய்துவிடுகிறது திரைக்கதை. இயல்பான வசனங்களைத் தந்த இயக்குனர்கள் ஹரிசரண் - நியூட்டன் திரைக்கதையில் கோட்டை விட்டுவிட்டனர்.

லாஜிக் கோளாறு வரக்கூடாது என்ற கவனத்தில் வைக்கப்பட்டுள்ள நீளக் காட்சிகளில் செயற்கைத்தனம் தூக்கலாக இருக்கிறது. இதனாலேயே படத்தின் ஆரம்ப ஜோர் பின் பாதியில் காணாமல் போய்விடுகிறது. அட்டகாசமாய் அறிமுகமாகும் பானுசந்தர், படத்துக்கு எந்த முக்கியத்துவமும் சேர்க்காமல் வந்து போகிறார்.

முக்கியமாய் படத்தில் நிறைய குழப்பங்கள். கதாநாயகியைப் பழிவாங்கும் அளவுக்கு என்ன நடந்தது, கதாநாயகனின் பழிவாங்கும் எண்ணம் தெரிந்தும் அவனுடன் பயணிக்கும் கதாநாயகி, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவனைக் கொல்ல வேண்டும் என்கிற எண்ணத்தில் இருக்கிறாள். ஆனால் ஏதோ நடக்கப் போகிறது என்று நினைத்தால், அடுத்த காட்சியிலேயே அவனை உண்மையாகக் காதலிப்பதாக உருகுகிறாள். இதை எல்லாம்விட பெரிய குழப்பம், கடைசி காட்சியில் வரும் ஸ்ரீமன். அவர் யார், எப்போது கதைக்குள் வந்தார் என்பதெல்லாம் படத்தின் புரியாத புதிர்கள்.

– **ஜானு**

55 வயதில்

சென்னை வடபழனி ஆகாஷ் மருத்துவமனை. அறை எண் 304 திடீர் வி.ஐ.பி. அந்தஸ்து பெற்றிருக்கிறது. கேமரா ஃபிளாஷ்களுக்கு மத்தியிலும், வாழ்த்தி வந்த பூங்கொத்துகளுக்கு நடுவிலும் குட்டிப் பூக்களாய் சிரிக்கின்றனர் ரிஷிகேஷும், ஆகாஷும்.

பிறக்கும்போதே அனைவருடைய ஆச்சரியத்தையும், கவனத்தையும் பெற்றுள்ள இந்த இரட்டைக் குழந்தைகளின் தாய் பிருந்தாவுக்கு ஐம்பத்தைந்து வயது!



* இரட்டைக் குழந்தைகளுடன் பிருந்தா...

இந்தியாவில் முதன்முறையாக அதிக வயதில் இரட்டைக் குழந்தைகள் பெற்றிருப்பதனாலேயே அனைவருடைய கவனமும் இவர்மேல் குவிந்திருக்கிறது.

''எனக்கும், என் கணவர் அழகேசனுக்கும் 1979-ல் திருமணம் நடந்தது. நான் பிறந்தது, வளர்ந்தது எல்லாமே சென்னைல தான். அவருக்கு கர்நாடக மாநிலம் பத்ராவதிங்கற ஊர்ல வேலை. நானும் அங்க இந்தியன் ஓவர்சீஸ் வங்கில வேலை பார்த்தேன். குழந்தைகள் இல்லைங்கற வருத்தம் தோணும்போது என்னுடைய கணவர் எப்போதும் எனக்கு ஆறுதலா இருந்தார். ஒரு நாள் டி.வி.யில் நவீன கருவாக்கம் பற்றின விளம்பரம் வந்தது. நாம் ஏன் இதை முயற்சி செய்யக் கூடாதுன்னு தோணுச்சு. என் கணவரிடம் சொன்னபோது சந்தோஷமாகச் சம்மதித்தார்.

சென்ற வருடம் ஆகாஷ் மருத்துவமனை டாக்டர்கள் திருமதி ஜெயராணி காமராஜையும், திரு.காமராஜையும் சென்னையில் சந்தித்தபோது, என் உடல் நிலையைச் சோதனை செய்து, நம்பிக்கையும், தைரியமும் தந்தார்கள்'' என்கிறார்.

பிருந்தாவுக்கு இக்சி என்கிற நவீன கருவாக்க சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 45 வயதிலேயே இவருக்குக் கருமுட்டை உற்பத்தி நின்றுபோனதால் கருமுட்டையைத் தானம் பெற்று, அதில் கணவர் அழகேசனின் ஓர் உயிரணுவைச் செலுத்தி கரு உருவாக்கப்பட்டுள்ளது. முதிர்ச்சி காரணமாகத் தடித்திருந்த கருப்பையின் மேல்புறச் சுவரை லேசர் சிகிச்சையின் மூலம் மெலியச் செய்து, அது வழியாகக் கருவை உள்ளே செலுத்தியுள்ளனர்.

''கர்ப்ப காலத்தில் மருத்துவர்களின் ஆலோசனைப்படி 'பெட் ரெஸ்ட்'டில் இருந்தேன். பத்து மாதங்களும் சென்னையில் தங்கினேன். எனக்குக் கடவுள் கொடுத்த வரம் என் குடும்பங்கள். குழந்தைப் பேறு சிகிச்சை முறை பற்றி இரு பக்க உறவினர்களிடம் கூறிய போது எங்களைவிட அதிக சந்தோஷமும், உற்சாகமும் அடைந்தனர். யாரிடமும் மறுப்போ, சின்ன முணுமுணுப்போ,

குழந்தை தேவையா?

முகச் சுளிப்போ இல்லை. அவர்களுடைய நம்பிக்கை வார்த்தை என்னை மேலும் தைரியமாக்கியது.

குழந்தை இல்லாதபோது தத்தெடுத்திருந்திருக்கலாம் என்று யோசித்ததில்லை. எங்களுக்கென்று குழந்தைகள் பிறக்கும் என்ற நம்பிக்கை அப்போதே என் மனத்தில் இருந்தது'' என்ற பிருந்தாவிடம்,

'குழந்தைகள் வளரும்போது உங்களுக்கும் அவர்களுக்கும் வயது வித்தியாசம் அதிகம் இருக்குமே' என்றால், ''அதனாலென்ன? எங்களுக்கு மனத் தைரியமும், உடல் உறுதியும், அவர்களை நல்ல பொறுப்பான குழந்தைகளாக வளர்க்கத் தேவையான அன்பும் பொறுமையும், அதிகம் இருக்கிறது'' என்கிறார்.



* டாக்டர் ஜெயராணி

'சரி, முதலில் 55 வயதுக்கு மேல் குழந்தை தேவைதானா?' என்று கேட்டால், ''நிச்சயம் வேண்டும். நம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கும் ஓர் அபூர்வம் எப்போது நிகழ்ந்தால் என்ன? நிகழ வேண்டும். அதுதான் முக்கியம்'' என்று மகிழ்ச்சி பொங்கச் சொல்லும் பிருந்தா, இரு குழந்தைகளில் ஒன்றுக்கு 'ஆகாஷ்' என்று பெயரிட்டிருக்கிறார். நன்றிக் கடன்!

– ஜா.தீபா

படம் : பொள்ளாச்சி சுந்தரம்

இரு தேநீர் கோப்பைகள்... ...ஒரு



இந்தச் சாதாரண வாழ்வின் மத்தியில், காதல்தான்
அவ்வப்போது சில தேவதைக் கதைகளைச் சொல்கிறது.

- யாரோ

எல்லோரும் பி.எஸ்.எஸ். என்று தான் கூப்பிடுவார்கள் போல. பி.ஷரோண் சிறுமலர் என்பதை அலுவலகங்களில் அப்படிச் சுருக்கமாகக் கூப்பிடுவது புதிது இல்லை.

நான் 'மலர்' என்று கூப்பிட்டேன். அப்படிக் கூப்பிட்டது

முயல் குட்டி!

காதல் பொன்மொழிக் கதை-8

அவளுக்குப் பிடித்திருக்க வேண்டும். கையிலிருந்த பேனாவை மேஜையில் வைத்தபோது அது உருண்டு விழுந்ததைக் கூடப் பொருட்படுத்தவில்லை. நாற்காலியில் இருந்து எழுந்திருந்து என்னுடைய மேஜைக்கு வரும் வரை மலரிடம் அந்தச் சிரிப்பு அப்படியே இருந்தது.

நீல ஈறுகள் தெரிய ஆண்டு விழா மேடையில் பரிசு வாங்குவதற்கு வருகிற ஒரு பள்ளிக்கூடத்துச் சிறுமியின் சிரிப்பு. கொஞ்சம் வெட்கம், நிறைய சந்தோஷம். உரிய இடத்துக்கு வருவதற்கு முன்பே பரிசு வாங்க நீள்கிற கைகளின் பரபரப்பு அந்த முகத்தில் இருந்தது.

''சொல்லுங்கள் ஸார்'' என்றாள்.

அன்றைக்கு அதிகம் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், இந்த இருபத்தேழு வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் இந்த அலுவலகத்துக்கு வந்து, எங்கெங்கோ போய்விட்டு என்னைப்போல இங்கே ஏற்கெனவே வந்திருக்கிற சிறுமலரிடம் சொல்வதற்கு நிறையவே இருக்கிறது.

''ஒரு சுற்றுச் சுற்றி முடிச்சாச்சா?'' மலர் அணிந்திருந்த கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டாள். முன்பைவிட நேருக்கு நேர் பார்க்கிற கண்கள் இரண்டு பேருக்குமே வந்திருந்தன. அதே சிரிப்பு. அதே நீல ஈறு. மேல்பக்கத்தில் முதல் கடைவாய்ப் பல்லை எடுத்தாயிற்று போல. சிரிப்பு அந்த இடைவெளியில் விழுந்துகொண்டு இருந்தது அப்புறம் போக முடியாமல்.

''ஒரு பெரிய வட்டம்'' நான் என் கையில் இருந்த பென்சிலால் காற்றில் ஒரு வட்டம் வரைந்தேன். மலர் உள்ளங்கையில் விரலால் ஒலிம்பிக் வட்டங்கள் போல வரைந்து, ''எனக்குச் சின்னச் சின்ன வட்டங்கள்'' என்று சிரித்தாள். ''இந்த மாவட்டத்தைத் தாண்டலை நான். குண்டு சட்டிக்குள்ளேயே குதிரை. எனக்குச் சேர்த்து அவர் ஊர்ஊராகச் சுத்திக்கிட்டு இருக்கிறார். இப்போ சென்னிமலை.''

நான் ஜெயராஜை நினைத்தேன். மலரின் இந்தச் சிரிப்பை அவர் நின்று நிதானித்துப் பார்த்திருப்பாரா? அந்தக் கடைவாய்ப் பல் ஒட்டையைப் பற்றி அவருக்கு என்ன தோன்றியிருக்கும்? ஏன் இப்படிக் கால் தரிக்காமல் சதா ஓடிக் கொண்டிருக்கிறார்? நானும் இதே கிளைக்கு வந்திருக்கிறேன் என்ற தகவலை எப்படி எடுத்துக்கொள்ள முடியும் அவரால்? நிறைய கேள்விகளுடன் மலரையே பார்த்துக் கொண்டிருந்தேன். மலர் சாயமிடுவது இல்லை என்று காதுப் பக்க நரை சொல்கிறது. ''நீங்கள் அனுப்பிய அந்த வாழ்த்து அட்டையைப் பத்திரமாக வைத்திருக்கிறேன்'' மலர் சொல்லும்போது அவர் விரல்கள் மேஜையில் இருந்த கணினியைத் தட்டிக்கொண்டிருந்தன. திரை முழுவதும் அந்தப் படம் நிரம்பியது.

அந்த நீக்ரோ பெண் படுத்திருக்கிறார். கிட்டத்தட்ட மேல் உடம்பு திறந்திருக்கிறது - இடக் கையைக் கன்னத்தில் ஊன்றித் தாங்கியிருக்க, அப்படியொரு சிரிப்பு முகத்தில். வலக் கையின் அணைப்புக்குள் மார்போடு அந்த வெள்ளைக் குழந்தை கண் இடுக்கியபடி. இடுப்பு வளைவின் பள்ளத்தில் முதுகோடு ஒட்டி உறங்குவதுபோல இன்னொரு வெள்ளைக் குழந்தை. 'சில விஷயங்கள் எப்போதுமே எனக்கு அருமையானவை' என்று ஒரு வாசகம் அந்தப் படத்தின்மேல் நகர்ந்துகொண்டே இருந்தது.

நான் அந்த வாழ்த்து அட்டையை அனுப்பும்போது ஒரு வரி எழுதியிருந்தேன்- 'மலர், உங்களை எங்கே அந்த ஆக்லேண்ட் புகைப்படக்காரரால் பார்க்க

வண்ணதாசன்

முடிந்தது?' என்று. அப்படித்தான் எனக்குத் தோன்றியது. அந்தச் சமயத்தில் மலருக்கு இரட்டைக் குழந்தைகள் வேறு பிறந்திருந் தன. மிகப் பொருத்தமான அட்டையை அனுப்பிவிட்ட சந்தோஷம் எனக்கு.

''ஜெயராஜால் அதை வெறும் வாழ்த்து அட்டையாக மட்டும் பார்க்க முடிய வில்லை'' என்று மலர் அழுதுகொண்டே பேசும்போது, எனக்கு எதிரே இரண்டு மூன்று வாடிக்கையாளர்கள். எங்கோ இருந்துகொண்டு தொலைபேசியில் அழுகிற குரலை ஒதுக்கவும் முடிய வில்லை. ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு மேல் தொடர்ந்து கேட்டுக்கொண்டே வேலை செய்யவும் இயலவில்லை.

''சாயந்திரம் பேசுகிறேன் மலர்'' என்றேன்.

''அந்தச் சாயந்திரம் வரவே வராது'' என்று மறுபக்கத்தில் குரல் அறுந்தது.

நாம் பகிர்ந்து கொள்கிறோம்
நாம் இணைந்திருக்கிறோம்
எப்போதும் முடியுமா?'

ஒரு பேனாவால் எழுதப்பட்டவை போன்ற இந்த அச்சு வரிகளின் கீழ் எந்தக் கையெழுத்துமில்லை. ஆனால், ஒரு நீல ஈறு தெரிகிற சிரிப்புத் தெரிந்தது எனக்கு.

''என்னிடமும் அந்தப் பீங்கான் கோப் பைகள் இருக்கின்றன'' - இதை மலரிடம் சொல்லும்போது கணகணவென்று குரல் எரிந்தது. முட்செடிகளில் மாட்டிக் கொண்டிருக்கும் பாலித்தீன் பைகள் வெயிலில் மினுமினுத்து உப்பி அசைவது போலிருந்தது. அலுவலகத்தின் எதிர்ச் சுவரில் ஒரு குழல் விளக்கு அணைந்து அணைந்து எரிந்தது. சம்பந்தமே இல்லா மல் இடக்கை விரல்களை விறைப்பாக நீட்டி, சரியாகப் பொருந்தியிருந்த மோதி ரத்தை ஒரு தடவை முழுவட்டமாகச் சுழற்றி நிமிர்த்தினேன். 'சுகுணாவி டம் இருக்கிறது அது'' என்றேன்.

அந்த முயல் குட்டிபோல குதித்துக் குதித்து எங்கோ போய்க்கொண்டிருப்பது மலரின்

அதற்கப்புறம் மலர் பேசவில்லை. நான் பேசினால்கூட, தவிர்ப்பது போலத்தானி ருந்தது. வெவ்வேறு இரண்டு வருடங் களில் கையெழுத்து எதுவும் இடாத வாழ்த்து அட்டைகள் வந்தன. அநேகமாக அவற்றை மலர்தான் அனுப்பியிருக்க வேண்டும்.

நல்ல வாழ்த்து அட்டைகளைச் சேகரிக் கிற என்னுடைய மகளிடம் அந்த இரண்டா வது வாழ்த்து அட்டை ரொம்ப காலம் இருந்தது.

முகப்புப் பக்கத்தில் தனித்தனியாக இரண்டு பீங்கான் தேநீர்க் கோப்பைகள். வழுவழுப்பான முட்டை வெள்ளை நிறத்தில். உட்பக்கத்தில் அதே பீங்கான் கோப்பைகள் ஒன்றுக்குள் ஒன்றாக. சற்றுச் சரிந்து சாய்வாக.

'நாம் அடிக்கடி பேசுகிறோம்
எப்போதும் பேச முடியுமா
நாம் அடிக்கடி கனவு காண்கிறோம்
எப்போதும் காண முடியுமா

''சுகுணாவுக்குக் கல்யாணம் ஆகிவிட்ட தல்லவா?'' மலர் கேட்கும்போது ''பேத்தி இருக்கிறாள்'' என்று சொன்னேன். என் மகளின் திருமணப் பத்திரிகை கிடைத்ததா என்று கேட்கவில்லை. மிகச் சரியான முகவரிகளுடன் அலுவலகத்துக்கும் வீட்டுக்கும் இரண்டு அனுப்பி வைத்தி ருந்தேன். கிடைத்திருக்காமல் போகாது.

''முருகேச பாண்டியன் கல்யாணத்துக் குக் குடும்பத்தோடு வந்திருந்தீங்க. சுகுணாவுக்கு உங்க ஜாடை. முகத்தைப் பொத்திக்கிட்டுக் கண்ணை மாத்திரம் காட்டினாலே அடையாளம் தெரிஞ்சுடும்.''

''சுகுணாவுக்குக் கண்ணுன்னா உங்க பசங்களுக்குச் சிரிப்பு.''

''என் சிரிப்பை நீங்கதான் மெச்சிக் கிடணும்''-மலர் இப்போது கண்ணாடியை அணிந்துகொண்டார். சிரித்தார். ''ரெண்டு பேரிலே சின்னவன் பல் டாக்டருக்குப் படிக்கிறான். இந்த வருஷம் முடியுது.''

''யாரு பெரியசாமி வீட்டில் முயல்

குட்டி பிடிச்சானே அவனா?'' என் குரல் சற்று அதிகமாகியிருக்க வேண்டும். சந்தோஷம் சில காரியங்களைச் செய்கிறது.

பக்கத்துத் தடுப்பிலிருந்த பெண் எங்களை ஏறிட்டுப் பார்த்துவிட்டுச் சிரித்தது. மலர் அந்தப் பெண்ணைப் பார்த்து,

''ஒண்ணுமில்லை லல்லி. ஆட்டோகிராஃப்'' என்று இரண்டு கைகளால் அந்தரத்தில் திரைப்படக் கட்டம் கட்டிப் பதிலுக்கு சிரித்தார்.

பெரியசாமியின் மனைவி இறந்த தினம் அது. ஒரு சனிக்கிழமை. அலுவலகத்துக்குச் சனிக்கிழமைகளில் குழந்தைகளை அழைத்து வருகிற பெண் ஊழியர்களை யாராவது தடுத்திருக்கிறார்களா? மேலும்,



அலுப்பூட்டும் லெட்ஜர்களையும், ஃபைல்களையும், டைப்ரைட்டிங் மிஷின்களையும்விட ஒரு குட்டிப் பெண்ணோ பையனோ நடமாடுகிறபோது நமக்கும் இதமாகத்தானே இருக்கும்.

துக்கம் விசாரிப்பதற்காக அலுவலகத்திலிருந்து எல்லோரும் ஒரு வேன் அமர்த்திப் போயிருந்தோம். பத்து, இருபது கிலோமீட்டர் உள்ளடங்கின கிராமம் அது. செங்கல் சூளை, வாழைத்தோப்பு, நாவல் மரம், மருதமரம் எல்லாம் தாண்டி வீடு இருந்தது.

காலையில்தான் எல்லாம் முடிந்திருக்க வேண்டும். திண்ணையில் மர பெஞ்சுகளில் உட்கார்ந்திருந்தவர்கள் எங்களைப் பார்த்ததும் எழுந்திருந்து வேப்ப மரத்தடிப் பக்கமாகப் போய் நின்று கொண்டார்கள்.

பெரியசாமி வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தார். முகம் மிகவும் நொறுங்கிப் போயிருந்தது. யாரையும் ஏறிட்டுப் பார்க்கவில்லை. ஒரு சிவப்புக் குற்றாலத்துத் துண்டால் வாயைப் பொத்திக்கொண்டு அவர் அழுததைப் பார்க்கத் தாங்க முடியவில்லை. நான் எழுந்துபோய் அவரைத் தாங்கலாகக் கூட்டி வந்துகொண்டிருக்கிறேன்.

அந்த வெள்ளை முயல் குதித்துக் குதித்து வெளியே வந்தது அப்போதுதான். இரும்பு வாளிகள், தண்ணீர்க் கொப்பரைகள் பக்கமாக முதலில் அது போய் நின்றது. மறுபடியும் குதிக்கிறது. இப்போது இரட்டை மயில் வரையப்பட்ட பீரோவின் அருகில் சற்றுநேரம்.

''இதை யாராவது பிடிச்சுக்கிட்டுப் போங்க தாயி'' என்று தண்ணீர் பெருகிக் கிடந்த தளச்செங்கல்லைப் பார்த்துக்கொண்டே, நரைத்த மீசை ஒதுங்க ஒருவர் உள்ளே பார்த்துச் சத்தம் கொடுக்கிறார். காந்தி படம் போட்ட கதர்க்கடை ஸ்க்ரீன்

சிரிப்பாகத்தான் இருக்கும்!

துணி விலகி மறுபடி மூடிக்கொள்கிறது.

மலரின் மடியில் உட்கார்ந்திருந்த பையன் எழுந்திருக்கிறான். அந்த முயல் குட்டி பக்கமாக ஓடும்போது மலர் மீண்டும் மீண்டும் கூப்பிடும் குரலில் ஒரு நெருக்கடியான வெட்கமிருந்தது. அது எல்லாம் சின்னப் பையன் காதில் விழுமா? குதித்துக் குதித்துப் போக்குக் காட்டியபடி முயல் நகர்கிற இடத்துக்கெல்லாம் அவனும் போகிறான். தன்னிடம் வந்துவிடும்படி மீண்டும் கூப்பிடும்போது, எல்லோர் முகத்திலும் ஒரு சிரிப்பு கிட்டத்தட்ட தெரிந்தது. பக்கவாட்டில்தான் வைக்கோல் படப்பு. முயல் அங்கே போகும்போது, பின்வாசல் வழியாக வந்த யாரோ அதைப் பிடித்துக் கொண்டுபோவது சேலை விசிறலில் தெரிந்தது.

''ஆமாம். அவனேதான். இப்போ ஆறடி இருப்பான்''- மலர் என் தோளையோ, தலையையோ பார்த்து



"அதோ போறாரே... அவர் எதையும் மனசுல வெச்சுக்க மாட்டார்..."

"அவ்வளவு பெருந் தன்மைக்காரரா அவர்?"

"அவ்வளவு ஞாபக மறதிக் காரர்..."

- கே.ஆனந்தன்

உயரம் சொல்வது போல அவருடைய பார்வை உயரத்தில் நகர்ந்தது.

"சுந்தரமும் நல்ல வளர்த்திதான்" என் பையனைப் பற்றிச் சொல்லி முடிப்பதற்குள் "இந்தக் காலத்துப் பசங்களே அப்படித்தான். சின்னவங்க ரெண்டுபேரும் பத்துதான் படிக்கிறாங்க. இப்பவே என் தோளுக்கு இருக்கிறாங்க"- மலர் கணினிப் பக்கம் திரும்பி விரலால் தட்டினார். மறுபடியும் அந்த நீக்ரோ பெண். கைக்குள் ஒன்று, இடுப்பில் ஒன்றாகத் தூங்குகிற குழந்தைகள். அந்தப் பெண்ணின் சிரிப்பு. 'சில விஷயங்கள் எப்போதும் எனக்கு அருமையானவை' என்று நகரும் வரி.

மலருக்கு மறுபடியும் இரட்டைப் பிள்ளைகள்தான். இரண்டுமே பையன்கள்தான். எனக்கு எல்லோரையும் பார்க்க வேண்டும்போல இருந்தது. பல் டாக்டருக்குப் படிக்கிற மலரின் மகனுக்கு அந்த முயல்குட்டி ஞாபகம் இருக்குமா? என் முகம் யாருக்காவது அடையாளம் தெரியுமா? கடைசி இரண்டு பையன்களையும் நான் பார்த்ததே இல்லை. அவர்களுடைய உலகம் வாழ்த்து அட்டைகளாக இராது. வீடியோ விளையாட்டுக்களாக இருக்கும். எஸ்.எம்.எஸ். உரையாடல்களாக இருக்கும். அல்லது இ-மெயில்களாக, பாடல்களாக இருந்தால் நல்லது. எவ்வளவோ நல்ல தகடுகள் வந்துவிட்டன.

"மலர், ஞாயிற்றுக்கிழமை வீட்டிலதானே இருப்பீங்க?"-என்னுடைய கேள்வியின்போது ஒவ்வொன்றாகக் கணினியிலிருந்து மலர் வெளியே வந்து கொண்டிருந்தார். 'ஆமாம்' என்பதுபோல அவரிடம் ஒரு தலையசைப்பு மட்டும் இருந்தது.

"உங்க பையன்கள் எல்லோரும் இருப்பாங்க இல்லியா?" மலர் இழுப்பறையை ஒழுங்கு செய்தார். நாற்காலியை உந்திப் பின்னுக்குத் தள்ளினார். சற்று வலப்பக்கமாகச் சுழன்று சில காகிதங்களை அடுக்கினார். சாப்பாட்டுப் பாத்திரத்தைப் பையில் வைத்துக் கொண்டே "லலிதா போயிடுச்சா?" என்று பக்கத்துத் தடுப்பைப் பார்த்தார்.

பதிலை எதிர்பார்ப்பதுபோல நின்றுகொண்டிருந்த என்னிடம் பெரியவங்க ரெண்டுபேரும் இருப்பாங்களான்னு தெரியலை" என்றார். பார்வை என் முகத்தைப் பார்க்காத கோணத்தில் இருந்தது.

"கடைசிப் பையங்க இருப்பாங்க இல்லையா? அவங்களை நான் பார்க்கிறதுக்கு வரலாம்னு நினைக்கேன்"- நான் இதைச் சொல்லும் சமயம் அந்த வெள்ளைவெளேர் என்கிற இரண்டு பீங்கான் கோப்பைகளும் மனதில் தெரிந்தன.

பையை எடுத்துக்கொண்டு புறப்படுவது போன்ற அவசரத்துடன் மலர் இருந்தார். தேன் நிறத் தண்ணீர் பாட்டிலை எடுத்துத் தண்ணீர் குடித்தார். ஒரு நாடா போலத் தொய்ந்து தொங்குகிற பட்டையுடன் தோள் பையைத் தன் இரண்டு கைகளுக்குள் வைத்திருந்த மலர், கும்பிடுவதுபோல உயர்த்தி வாயோடு புதைத்துக் கொண்டு சொன்னார்.

"தயவுசெஞ்சு வீட்டுக்கு வந்திராதீங்க. அவருக்குப் பிடிக்காது." கசங்கி மடங்கிய அந்தக் கருப்புப் பைக்குள்ளிலிருந்து உருவிப் போடுவது போல மலரின் குரல் அமுங்கி அமுங்கி என்முன் விழுந்தது.

"என்னைத் தப்பா நினைச்சுக்கிடாதீங்க"- இதைச் சொல்லும்போது கசிந்த கண்ணீரைத் தேய்த்துக் கொள்ள, மலரின் முகம் தோளின்மீது புரண்டது.

அந்த முயல் குட்டிபோல குதித்துக் குதித்து எங்கோ போய்க் கொண்டிருப்பது மலரின் சிரிப்பாகத்தான் இருக்கும். ●

கறவை நின்றுபோன பசுக்களை பாதுகாத்து பராமரிக்கும் பசுமடத்தில் (மாட்டு தொழுவத்தில்)

மஹாளய அமாவாசை அன்று (10-10-2007) நடைபெறும்

பித்ரு தர்ப்பண பூஜையில் அனைவரும் கலந்து கொண்டு பித்ரு தேவதைகளின் ஆசிர்வாதத்தை பெற்று அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்

பித்ரு பூஜை செய்பவர்களுக்கு முன்னோர்களுடைய பரிபூரண ஆசியும் ஆதரவும் நிச்சயம் உண்டு


- முன்னோர்களுக்கு உணவு அளிக்க விரும்பினால் பசுவிற்கு கொடுத்தால் போதும்; அது நம் முன்னோர்களை சென்று அடையும்
- கோதானத்திற்கு மிஞ்சி ஒரு புண்ணியமும் இல்லை. பரிகாரத்துக்கு அதுவே பெரிய மருந்து
- முப்பத்து முக்கோடி தேவர்களும், அனைத்து புண்ணிய தீர்த்தங்களும் உடலில் குடிகொண்டுள்ள பசுவிற்கு பூஜை செய்வதால் நடமாடும் தெய்வமாகிய கோமாதா நமக்கு வேண்டிய அனைத்து வரங்களையும் அளிப்பாள்.
- கோமாதாவிற்கு அகத்தி கீரை, அருகம் புல், கருப்பு எள் உருண்டை, வெல்லம், பொங்கல் போன்ற உணவு அளித்தால் மகாலட்சுமி நம் இல்லத்தில் என்றும் குடியிருப்பாள். எல்லா செல்வங்களையும் அளித்து, நிலை பெற செய்வாள்.
- அன்பர்கள் தங்களுடைய திருமண நாள், பண்டிகை நாட்கள் முன்னோர்களின் திதி நாட்கள், அன்பிற்குரியவரின் நினைவு நாள் என தங்களுக்கு உகந்த நாட்களின்போது கோதானம் செய்து, பசுக்களின் பராமரிப்பிற்கு நன்கொடை அளித்தால், ரிஷிகளின் ஆசி கிடைக்கும். மேலும் தேவர்கள் மகிழ்ச்சியால் மனம் குளிர்ந்து நம்மை வாழ்த்துவார்கள்.
- பசு மடத்தில் தினமும் நடைபெறும் கோபூஜையில் அன்பர்கள் நேரில் கலந்து கொண்டு கோமாதாவின் அருளை பெற வேண்டுகிறோம்.
- **கோமாதா ஒரு நடமாடும் கோயில். ஸர்வ தேவதைகளுக்குமான மஹத்தான கோயில்.**



பசு மடத்தில் உள்ள வயதான நோயுற்ற பசுக்களில் ஒரு பசுவை பராமரிக்க

ஒரு வாரத்திற்கு	ரூ.105.00	ஒரு வருடத்திற்கு	ரூ.5400.00
ஒரு மாதத்திற்கு	ரூ.465.00	கோதானம்	ரூ.9000.00

(பசுவும் கன்றும் தானமாக வழங்க)




பித்ருக்கள் நினைவாக வயது முதிர்ந்த, பால் வற்றிய, ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பசுமடத்தில் மற்றும் கிராமங்களில் பாதுகாக்க உங்கள் அன்புக்காணிக்கையை கனிவுடன் மனமுவந்து தாரீர்!

- ரூ. 500 - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஸ்ரீராமர் பாதம் அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 1000 - அனுப்பும் அன்பர்களுக்கு பசுவும், கன்றும் சேர்ந்த (கோமாதா) வெள்ளியிலான விக்ரகம் அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 2000 - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான துளசி மாடம் அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 3000 - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான தவழும் கண்ணன் அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 5400 - அனுப்பும் அன்பர்களுக்கு பசுவும் கன்றும் சேர்ந்த (கோமாதா) பித்தளையிலான பெரிய விக்ரகமும் அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 9000 - கோதானம் செய்யும் அன்பர்களுக்கு வெள்ளியிலான பெரிய ஐஸ்வர்ய பெருமாள் விளக்கு அனுப்பி வைக்கப்படும்.

பசுவை பாதுகாக்க மேற்கண்ட நன்கொடையை அனுப்பும் அன்பர்களுக்கு (மஹாளய அமாவாசை அன்று) முன்னோர் வழிபாடு முழுமையாக செய்து பிரசாதத்துடன் மேற்கண்ட பூஜிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் கோமாதா வண்ணப்படம் அனுப்பி வைக்கப்படும். பசுவை பாதுகாக்க ரூபாய் அனுப்பும்போது யாருக்கு திதி செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர் திதி மற்றும் கோத்திரம் போன்ற விவரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மஹாளய அமாவாசை அன்று முன்னோர்கள் நினைவாக கோதானம் செய்தால் பித்ரு தோஷம், புத்திர தோஷம், நாகதோஷம், ஆபிசார தோஷம், நவக்கிரஹ தோஷம், திருமண தடை மற்றும் அனைத்து தோஷங்களும் விலகி ஐஸ்வர்யம், ஆரோக்கியம் தங்களுக்கும், தங்களுடைய சந்ததியினருக்கும் கிடைக்கும்



நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.

தங்களால் இயன்ற அளவு நன்கொடையை Cheque / D. D/ M. O. மூலமாக Shri Ghosala Seva Trust, Chennai. என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

பசுமடம்

(Recognised by Animal Welfare Board of India)

வயதான பசுக்கள் பாதுகாப்பு இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (P. O), சென்னை - 600 077.

TEL: 044 - 3299 9888 Fax: 044 - 4206 6525



பித்ருக்களின் ஆசி பெற மஹாளய அமாவாசை நாளில் கோபூஜை செய்ய அன்புடன் அழைக்கிறோம்.

சுதா சேஷய்யன்

கல்யாண குணங்களில் உறைபவள்

ஸ்ரீ லலிதா - இரண்டாம் பாகம்

பவாரண்ய குடாரிகா!

ஆரண்யத்தைத் தனது கோடரியை வைத்துக்கொண்டு வெட்டக்கூடியவள் என்று இந்தத் திருநாமத்துக்குப் பொருள்.

பவமாகிற ஆராண்யம் அது! பவக் கடல் என்று சொல்வதுண்டு - நமது பிறவி என்னும் பெருங்கடலைக் குறிக்க. அதன் உள்ளே நாம் மாட்டிக் கொண்டோமானால் அப்புறம் தப்பிக்கவே முடியாது. அதுதான் ஸம்ஸார ஸாகரம்!

கடலுக்குள் மூழ்கியாயிற்று என்றால், அவ்வளவுதான்! கையைத் தூக்கி அப்படியும் இப்படியும் ஆட்டினாலும் தூக்கி விடுபவர்கள்கூட ரொம்ப யோசிப்பார்கள். அவர்களையும் பிடித்து இழுத்துவிட்டால் என்ன பண்ணுவது? தண்ணிக்குள்ளே யாரேனும் விழுந்துவிட்டால் அவரைத் தூக்குவது ரொம்பக் கடினம். அலை மோதுகிற அவருடைய கையானது எல்லோரையும் பிடித்து இழுத்துவிடவே முயற்சி செய்யும்.

அதே ஸம்ஸார ஸாகரத்தை பெரிய காடாக - பவ ஆரண்யமாக - புதர் மண்டிய காடாக வர்ணிக்கிறது இந்தத் திருநாமம். அதற்குள், என்ன வேண்டும், என்ன வேண்டாம் என்று பாகுபடுத்தி அறியாத அளவுக்கு இருட்டாக இருக்கிறது. அப்படிப்பட்ட பவ ஆரண்யத்திலே, கோடரியை (குடாரி) வைத்துக்கொண்டு வெட்டுகிற மாதிரி, வேண்டாதவற்றையெல்லாம் எடுத்துவிடக் கூடியவள் அம்பிகை. ஆகவே பவ ஆரண்ய குடாரிகா.

ஆறு அற்புத குணங்கள்

அப்படி இருக்கக் கூடியவளே **பக்த சௌபாக்ய தாயினி** என்கிறது இன்னொரு திருநாமம். பக்தர்களுக்கு எல்லா சௌபாக்கியங்களையும் தரக் கூடியவள்.

பின்னாலே இன்னொரு திருநாமம் வரும் - **பகவதி** என்று. பகவான் என்பதற்குப் பெண் பாலாக பகவதி. மலையாளத்தில் மிக அதிகமாகச் சொல்வதுண்டு இத் திருநாமத்தை.

பகவான் - பகவதி என்பதற்கு என்ன பொருள்?


வைஷ்ணவ சித்தாந்தத்திலே பகவானுடைய கல்யாண குணங்கள் என்று சொல்லுவார்கள்.

கல்யாணம் என்றால் பூரணம் என்று அர்த்தம். பூரணமாக (முழுமையாக - நிறைவாக) இருக்கக்கூடிய குணங்கள், பூர்ணத்துவத்தைக் காட்டக்கூடிய குணங்கள். அப்படிப்பட்ட குணங்களின் இருப்பிடமாக பகவான் இருக்கிறான் என்று சொல்லுவார்கள்.

என்னவெல்லாம் கல்யாண குணங்கள் என்று பார்த்தால்...

வாத்ஸல்யம் - தன்னுடைய பக்தர்களைக் குழந்தைகளாக நினைத்து, அந்தக் குழந்தைகளிடத்தில் வாத்ஸல்யத்தை - கனிந்த பிரியத்தைக் காட்டக்கூடிய தன்மை.

சௌலப்யம் என்று ஒன்று உண்டு - சௌலப்யம் என்றால் இறங்கி வருதல். தமிழில், 'எளிவந்த தன்மை' என்று சொல்வோம்.


வைத்தீஸ்வரன் கோயில்
ஸ்ரீ தையல்நாயகி
(பாலாம்பிகை)
2

எதிர்பார்ப்பில்லாத அன்பு, அம்பாளை வழிப



எங்கேயோ உயரத்தில் இருக்கக்கூடிய பகவான், இந்தப் பூவுலகில் இருக்கக்கூடிய பக்தர்களுக்கு உதவி செய்வதற்காக இறங்கி வருகிறாரே, அதுதான் சௌலப்யம். எத்தனை சந்தர்ப்பங்களில் அப்படி ஓடி வருகிறார்! அவரே வரவேண்டும் என்கிற அவசியமே இல்லை. 'தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய சம்பவாமி யுகே யுகே' என்றால், எதற்காக அவரே வந்து சம்பவிக்கிறார்? எல்லாம், இங்கே - இவ்வுலகில் - இருப்பவர்கள் சௌக்கியமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்!

ரொம்ப நியாயமாக ஒரு கேள்வி கேட்டோமென்றால், பகவான் பகவானுக்காகவா? அல்லது, பகவான் பக்தர்களுக்காகவா..? கடவுளாக இருப்பதால் கடவுளுக்கு எந்த லாபமும் கிடையாது! கடவுளால் பக்தர்களுக்குத் தான் லாபம்; நமக்குத்தான் லாபமேயொழிய கடவுளின் எந்த நடவடிக்கையும் அவருக்காக அல்ல. அதற்கு அவசியமும் கிடையாது. ஆனால், நமக்காக எத்தனை அவதாரங்கள்? எத்தனை கஷ்டங்கள்! அம்பாளும் நமக்காகத் தானே பண்டாஸுரனை அழிக்க வந்தாள்! அதற்காக என்னவெல்லாம் கஷ்டங்கள் பட்டாள்! இப்படி தெய்வமே கஷ்டங்களை அனுபவிக்கிறது என்றால் என்ன அர்த்தம்? பக்தர்களைக் காப்பாற்றுவதற்காக தெய்வம் அவ்வளவு தூரம் இறங்கி வருகிறது என்பதைத்தானே அது காட்டுகிறது!

யாராவது ஒரு பெரிய மனிதர் நம்மிடம் சாதாரணமாக வந்து பேசினாலே எவ்வளவு ஆச்சர்யப்படுகிறோம்? 'இவ்வளவு பெரிய மனிதர், எவ்வளவு எளிமையாக இருக்கார்?' என்று சொல்கிறோம். எல்லாவற்றுக்கும் அப்பார்ப்பட்டு இருக்கக்கூடிய தெய்வம், பக்தர்களுக்காக இரங்கியும் இறங்கியும் வரக்கூடிய தன்மைக்குத்தான் சௌலப்யம் என்று பெயர்.

வாத்ஸல்யம், சௌலப்யம். மூன்றாவது சௌசீல்யம். சௌசீல்யம் என்பதை எளிமைப்படுத்திச் சொன்னால் தோழமை என்று சொல்லலாம். ஒரு நண்பருடன் பழகுகிற மாதிரி பழகக்கூடிய தன்மை இருக்கிறதே, அந்தத் தன்மை படைத்தவராக இருக்கக்கூடியவன் பகவான்.

இந்த மூன்றோடு சேர்த்து இன்னும் சில உண்டு:

சக்தி - எல்லாவற்றையும் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடியவராக இருப்பவன் பகவான்.

தேஜஸ் - எல்லா ஒளிக்கும் மேலே, அப்பார்ப்பட்டதாக இருக்கக்கூடிய ஒளி இருக்கிறதே - அந்த ஒளியை உடையவராக இருக்கக்கூடியவர் பகவான்.

வீர்யம் - வீர்யம் என்றால் சண்டை போடக்கூடிய தன்மை மட்டும் அல்ல. எவ்வெப்போது யார் யாருக்கு என்ன தேவையோ, அதைப் பார்த்துப் பார்த்துச் செய்யக்கூடிய தன்மை. அனுக்ரஹம் பண்ண வேண்டுமென்றால் அனுக்கிரஹம் பண்ணி, ஒரு வேளை துஷ்டர்களாக இருந்தால் நிக்ரஹம் செய்து (தண்டித்து), எதை எப்படிப் பயன்படுத்த வேண்டுமோ அதைப் பயன்படுத்தக்கூடிய தன்மை இருக்கிறதே - அதற்கு வீர்யம் என்று பெயர்.

இந்தக் கல்யாண குணங்கள் ஆறும் உடையவன்தான் பகவான். பக என்ற சொல்லுக்கு 'ஆறு' என்று ஒரு பொருள் உண்டு. ஆறு கல்யாண குணங்களுக்கு நடுவே இருப்பதனாலே 'பகவான்' என்று ஒரு வியாக்யானம் உண்டு.

வேண்டும் என்கிற ஒரே நோக்கம் இருக்கிறதே, அதுதான் பக்தி!

பாக்கியம் தருபவள்

இந்தக் கல்யாண குணங்கள் என்பவை வைஷ்ணவ சம்பிரதாயத்தில் மட்டும் அல்ல... அம்பாளிடத்திலும் அவை உண்டு. எந்த தெய்வத் திருமேனியாக வேண்டுமென்றாலும் இருக்கட்டும், ஒரே பரமாத்மா ஒரே பரபிரம்மம்தானே அத்தனை வடிவங்களிலும் உள்ளுறைகிறது.

ஆகவே, இந்த ஆறு கல்யாண குணங்களையும் படைத்தவளாக இருக்கக்கூடிய அம்பாளுக்கு **பகவதி** என்கிற திருநாமம்.

பகவதியாக இருக்கக்கூடியவள் பாக்கியத்தைத் தருகிறாள். வீர்யத்தையே, துஷ்டர்களுக்குப் பிரயோகம் பண்ணுகிறபோது ஒரு மாதிரியும் சிஷ்டர்களுக்குப் பிரயோகம் பண்ணுகிறபோது வேறு மாதிரியும் பண்ணுகிறாள்.

துஷ்டர்களை அழிக்கக் கூடியவள்; சிஷ்டர்கள் எதைக் கேட்டாலும் தரக்கூடியவள். அதனால் பக்தர்களுக்கு பக்த சௌபாக்ய தாயினியாக இருக்கக் கூடியவள். கல்யாண குணங்களுக்கு நடுவிலே இருக்கக்கூடியவள்; அந்தக் கல்யாண குணங்களினால் கிடைக்கக்கூடிய பலன்களைத் தரக்கூடியவள் - என்பதைக் குறிப்பதுதான் **பக்த சௌபாக்யதாயினி** என்கிற திருநாமம்.

அதிலிருந்து தொடங்கி, பக்திக்கு அவள் எப்படியெல்லாம் ஆட்படுகிறாள் என்கிற நாமங்கள் அமைந்துள்ளன.

பக்தி என்னும் புதிர்

பக்தி பக்தி என்று சொல்கிறோமே- உண்மையில் பக்தி என்பது என்ன? சில வார்த்தைகள் ரொம்பத் தெரிந்த மாதிரி இருக்கும். ஆனால் இதுதான் என்று பொருளை வறையறுத்துச் சொல்ல முடியாது. அப்படிச் சொல்வது ரொம்பக் கஷ்டமாக இருக்கும்.



அம்பாளிடம் பக்தி செலுத்துவது என்றால் என்ன அர்த்தம்?

பக்தி என்கிற வார்த்தை ரொம்ப அழகான வார்த்தை. பக்தி என்பது அன்பு - அந்த அன்பு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்றால், எதையும் எதிர்பார்க்காத அன்பாக இருக்க வேண்டும். அதற்குத்தான் பக்தி என்று பெயர். பிற்காலத்தில் அதையே காம்ய பக்தி என்று பிரித்து, எதையோ ஒன்றை எதிர்பார்த்துச் செய்யக் கூடிய பக்தி என்று சொல்ல ஆரம்பித்தோம்.

ஆனால், எதையோ ஒன்றை எதிர்பார்த்து 'பக்தி' செய்தால், அது பக்தியே கிடையாது.

எதிர்பார்ப்பில்லாத அன்பு, அம்பாளை வழிபட வேண்டும் என்கிற ஒரே நோக்கம் இருக்கிறதே, அதுதான் பக்தி. 'எனக்கு இது வேண்டும்; அதைக் கொடு' என்றெல்லாம் கேட்காமல், அவளை வணங்குவதில் இருக்கக்கூடிய சந்தோஷத்துக்காகவே வணங்குவது.

நடைமுறையிலேயே நாம் இதைப் பார்க்கலாம். சன்னிதானத்திலே போய் நிற்கிறபோது, அம்பாளுடைய திருமேனியைத் தரிசிக்கிறபோது, பரவசமாகி, 'பார்க்கப் பார்க்க என்ன சந்தோஷமாக இருக்கு தெரியுமா...?' என்று மகிழ்வோம். அந்தச் சமயத்தில் எதையும் கேட்க வேண்டாம் என்றே தோன்றிப் போய்விடும். அந்த சந்தோஷத்தைத் தரக்கூடிய நிலைமைதான், தன்மைதான் பக்தி!

இதை மேலும் விளக்க முத்துஸ்வாமி தீக்ஷிதர் பற்றிய ஒரு நிகழ்ச்சியைச் சொல்லலாம்.

(வளரும்)

உள்ளும்...

'சீக்கிரம் போங்கள், சீக்கிரம். உங்கள் மனைவிக்குப் பலத்த அடி. வெறும் பச்சிலையையும் சுண்ணாம்பையும் வைத்துக்கொண்டு சமாளிக்க முடியாது' உள்ளூர் மருத்துவர்கள் ஆள்காட்டி விரலால் அந்த மலைக்கு அப்பால் உள்ள நகரத்தைச் சுட்டிக் காட்டினார்கள் மஞ்சியிடம்.

சீக்கிரம் வண்டியைக் கட்டிக்கொண்டு ஓடிவிட முடியுமா? எங்கே இருக்கிறது மருத்துவமனை? இருபத்தைந்து கிலோ மீட்டராவது போயாக வேண்டும். அப்போதுதான் மலையைத் தடவிக் கொடுக்கவே ஆரம்பித்திருந்தார் மஞ்சி. தட்ட வேண்டும்; தகர்க்க வேண்டும்; சாய்க்க வேண்டும். அதற்குள் பெரிய சறுக்கல். அந்த மலை முழுவதுமாகக் கீழே சாய எத்தனை காலம் பிடிக்கும் என்று யாரால் சொல்ல முடியும்?

மலையைச் சுற்றிக்கொண்டுதான் போனார்கள். பலனில்லை ('கொஞ்ச நேரத்துக்கு முன்னாடியே கொண்டு வர வேண்டியதுதானே பெருசு?'). ஒன்று மலை, இல்லையென்றால் நான். அப்போதே முடிவு செய்துவிட்டார் மஞ்சி. எனக்கு ஏற்பட்ட கதி இனி வேறு ஒருவருக்கும் ஏற்படக் கூடாது. பெரியவர்களும், குழந்தைகளும் ஆண்களும், பெண்களும் இந்தப் பாதை வழியாக நிம்மதியாகச் சிரித்தபடி கடந்து செல்ல வேண்டும்.

கொண்டார். தன்னுடைய இரண்டு குழந்தைகளையும் தெரிந்தவர்களிடம், ரொம்ப தூரத்து உறவினர்களிடம் சேர்பித்தார்.

முசாஹர் என்னும் பிரிவைச் சேர்ந்தவர் மஞ்சி. அட்டவணை ஜாதிகளில் அடி மட்டத்தில் இந்தப் பெயரைப் பார்க்க முடியும். இவர்களில் 98 சதவீதம் பேருக்கு நிலம் இல்லை. முசாஹர்களை ஏகத்தாளமாகப் பார்க்கும் வழக்கம் பீகாரில் உண்டு; முகம் சுளிப்பவர்களும் உண்டு. காரணம், அவர்கள் எலி, நத்தைகளை வேட்டையாடிச் சாப்பிடக்கூடியவர்கள். மஞ்சிக்குத் தெரிந்த பலரேகூட எலிக்கறி சாப்பிடுபவர்கள்தாம். பீகார் மட்டுமல்ல, தேசிய அளவில் மிகவும் பின்தங்கிய பிரிவு முசாஹர். அதெல்லாம் பெரிய கதை.

'பிரஸிடெண்டைப் போய் பார், அவர் உதவி செய்வார்' என்று யாரோ ஒருவர் மஞ்சியிடம் சொன்னார்கள். அவர் எங்கே இருக்கிறார், அவர் முகவரி என்ன என்பதை எழுதி வாங்கிக்கொண்டார் மஞ்சி. சுத்தியலை ஓர் ஓரமாக வைத்துவிட்டு நடக்க ஆரம்பித்தார், டெல்லிக்கு. ரயில் வண்டியில் போனால் செலவாகும்; வழி தெரியாது என்பதால் ரயில் செல்லும் பாதையிலேயே நடந்தார் அவர். பெரும்பாலும் தண்டவாளத்தில். முன்னோ பின்னோ ரயில் வரும் சத்தம் கேட்டால் இறங்கி ஓர் ஓரமாக நிற்பார்.

மஞ்சிக்கு விழுந்த முதல் அடி, அவரது தினக் கூலி நின்றுபோனதுதான். கூலி இல்லாவிட்டால் சாப்பாடு? திண்டாட்டம்தான். ஆனால், அதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. சமாளிக்க ஆரம்பித்தார். வீட்டில் உள்ள தட்டுமுட்டுச் சாமான்களைக்கூட விட்டுவிடாமல் விற்றுக் காசாக்கிக்

புறமும்...



பிப்ரவரி 1973-ல் நடக்க ஆரம்பித்து, ஏப்ரல் 1973-ல் டெல்லி போய்ச் சேர்ந்தார். ஆனால், அந்தப் பெரிய மனிதரைப் பார்க்க முடியவில்லை. எப்போது வருவார், எங்கே போயிருக்கிறார் என்று அங்கே சிலரிடம் விசாரித்திருக்கிறார். சரியான பதில் வரவில்லை. அதனால் பாதகமில்லை என்று வந்த வழியே திரும்பிவிட்டார். இரண்டு மாதங்கள்



மஞ்சி செய்த சாதனையை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என்பது அவர்களது கோரிக்கை. அதிகாரிகள் குறிப்பு எடுத்துக் கொண்டார்கள். பெயர், முகவரி, சாலையின் நீளம், அகலம் எல்லாவற்றையும் எழுதிக் கொண்டார்கள்.

நிதிஷ் குமார் அரசு மஞ்சிக்கு ஏதாவது உருப்படியாகச் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டது. பத்மபூஷன்? தாராளமாகக் கொடுக்

நினைவுகள் போதும்!

வேலை தள்ளிப்போனது என்பதைத் தவிர பெரிய இழப்பு எதுவும் இல்லை.

சாலை கிட்டத்தட்ட முடிவடையும் சமயம். முதல் எதிர்ப்பு வனத்துறையிடமிருந்து கிளம்பியது. ''யோவ், மனகல என்ன நினைச்சிக்கிட்டிருக்கே? நீ பாட்டுக்கு மலையைப் பொளந்து போட்டுட்டுப் போயிட்டா இங்கே யாரு அதுக்குப் பதில் சொல்றது? உங்க தாத்தா வூட்டு மலையா அது? பர்மிஷன், கிர்மிஷன் வாங்க வேண்டாமோ? உனக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியாது. விவரம் தெரிஞ்ச யார்கிட்டயாவது கேட்க மாட்டியா?''

இரண்டாவது எதிர்ப்பு அரசாங்கத்திடமிருந்து. அப்போது சாலை முடிவடைந்திருந்தது. ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து அதிகாரிகளைச் சென்று பார்த்திருக்கிறார்கள்.

கலாம்; தப்பேயில்லை. எல்லா ஏற்பாடுகளும் தயாராகிவிட்டன. எங்கிருந்தோ குதித்தார்கள் சில நக்கீரர்கள். ''மன்னா, நிறுத்துங்கள்! மஞ்சியின் சாதனையில் ஒரு குற்றம் இருக்கிறது; யோசித்துப் பாருங்கள். தனியொரு மனிதர் மலையைப் பிளக்க முடியுமா? இதில் ஏதோ ஃபோர்ஜரி இருக்கிறது.''

மக்கள் பொங்கிவிட்டார்கள். எவ்வளவு தைரியம் இருந்தால் எங்கள் சாதுஜியை (இப்போதெல்லாம் மஞ்சியை அப்படித்தான் அழைக்கிறார்கள்) குறை சொல்வீர்கள்? நீங்களாச்சு உங்கள் விருதாச்சு. எங்களுக்கு எதுவும் வேண்டாம். மஞ்சி போதும். அவரின் நினைவுகள் போதும்!

மருதன்



* தனஞ்ஜெயன்

ஆறு மாதத்தில் டி.வி.டி... அள்ளலாம் பல கோடி!

“சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கின்படி தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா ஆகிய மூன்று மாநிலங்களில்தான் மிக அதிக அளவுக்குத் திருட்டு வி.சி.டி. பிசினஸ் அமோகமாக நடந்து கொண்டிருக்கிறது” என்கிறார் மோசர்பேர் என்டர்டெய்ன்மெண்ட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலரான தனஞ்ஜெயன். பிரகாஷ் ராஜின் டூயட் மூவீசுடன் இணைந்து மோசர்பேர் நிறுவனம் மூன்று தமிழ்ப் படங்களைத் தயாரிக்கிறது. இந்தத் திரைப்பட அறிவிப்பு விழாவுக்கு வந்திருந்தவரிடம் நாம் பேசினோம்.

“திருட்டு வி.சி.டி. தயாரிப்பை ஒழிக்க வேண்டுமென்றால் குறைந்த விலையில் சி.டி., வி.சி.டி.களை விற்க வேண்டும் என்பதுதான் எங்களின் கொள்கை. அதன்படி உரிமைகளை வாங்கி தமிழ்ப்பட வீடியோ சி.டி., டி.வி.டி.களை வெளியிட்டு வெள்ளோட்டம் பார்த்தோம். மிக நல்ல வரவேற்பு கிடைத்தது. தொடர்ந்து மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம் என்று காலடி வைத்தோம். இன்று அனேகமாக அனைத்து இந்திய மொழிப் படங்களின் சி.டி., டி.வி.டி.க்கள் எங்கள் நிறுவனம் மூலம் விற்பனையாகின்றன.

தமிழில் ஒரு படம் வெளியாகி மூன்று ஆண்டுகள் கழித்துத்தான் வீடியோ வெளியிட வேண்டும் என்கிற கட்டுப்பாடு இருக்கிறது. இந்திப் படங்கள் வெளியாகி நாலு வாரமானதும் வீடியோ வெளியிடலாம். தெலுங்கிலும் மலையாளத்திலும் ஆறு மாதம் முதல் ஒரு வருடமானதும் வெளியிடலாம். எப்படியும் படம் வெளியான இரண்டாம் நாளே திருட்டு வி.சி.டி. வெளியாகிவிடுகிறது. அப்புறம் ஏன் சட்டபூர்வமான வீடியோவை மூன்றாண்டுகளுக்குத் தடுக்க வேண்டும்? இந்த மூன்றாண்டு காலத்தில் திருட்டு வி.சி.டி.க்காரர்கள் காட்டில்தான் மழை! அப்படி இல்லாமல் படம் வெளியாகி அதிக இடைவெளி தராமல், வீடியோவும் வெளியானால், வீடியோ உரிமை மூலமாகத் தயாரிப்பாளருக்குப் பல கோடிகள் வரை பணம் கிடைக்கும். தமிழ்ப் படத் தயாரிப்பாளர் சங்கத்துடனும், இதர திரையுலக அமைப்புகளுடனும் இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

விரைவில் 'மொழி' படத்தின் டி.வி.டி.யை வெளியிடவிருக்கிறோம். இப்போதே இரண்டு லட்சம் பிரதிகளுக்கு ஆர்டர் கைவசம் இருக்கிறது. மணிரத்னத்தின் 'குரு' தமிழில் மட்டும் 75 ஆயிரம் பிரதிகள் விற்றிருக்கிறது” என்றார்.

- அர்ஜுன்

படம் :
பொள்ளாச்சி சுந்தரம்

சி.ஐ.டி. விஷ்வா துப்பறியும் 8

இறந்தவனைத் தேடு

கதை: பரிகுலம் சுகுமாரன் படம்: ஜெயராஜ்




தர்மாவைப் பற்றி முதலிலேயே சொல்லியிருந்தால்...
இதோ பாருங்கள்...
என்ன இது...
தர்மா ஹோட்டலில் இருந்து போகும்போது, அவன் உட்கார்ந்த இடத்தில் கிடந்த துண்டுச் சீட்டு...
XILX 7XIZ +RK
சங்கேத பாஷையில் எழுதியிருக்கிறது. நிச்சயம் தர்மா சந்தேகத்துக்குரிய ஆள்தான்.
நான் கவனித்துக் கொள்கிறேன். ஜாக்கிரதையாகப் போங்க...
வீடுகளும், மரங்களும் நிறைந்த-நடமாட்டம் குறைந்த மெயின் ரோடு. வினோத்தை அனுப்பிவிட்டுப் பின் தொடர்கிறார் விஷ்வா. வினோத்தைக் குறிவைத்துச் சிலர் வருகிறார்கள்; தாக்குகிறார்கள்.
நான் சந்தேகப் பட்டது சரியாகி விட்டது...



சண்டை போட்டு அவர்களை அடித்து விரட்டி, வினோத்தைக் காப்பாற்றுகிறார்.
சண்டை நடந்த இடத்தில், கிழிபட்ட சட்டை காலரின் உள்பகுதியில் 'ராயல் டைலர், தாம்பரம்' என்று இருக்கிறது.
Royal Tailors Tambaram
விஷ்வா உடனடியாகப் பல இடங்களுக்குத் தொடர்புகொண்டு விசாரிக்கிறார்.
நீங்கள் சொல்லும் குறியீடுகள் ஆந்திர நக்ஸல்கள் பயன்படுத்தும் ஆயுதங்கள் குறித்த தகவல்...
ராயல் டைலர்ஸ்... இரண்டு மாதம் முன்பு ராம் நகர்லருந்து ஓர் ஆள் வந்து சட்டை தைத்துக் கொண்டது...
ராம் நகர்... அது எங்கே இருக்கு?
தொடரும்

சரித்திரம்

நமது சரித்திரம் குறித்த கே.வி.ஆனந்த் அவர்களின் எண்ண ஒளிப்பதிவின் தொடர்ச்சி :

பார்த்திபனுக்கு இருந்த கனவைப் போலவே, நரசிம்ம பல்லவருக்கும் ஒரு கனவு இருந்தது- 'வடக்கே உலகம் அறிய பெயரும், புகழும் பெற்றுள்ள சக்கரவர்த்திகளைப் போல, தெற்கே யாருமில்லை. காரணம் நம்மவர்கள் சிறு சிறு துண்டுகளாகப் பிரிந்து இருக்கிறார்கள். இவர்களை எல்லாம் ஒன்றிணைத்து, வலிமையான ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கி, தமிழ்நாட்டின் புகழை உலகறியச் செய்ய வேண்டும்' என்பதுதான் அந்தக் கனவு. பார்த்திபன் உள்ளிட்ட மற்ற சிற்றரசுகளுடன் அவர் போரிட்டதும் இந்த உயரிய நோக்கத்தினால்தான்!

ஆனால், பார்த்திபனின் சுதந்திர உணர்வு, நரசிம்ம பல்லவரை மாற்றிவிட்டது. எதிரியாக இருந்தாலும் அவனது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் பண்பாடு தமிழனிடம் எப்போதும் உண்டு. நரசிம்ம பல்லவரின் கனவும், நோக்கமும் அமரர் கல்கியின் மனத்திலிருந்த ஆதங்கத்தின் வெளிப்பாடு என்று சொல்லலாம். அக்பர், அசோகர், ஷாஜகான் புகழ் உலகில் பரவிய அளவுக்கு நமது புகழ் பரவவில்லை என்ற ஆதங்கம் கல்கி அவர்களுக்கு நிச்சயம் இருந்திருக்க வேண்டும். அதுதான் நரசிம்ம பல்லவர் மூலம் எழுத்தாக வெளிப்பட்டுள்ளது. அது உண்மைதானே!



நமது பள்ளி சரித்திரப் புத்தகங்களை எடுத்துக்கொண்டால், அக்பரைப் பற்றி, அசோகரைப் பற்றிச் சொல்லப்படும் அளவுக்கு சோழர்களைப் பற்றியோ, பல்லவர்களைப் பற்றியோ சொல்லப்படுவதில்லை. பானிபட் போர், கலிங்கத்துப் போர் குறித்து விரிவாக இருக்கும். நமது தமிழ் மன்னர்களின் வீரம் குறித்தோ, புகழ் குறித்தோ தேட வேண்டும். அப்படியே இருந்தாலும் 'கரிகாலன் கல்லணையைக் கட்டினான். மாமல்லபுரச் சிற்பங்களை பல்லவன் செதுக்கினான்' என்று சுருக்கமாக இருக்கும். இங்குள்ள மெட்ரிக்குலேஷன் பள்ளிகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவர்களிடம் சேர, சோழ, பாண்டியன் என்று சொன்னால், 'யார் அவர்கள்?' எனக் கேட்பார்கள்.

ஆக, நமது சரித்திர மன்னர்களைப் பற்றி ஒரு மாணவன் தெரிந்துகொள்ள வேண்டுமானால், அவன் மேற்படிப்புக்கு வந்துதான் முயற்சிக்க வேண்டியுள்ளது. சிறு வகுப்புப் பிள்ளைகளுக்குச் சரித்திரம் குறித்து விரிவாகச் சொல்வது சுமையாக இருக்குமென நினைத்தால், ஓரளவுக்காவது கொடுத்து, நமது முன்னோர்களை அடையாளப்படுத்த வேண்டும். இது அரசின் கடமை.

நம்மைப் போன்றவர்கள் சோழர்களைப் பற்றியும், பல்லவர்களைப் பற்றியும் இந்த அளவுக்குத் தெரிந்து வைத்திருக்க அமரர் கல்கி போன்றோரின் சரித்திர நாவல்களும் ஒரு காரணம். கதையாக அவர்கள்

திரும்பும்!

"எதிரியாக இருந்தாலும் அவனது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் பண்பாடு தமிழனிடம் எப்போதும் உண்டு!"



சொன்னபோது நமக்கும் படிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. சரித்திர நாயகர்கள் மனத்தில் பதிந்தார்கள். அவர்களின் வீரம், பாசம், காதல், பகைவனின் உணர்வை மதிக்கும் பண்பு கண்டு வியக்கிறோம், சிலிர்க்கிறோம். அவர்களை வணங்குகிறோம்.

இதுகூட ஒரு பகுதிதான்! படிப்பறிவற்ற, படித்திருந்தாலும் இதுபோன்ற சரித்திர நாவல்களைப் படிக்கும் வாய்ப்பற்ற எத்தனையோ தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் நமது முன்னோர்களின் வாழ்க்கையைக் கொடுக்க வேண்டும். அது சினிமா மூலம் முடியும். காட்சி ஊடகம் எல்லோரையும் எளிதாகச் சென்றடையும் சாதனம். வேகமாக மனத்திலும் பதிய வைக்கும் சாதனம்.

'கல்கி' போன்றவர்கள் தங்களால் இயன்றவரை ஒரு பகுதியினருக்கு நமது முன்னோர்களின் சரித்திரத்தை கொடுத்துச் சென்றார்கள். அதனைப் பெற்றவர்கள் இன்னொரு பகுதியினருக்குக் கொடுக்க வேண்டும். இன்று அதற்கான முயற்சியைத் தொடங்கினால், நாளை ஒவ்வொருவராக ஆர்வமுடன் முன் வருவார்கள்.

சேரனும், சோழனும், பாண்டியனும், பல்லவனும் மீண்டும் திரையில் தோன்றி மக்களை மகிழ்ச்சிப்படுத்தி, தமிழ் உணர்வை ஊட்டும் காலம் நிச்சயம் வரும். தமிழ் சினிமாவின் சரித்திரமும் திரும்பும். எழுபதுகளுக்கு முந்தைய காலகட்டம், புதிய பொலிவுடன், நவீன தொழில் நுட்பத்துடன் மீண்டும் வண்ணமயமாக வரும்!

தொகுப்பு :
ஆரணி யுவராஜ்

படம் : **ஸ்ரீஹரி**

பார்த்திபன்

4. மாமல்லபுரம்

கடற்கரைப் பட்டினமாகிய மாமல்லபுரத்தில் அன்று அல்லோலகல்லோலமாயிருந்தது. வீடுகள் எல்லாம் மாவிலைகளினாலும், தென்னங்குருத்துகளினாலும், சிங்க உருவம் தாங்கிய கொடிகளினாலும், பல வர்ணத் தோரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. தெரு வீதிகளில் சித்திர விசித்திரமான கோலங்கள் போடப்பட்டிருந்தன. தேர்கள், யானைகள், குதிரைகள், கோபுரங்கள், பலவித விருட்சங்கள், பூஞ்செடிகள் - இவை போலெல்லாம் போட்ட கோலங்கள் கண்ணுக்கு விருந்தாயிருந்தன. அதிகாலையிலிருந்து ஸ்திரீகளும், புருஷர்களும், சிறுவர் சிறுமியரும் பட்டுப் பட்டாடைகளினாலும், பசும்பொன் ஆபரணங்களினாலும் தங்களை அலங்கரித்துக் கொண்டு, தெரு வீதிகளிலும் திண்ணைகளிலும் கூட்டங் கூட்டமாக நின்றுகொண்டிருந்தனர். எங்கே பார்த்தாலும் பேரிகை முழக்கம் மற்றும் மங்கள வாத்தியங்களின் ஒலியும் கேட்டுக் கொண்டிருந்தன. இந்த ஒலிகளுக்கிடையில், "சக்கரவர்த்தி காஞ்சியிலிருந்து கிளம்பி விட்டாராம்!" "பாதி வழி வந்தாகிவிட்டதாம்!" "சக்கரவர்த்தியுடன் கோமகள் குந்தவி தேவியும் வருகிறாராம்!" என்றெல்லாம் ஜனங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் கலகல சப்தமும் கேட்டுக் கொண்டிருந்தன.

மாமல்லபுரவாசிகள் அத்தனை அதிக உற்சாகத்துடனும் ஆனந்தத்துடனும் அன்று உற்சவம் கொண்டாடியதன் காரணம் என்னவென்றால், அந் நகருக்கு அன்று மாமல்ல நரசிம்மவர்ம சக்கரவர்த்தி விஜயம் செய்வதாக இருந்ததுதான். சக்கரவர்த்தி விஜயம் செய்து, ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னால் நின்று போன சிற்பப் பணியை மறுபடியும் ஆரம்பித்து வைப்பார் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. சக்கரவர்த்தியுடன் கூட அவருடைய செல்வக்குமாரி குந்தவி தேவியும் வரப்போவதாகத் தெரிந்திருந்தபடியால் மாமல்லபுரவாசிகள் எல்லையற்ற குதூகலத்துடன் அந்த நாளைத் திருநாளாகக் கொண்டாடினார்கள்.

அந்தக் காலத்தில், காஞ்சி நரசிம்மவர்ம சக்கரவர்த்தியின் புகழ் எண்திசையிலும் பரவியிருந்தது. பாரத நாடெங்கும் அவருடைய கீர்த்தி வியாபித்திருந்ததோடு, கடல் கடந்து வெளிநாடுகளுக்கும் சென்றிருந்தது. தெற்கே காவேரியாற்றங்கரையிலிருந்து வடக்கே கிருஷ்ணா நதிக்கரை வரையில் பல்லவர்களின் சிங்கக் கொடி கம்பீரமாகப் பறந்தது. அந்தப் பிரதேசத்திலுள்ள ஜனங்கள் எல்லோரும் நரசிம்மவர்மரிடம் அளவிலாத பக்தி கொண்டிருந்தார்கள். அறிவிலும், வீரத்திலும், தயாள குணத்திலும், நடுக் கண்ட நீதி வழங்குவதிலும், குடிகளின் நலங்களைக் கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாப்பதிலும், சிற்பம், சித்திரம், சங்கீதம் முதலிய கலைகளை வளர்ப்பதிலும் நரசிம்மவர்மர் மிகச் சிறந்து விளங்கியது பற்றி அவருடைய பிரஜைகள் மிக்க பெருமை கொண்டிருந்தார்கள். வடக்கே நர்மதை நதிவரையில் படையெடுத்துச் சென்று, பொல்லாத புலிகேசியைப்

போரில் கொன்று வாதாபி நகரையும் தீக்கிரையாக்கிவிட்டு வந்ததன் பின்னர், மாமல்ல சக்கரவர்த்தியைப் பற்றி அவருடைய குடிகள் கொண்டிருந்த பெருமை பன்மடங்கு பெருகியிருந்தது. 'தட்சிண தேசத்தில் நரசிம்மவர்மரைப் போல் ஒரு சக்கரவர்த்தி இதுவரையில் தோன்றியதுமில்லை; இனிமேல் தோன்றப் போவதுமில்லை!' என்று அந்தக் காலத்தில் பல்லவ சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த ஜனங்கள் நம்பினார்கள். முந்நூறு வருஷத்துக்குப் பிறகு தஞ்சையில் இராஜராஜன், இராஜேந்திர சோழன் என்னும் மகாசக்கரவர்த்திகள் தோன்றப் போகிறார்கள் என்பதை அந்தக் காலத்து மக்கள் அறிந்திருக்க முடியாதல்லவா?

இவ்விதம் பல்லவ சாம்ராஜ்யத்தின் பிரஜைகள் எல்லாருமே நரசிம்மவர்ம சக்கர

கனவு



அமரர் கல்கி

வர்த்தியிடம் பக்தி விசுவாசம் கொண்டிருந்தார்களாயினும் மாமல்லபுரவாசிகளுக்குச் சக்கரவர்த்தியிடம் ஒரு தனித்த உறவு ஏற்பட்டிருந்தது. அந்தப் பட்டினத்துக்குப் பெயரும் புகழும் அளித்தவர் அவரேயல்லவா?

மகேந்திரவர்ம சக்கரவர்த்தியின் காலத்தில், நரசிம்மவர்மர் இளம் பருவத்தினராயிருந்தபோது, ஒரு தடவை மல்யுத்தத்தில் பிரசித்திபெற்ற மல்லர்களையெல்லாம் தோற்கடித்து வெற்றி பெற்றார். அப்போது அவருக்கு 'மகா மல்லவன்' என்ற பட்டம் அவருடைய தந்தை மகேந்திரவர்மரால் அளிக்கப்பட்டது. சில காலத்துக்குப் பிறகு இந்தப் பட்டப் பெயரை வைத்தே அந்தக் கடற்கரைப் பட்டினத்துக்குப் பெயர் வழங்கலாயிற்று.

“அப்பா! இந்தப் பட்டினத்துக்கு உங்கள் பட்டப் பெயரை எதற்காக வைத்தார்கள்?” என்று கோமகள் குந்தவி தேவி, தந்தை நரசிம்மவர்மரைப் பார்த்துக் கேட்டாள்.

இருவரும் பல்லவ சாம்ராஜ்யத்தின் பட்டத்து யானை மீது அம்பாரியில் வீற்றிருந்தார்கள்.

அந்தப் பட்டத்து யானைக்கு முன்னாலும் பின்னாலும் வேலும் வாளும் தாங்கிய போர் வீரர்கள் அணிவகுத்துச் சென்றார்கள். இன்னும் பலவகைப்பட்ட விருதுகளும் சென்றன.

எல்லாருக்கும் முன்னால் பெரிய ரிஷபங்கள் முதுகில் முரசுகளைச் சுமந்து கொண்டு சென்றன. சற்று நேரத்துக்கொரு தடவை அந்த முரசுகள் அடிக்கப்பட்ட போது உண்டான சப்தம் அலைமோதிக் கொண்டு நாலாபுறமும் பரவியது.

அம்பாரியின் மீது வீற்றிருந்த நரசிம்மவர்ம சக்கரவர்த்தியையும் அவர் அருமைப் புதல்வியையும் ஏககாலத்தில் பார்த்தவர்கள், உதயசூரியனையும் பூரணச் சந்திரனையும் அருகருகே பார்த்தவர்களைப் போல் திணறித் திண்டாடிப் போனார்கள்.

இருவருடைய திருமுகத்திலும் அத்தகைய திவ்யதேஜஸ் ஜொலித்துக் கொண்டிருந்தது. அவர்கள் அணிந்திருந்த கிரீடங்களிலும், மற்ற ஆபரணங்களிலும் பதித்த நவரத்தினங்களின் காந்தி பார்ப்பவர்

களின் கண்களைக் கூசச் செய்தன.

பல்லவ சக்கரவர்த்தி ஆஜானுபாகுவாய், கம்பீரமான தோற்றமுடையவராயிருந்தார். வலிமையும் திறமையுங்கொண்ட அவருடைய திருமேனியில் மென்மையும் சௌந்தரியமும் கலந்து உறவாடின. இராஜ களை ததும்பிய அவருடைய முகத்தில் காணப்பட்ட காயங்களின் வடுக்கள், அவர் எத்தனையோ கோர யுத்தங்களில் கைகலந்து போரிட்டு, ஜய பேரிகை முழக்கத்துடன் திரும்பி வந்தவர் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தன.

கோமகள் குந்தவி தேவியோ பெண் குலத்தின் அழகெல்லாம் திரண்டு உருக்கொண்டவள் போலிருந்தாள். பல்லவ சாம்ராஜ்யத்திலிருந்த மகா சிற்பிகளும், ஓவியக்காரர்களும், குந்தவி தேவியிடம் தங்கள் கலைத்திறன் தோற்றுவிட்டதென்பதை ஒப்புக்கொண்டார்கள். "கோமகளின் கருவிழிகளில்தான் என்ன மாய மந்திர சக்தி இருக்கிறதோ, தெரியவில்லை. தேவி தமது அஞ்சனந் தீட்டிய கண்களை அகல விரித்து எங்களைப் பார்த்தவுடனேயே நாங்கள் உணர்விழந்து மெய்மறந்து போய்விடுகிறோம். அப்புறம் சிற்பம் அமைப்பதெங்கே? சித்திரம் வரைவதெங்கே?" என்றார்கள். "எங்களையெல்லாம் கர்வபங்கம் செய்வதற்கென்றே பிரமன் குந்தவி தேவியைப் படைத்திருக்க வேண்டும்" என்று அவர்கள் சொன்னார்கள்.





''அப்பா! இந்த நகருக்குத் தங்கள் பட்டப் பெயரை எதற்காக வைத்தார்கள்? சொல்லுகிறேன், சொல்லுகிறேன் என்று ஏமாற்றிக் கொண்டு வருகிறீர்களே, இன்றைக்குக் கட்டாயம் சொல்லியாக வேண்டும்'' என்று மறுபடியும் கேட்டாள் குந்தவி.

''அப்படியானால் இப்போது இந்த யானை மேலிருந்து நாம் இறங்கியாக வேண்டும்'' என்றார் சக்கரவர்த்தி.

''இப்படியே நான் தரையில் குதித்து விடட்டுமா?'' என்றாள் குந்தவி.

''நீ சாதாரண மனுஷியாயிருந்தால் குதிக்கலாம், அம்மா! குதித்துக் காலையும் ஒடித்துக் கொள்ளலாம்! சக்கரவர்த்தியின் மகளாயிருப்பதால் அப்படியெல்லாம் செய்யக்கூடாது!'' என்றார் சக்கரவர்த்தி.

''எதற்காக அப்பா, அப்படி? சக்கரவர்த்தியின் மகளாயிருப்பதால், யானை மேலிருந்து குதித்துக் காலை ஒடித்துக் கொள்ளக்கூடவா பாத்தியதை இல்லை?'' என்று சிரித்துக்கொண்டே குந்தவி கேட்டாள்.

''ஆமாம், ஆமாம்! அப்படி நீ செய்தால் காஞ்சி சக்கரவர்த்தியின் மகள் குந்தவி யானை மேலிருந்து குதித்தாளாம் என்ற செய்தி உலகமெல்லாம் பரவிவிடும். அப்புறம் அங்க, வங்க, கலிங்கம் முதலான ஐம்பத்தாறு தேசத்து இராஜகுமாரர்களில் யாரும் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள முன்வர மாட்டார்கள்! அப்புறம் உன் கல்யாணத்துக்கு சீதை விஷயத்தில் ஜனகர் செய்ததுபோல் நானும் ஏதாவது தந்திரம் செய்தாக வேண்டும்.''

''ஜனகர் தந்திரம் செய்தாரா? என்ன தந்திரம் அப்பா!'' என்று குந்தவி கேட்டாள்.

''அது தெரியாதா உனக்கு? சீதை சிறு பெண்ணாயிருந்தபோது ஒருநாள் ஒரு வில்லைத் தெரியாத்தனமாய்த் தூக்கி நிறுத்திவிட்டாள். இதற்காக அவளை ஐம்பத்தாறு தேசத்து இராஜகுமாரர்களும் கல்யாணம் செய்துகொள்ள மறுத்துவிட்டார்கள். கடைசியில் சீதையின் தகப்பனார் என்ன செய்தார் தெரியுமா? விசுவாமித்திர ரிஷியை அனுப்பி இராமன் என்ற அசட்டு இராஜகுமாரனைத் தந்திரமாய் அழைத்து வரப் பண்ணினார். ஒரு பெரிய வில்லை நடுவில் முறித்து, முறிந்தது தெரியாதபடி தந்திரமாய்ப் பெட்டிக்குள் வைத்திருந்தார். இராமன் அந்த வில்லை விளையாட்டாக எடுத்ததும் வில் முறிந்து இரண்டு துண்டாக விழுந்துவிட்டது. உடனே ஜனகர், 'ஐயையோ! எங்கள் குலசம்பத்தாகிய வில்லை ஒடித்துவிட்டாயே! ஒன்று, ஒடிந்த வில்லைச் சேர்த்துக் கொடு; இல்லாவிட்டால் என் மகள் சீதையைக் கல்யாணம் பண்ணிக்கொள்' என்றார். இராமன் வேறு வழியில்லாமல் சீதையைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று!''

குந்தவி விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே, ''அப்பா! நானும் இராமாயணக் கதை கேட்டிருக்கிறேன், நீங்கள் சொல்லுவது புதிய இராமாயணமாயிருக்கிறதே!'' என்றாள்.

சற்று சிரிப்பு அடங்கிய பிறகு அவள், ''ஆனால் உங்களுக்கு அதைப் பற்றிக் கவலை வேண்டாம், அப்பா! நான் கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லை!'' என்று சொன்னாள்.

சக்கரவர்த்தி மூக்கின் மேல் விரலை வைத்துக்கொண்டு, ''அது என்ன சமாசாரம்? கல்யாணம் உன்னை என்ன பண்ணிற்று? அதன் மேல் ஏன் அவ்வளவு கோபம்?'' என்று கேட்டார்.

அப்போது குந்தவி, ''கல்யாணம் செய்துகொண்டால் நான் உங்களை விட்டுப் பிரியத்தானே வேண்டும்? உங்களை விட்டுவிட்டுப் போக எனக்கு இஷ்டமில்லை. உங்களுடனேயே நான் எப்போதும் இருப்பேன்'' என்றாள்.

''அப்படியா சமாசாரம், குந்தவி? இன்னொரு தடவை சொல்லு'' என்றார்

சக்கரவர்த்தி.

"அதெல்லாம் ஒரு தடவைக்கு மேல் சொல்ல மாட்டேன், அப்பா! நீங்கள் ஏக சந்தக்கிராகி என்பது உலகமெல்லாம் பிரசித்தியாயிருக்கிறதே! ஒரு தடவைக்கு மேல் ஏன் கேட்கிறீர்கள்?"

"ஏ ஆபாத்பாந்தவா! அநாதரட்சகா! இந்த வாயாடிப் பெண்ணைக் கட்டிக் கொண்டு எந்த இராஜகுமாரன் திண்டாடப் போகிறானோ? யார் தலையில் அவ்வித மிருக்கிறதோ, அவனை நீதான் காப்பாற்றியருள வேண்டும்!" என்று சொல்லியபடி சக்கரவர்த்தி தலைமேல் கைகூப்பி வானத்தை அண்ணாந்து நோக்கினார்.

"உங்களுடைய பரிகாசம் இருக்கட்டும். இப்போது யானையை நிறுத்துகிறீர்களா, இல்லையா? இல்லாவிடில் நான் கீழே குதித்துவிட்டேனானால் அப்புறம் என்னை ஓர் இராஜகுமாரனும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டான். எப்போதும் உங்கள் பிராணனைத்தான் வாங்கிக்கொண்டிருப்பேன்" என்று குந்தவி சொல்லி எழுந்து நின்று அம்பாரியிலிருந்து கீழே குதிப்பது போல் பாசாங்கு செய்தாள்.

"வேண்டாம், வேண்டாம்; அப்படிப் பட்ட விபரீதம் பண்ணி வைக்காதே!" என்று கூறி, பல்லவ சக்கரவர்த்தி யானைப் பாகனைக் கூப்பிட்டு யானையை நிறுத்தச் சொன்னார்.



யானை நின்றதும், தந்தையும் மகளும் கீழே இறங்கினார்கள். சக்கரவர்த்தி, குதிரையும் பல்லக்கும் கொண்டு வரும்படி சமிக்ஞை காட்டினார். அவை அருகில் வந்ததும், பரிவாரத் தலைவனை அழைத்து, "நீங்கள் நேரே போய் நகர் வாசலருகில் நில்லுங்கள். நாங்கள் அங்கே வந்து சேர்ந்துகொள்கிறோம்" என்றார். பிறகு, குதிரை மீது ஆரோகணித்து இராஜ மார்க்கத்திலிருந்து பிரிந்து குறுக்கு வழியாகப் போகத் தொடங்கினார். இளவரசி ஏறியிருந்த பல்லக்கும் அவரைத் தொடர்ந்து சென்றது.

சக்கரவர்த்தி இம்மாதிரியெல்லாம் எதிர்பாராத காரியங்களைச் செய்வது சர்வ சகஜமாய்ப் போயிருந்தபடியால், அவரைத் தொடர்ந்து வந்த பரிவாரங்கள் சிறிதும் வியப்பு அடையாமல் இராஜ மார்க்கத்தோடு மேலே சென்றன.

5. உறையூர்த் தூதன்

இயற்கையாகப் பூமியிலெழுந்த சிறு குன்றுகளை அழகிய இரதங்களாகவும் விமானங்களாகவும் அமைத்திருந்த ஓர் இடத்துக்குச் சக்கரவர்த்தியும் குந்தவி தேவியும் வந்து சேர்ந்தார்கள். அந்த விமானக் கோயில்களையொட்டி, ஒரு கல் யானையும் கற்சிங்கமும் காணப்பட்டன. இவையும் இயற்கையாகப் பூமியில் எழுந்த பாறைகளைச் செதுக்கிச் செய்த வடிவங்கள்தாம்.

அவற்றுள் யானையின் சமீபமாகச் சக்கரவர்த்தி வந்தார்.

"குந்தவி! இந்த யானையைப் பார்த்தாயா? தத்ரூபமாய் உயிருள்ள யானை நிற்பது போலவே தோன்றுகிறதல்லவா? முப்பது வருஷத்துக்கு முன்னால் இங்கே இந்த

யானை இல்லை; ஒரு மொட்டைக் கற்பாறைதான் நின்றது!'' என்றார்.

''இந்தக் கோயில்கள் எல்லாமும் அப்படித்தானே மொட்டை மலைகளாயிருந்தன?'' என்று குந்தவி கேட்டாள்.


''ஆமாம், குழந்தாய்! இன்று நீயும் நானும் வந்திருப்பது போல் முப்பது வருஷத்துக்கு முன்னால் என் தகப்பனாருடன் நான் இங்கு வந்தேன். உன் தாத்தாவைப் பற்றித்தான் உனக்கு எல்லாம் தெரியுமே? சிற்பம், சித்திரம் என்றால் அவருக்கு ஒரே பைத்தியம்!''

''உங்களுக்குப் பைத்தியம் ஒன்றும் குறைவாயில்லையே?'' என்று குந்தவி குறுக்கிட்டாள்.

சக்கரவர்த்தி புன்னகையுடன், ''என்னை விட அவருக்குத்தான் பைத்தியம் அதிகம். செங்கல்லினாலும் மரத்தினாலும் அவர் ஆயிரம் கோயில்கள் கட்டினார். அப்படியும் அவருக்குத் திருப்தி உண்டாகவில்லை. என்றும் அழியாத பரம்பொருளுக்கு என்றும் அழியாத கோயில்களைக் கட்ட வேண்டுமென்று ஆசைப்பட்டார். மலையைக் குடைந்து கோயில்கள் அமைக்க விரும்பினார். அந்தக் காலத்திலேதான் ஒரு நாள் அவரும் நானும் இந்தப் பக்கம் சுற்றிக்கொண்டு வந்தோம். அப்போது எனக்கு உன் வயதுதானிருக்கும். தற்செயலாக ஆகாசத்தைப் பார்த்தேன். வெண்ணிறமான சிறுசிறு மேகங்கள் வானத்தில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தன. அந்த மேகங்கள் அவ்வப்போது வெவ்வேறு ரூபங்கொண்டு தோன்றின. ஒரு சிறு மேகம் யானையைப் போல் காணப்பட்டது. அதைப் பார்த்ததும் எனக்கு ஒரு யோசனை தோன்றியது. இந்தப் பாறையண்டை வந்தேன். கையில் கொண்டு வந்திருந்த காவிக் கட்டியினால் யானையின் உருவத்தை இதன் மேல் வரைந்தேன். அதை அப்பா பார்த்துக் கொண்டேயிருந்தார். யானை உருவத்தை நான் எழுதி முடித்ததும் என்னைக் கட்டித் தூக்கிக் கொண்டு கூத்தாடத் தொடங்கினார். 'நரசிம்மா! என்ன அற்புதமான யோசனை உன் யோசனை! இங்குள்ள பெரிய பாறைகளையெல்லாம் கோயில்களாக்கி விடுவோம். வாகனங்களாகச் செய்து விடுவோம். இந்த உலகமுள்ள அளவும் அழியாதிருக்கும் அற்புதச் சிற்பங்களை எழுப்புவோம்!' என்று வெறி பிடித்தவர் போல் கூறினார். அவ்விதமே சீக்கிரத்தில் இங்கே சிற்ப வேலைகளை ஆரம்பித்தார். அது முதல் இருபது வருஷ காலம் இந்தப் பிரதேசத்தில் இடைவிடாமல் ஆயிரக்கணக்கான கல்லுளிகளின் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. நான் வடதேசத்துக்குப் படையெடுத்துப் போனபோதுதான் நின்றது....''

இவ்விதம் சொல்லி சக்கரவர்த்தி நிறுத்தி ஏதோ யோசனையில் ஆழ்ந்தவர் போல் இருந்தார்.

சற்றுப் பொறுத்து குந்தவி, ''ஆமாம் அப்பா, இருபது வருஷமாய் நடந்து வந்த சிற்பப் பணியை நிறுத்திவிட்டீர்களே என்ற சந்தோஷத்தினால் உங்கள் பெயரை இந்தப் பட்டினத்துக்கு வைத்தார்கள் போலிருக்கிறது!'' என்று சொல்லிவிட்டுக் குறும்பாகப் புன்னகை செய்தாள். அதைக் கேட்ட



சக்கரவர்த்தி உரக்கச் சிரித்துவிட்டு, "இல்லை, அம்மா! இந்தச் சிற்பபுரி தோன்றுவதற்கு நான் காரணமாயிருந்தபடியினால் என் தகப்பனார் இப்பட்டினத்துக்கு என் பெயரை அளித்தார். 'நரசிம்மன்' என்ற பெயருடன் எத்தனையோ இராஜாக்கள் வரக்கூடும். 'மாமல்லன்' என்ற பட்டப் பெயர் வேறொருவரும் வைத்துக்கொள்ள மாட்டார்கள் என்று யோசித்து, அப்பா இந்தப் பட்டினத்துக்கு 'மாமல்லபுரம்' என்று பெயர் சூட்டினார். அப்பாவுக்கு என் மேலேதான் எவ்வளவு ஆசை!" என்று கூறி மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தார்.

"ஆமாம்; ஆனால் தாத்தாவுக்கு உங்கள் பேரில் இருந்த ஆசையில் நூறில் ஒரு பங்குகூட உங்களுக்கு என் அண்ணா மேல் கிடையாது. இருந்தால், அண்ணாவைக் கப்பல் ஏற்றி சிங்களத்துக்கு அனுப்புவீர்களா?" என்று கேட்டாள் குந்தவி.

"குழந்தாய், கேள்! என்னுடைய இளம் வயதில் எனக்கு எத்தனையோ மனோரதங்கள் இருந்தன. அவற்றில் பல நிறைவேறின. ஆனால், ஒரே ஒரு மனோரதம் மட்டும் நிறைவேறவில்லை. கப்பல் ஏறிக் கடல் கடந்து தூரதூர தேசங்களுக்கெல்லாம் போய்வர வேண்டுமென்று நான் அளவில்லாத ஆசை கொண்டிருந்தேன். அதற்கு என் தந்தை அனுமதிக்கவில்லை. நான் இந்தப் பல்லவ சிம்மாசனத்தில் ஏறிய பிறகு கடற்பிரயாணம் செய்வதென்பது முடியாத காரியமாகிவிட்டது. எனக்குக் கிடைக்காத பாக்கியம் என் பிள்ளைக்காவது கிடைக்கட்டும் என்றுதான் உன் தமையனை சிங்களத் தீவுக்கு அனுப்பினேன். இன்னும் எனக்கு எந்தச் சிறுபிள்ளையினிடமாவது அதிகமான பிரியம் இருந்தால், அவனையும் கடற்பிரயாணம் செய்து வரும்படி அனுப்புவேன்" என்றார் சக்கரவர்த்தி.

"அப்படியானால் உங்களுக்கு என்னிடம் மட்டும் பிரியம் இல்லை போலிருக்கிறது" என்று குந்தவி சொல்வதற்குள்ளே, "உன்னைக் கப்பல் ஏற்றி அனுப்ப எனக்குப் பூர்ண சம்மதம், அம்மா! ஆனால், நீ பெண்ணாய்ப் பிறந்து விட்டாயே, என்ன செய்கிறது? ஒவ்வொரு சமயம் நீ பிள்ளையாய்ப் பிறந்திருந்தது, உன் தமையன் பெண்ணாய்ப் பிறந்திருக்கக் கூடாதா? என்று எனக்குத் தோன்றுவதுண்டு" என்றார் சக்கரவர்த்தி.

"நான் மட்டும் ஆண் பிள்ளையாய்ப் பிறந்திருந்தால், உங்களை இத்தனை காலமும் இந்தச் சிம்மாசனத்தில் வைத்திருப்பேனா? கம்ஸன் செய்ததைப் போல் உங்களைச் சிறையில் போட்டுவிட்டு நான் பட்டத்துக்கு வந்திருக்க மாட்டேனா? அண்ணாவுக்கு ஒன்றுமே தெரியாது, சாது! அதனால் நீங்கள் சொன்னதும் கப்பலேறிப் போய்விட்டான்" என்று குந்தவி சொல்லிவிட்டு அந்த மலைக் கோயில்களைச் சுற்றி ஓடியாடிப் பார்க்கத் தொடங்கினாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சக்கரவர்த்தி, "வா குழந்தாய்! இன்னொரு சமயம் வந்து சாவகாசமாய்ப் பார்க்கலாம். ஊரில் ஜனங்கள் எல்லோரும் நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்" என்றதும் குந்தவி அவரண்டை வந்து, "அப்பா! இந்தக் கோயில்கள் இன்னும் அரைகுறையாகத் தானே இருக்கின்றன? மீண்டும் நீங்கள் ஆரம்பிக்கப் போகும் திருப்பணி வேலை இங்கேயும் நடக்குமல்லவா? இந்தக் கோயில்களுக்குள்ளே எல்லாம் என்னென்ன சுவாமியைப் பிரதிஷ்டை செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

சற்று தூரத்தில் பல்லக்கும் குதிரையும் ஒரு மரத்தடியில் நிறுத்தப்பட்டிருந்தன. அந்த மரத்தை நோக்கி இருவரும் நடக்கத் தொடங்கினார்கள். குந்தவியின் கேள்விக்குப் பதிலாகச் சக்கரவர்த்தி பின்வருமாறு சொன்னார் :

"இல்லை, குழந்தாய்! இந்தக் கோயில்கள் இப்படியேதான் பூர்த்தி பெறாமல் இருக்கும். இந்த இடத்

தைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் வேலை நடக்கும். குந்தவி! ஆயனர் என்ற ஒரு மகா சிற்பி இந்த ஊரில் இருந்தார். அவருடைய தலைமையில்தான் இந்தக் கோயில்களின் வேலை ஆரம்பமாயிற்று. அவர்தான் இவ்வளவு வரை செய்து முடித்தவர். பிறகு, அவர் சில துரதிர்ஷ்டங்களுக்கு ஆளானார். கொஞ்ச நாளைக்கு முன் சொர்க்கம் சென்றார். அவர் தொடங்கிய வேலையைச் செய்து முடிக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள் இப்போது யாரும் இல்லை; இனிமேல் வரப் போவதும் இல்லை!''

''ஆயனரைப் பற்றிக் கேட்டிருக்கிறேன் அப்பா! அவருடைய மகள்...?'' என்று, குந்தவி சொல்வதற்குள், ''அதோ யாரோ குதிரை மேல் வருகிறானே, யாராயிருக்கும்?'' என்றார் மகாமல்லர்.

பேச்சை மாற்றுவதற்காகவே அவர் சொன்னபோதிலும் உண்மையில் கொஞ்ச தூரத்தில், ஒரு குதிரை வந்து கொண்டுதானிருந்தது. சக்கரவர்த்தியும் குந்தவியும் மரத்தடிக்குப் போய் நின்றதும், அங்கே குதிரை வந்து நின்றதும் சரியாயிருந்தன.

குதிரை மேலிருந்தவன் விரைவாக இறங்கிப் பயபக்தியுடன் சக்கரவர்த்தியின் அருகில் வந்து ஓர் ஓலையை நீட்டினான்.

''அடியேன், தண்டம் ! உறையூரிலிருந்து வந்தேன்! அச்சுதபல்லவராயர் இந்த ஓலையை ஒரு கணமும் தாமதியாமல் சக்கரவர்த்தியின் திருச் சமூகத்தில் சேர்ப்பிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்'' என்றான்.

சக்கரவர்த்தி ஓலையை வாங்கிக்கொண்டார். அதில் என்ன எழுதியிருக்கிறதென்று பார்க்காமலே தூதனை நோக்கி, ''நீ போகலாம்! இதில் அடங்கிய விஷயத்தைப் பற்றிய கட்டளை நேற்றே அனுப்பிவிட்டோம்'' என்றார்.

தூதன் தண்டம் சமர்ப்பித்து விட்டுத் திரும்பி விரைந்து சென்றான்.

''நன்றாயிருக்கிறது அப்பா, நீங்கள் ராஜ்யபாரம் செய்கிற இலட்சணம்? ஓலை வந்தால் அதைப் படித்துக்கூடப் பார்க்கிறதில்லையா?'' என்று கோமகள் கேட்டாள்.

''என்னுடைய ஞான திருஷ்டியில் உனக்கு நம்பிக்கை இல்லை போலிருக்கிறது! இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறதென்று சொல்லட்டுமா? சோழராஜ குமாரன் விக்கிரமன் இந்தப் புரட்டாசிப் பௌர்ணமியன்று சோழ நாட்டின் சுதந்திரக் கொடியை உயர்த்த உத்தேசித்திருக்கிறான். அவனை என்ன செய்வது என்று தளபதி அச்சுத பல்லவராயன் கேட்டிருக்கிறான். நீ வேணுமானால் படித்துப் பார்!'' என்று ஓலையைக் குந்தவியிடம் கொடுத்தார்.

குந்தவி அதைப் படித்துவிட்டு வியப்புடன் சக்கரவர்த்தியை நோக்கினாள்.

''உங்களிடம் ஏதோ மந்திர சக்தி இருக்கிறது, அப்பா! அந்த மந்திரத்தை எனக்கும் சொல்லிக் கொடுக்கக் கூடாதா?'' என்றாள்.

சக்கரவர்த்தி குதிரையின் மேலும், குந்தவி பல்லக்கிலும் அமர்ந்தார்கள். வழியில் கோமகள், ''அப்பா! அந்த இராஜகுமாரனுக்கு என்ன அவ்வளவு அகந்தை? மாமல்ல சக்கரவர்த்தியின் கீழ் கப்பம் கட்டிக்கொண்டு வாழக் கொடுத்து வைக்க வேண்டாமா? அவனை நீங்கள் சும்மா விடக் கூடாது; தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும்!'' என்றாள்.

''ஆமாம், குழந்தாய், ஆமாம்! அவனைச் சும்மாவிடப் போவதில்லை. காஞ்சிக்கு அழைத்து வரச் செய்து, நானே தகுந்த தண்டனை விதிக்கப் போகிறேன்'' என்றார் சக்கரவர்த்தி.

(தொடரும்)

அச்சுதபல்லவராயர் இந்த ஓலையை ஒரு கணமும் தாமதியாமல் சக்கரவர்த்தியின் திருச் சமூகத்தில் சேர்ப்பிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்!



ஆன்மீக உலகில் அற்புத நூல்


ஒரு யோகியின் சுயசரிதம்

788 பக்கங்கள் ரூ. 100

பரமஹம்ஸ யோகானந்தர்

20ஆம் நூற்றாண்டில் வெளியான
சிறந்த 100 ஆன்மீக நூல்களில்
ஒன்றானதும், 22 மொழிகளில்
மொழிபெயர்க்கப்பட்டதுமான
உள்ளங்கவர் மகாகாவியம்





Public Satsanga by

Swami Shraddhananda Giri

(Yogoda Stasanga Society of India, Ranchi Ashram)

on

KRIYA YOGA TEACHINGS

of

Shri Shri Paramahansa Yogananda

at

Master Mahal

Theni Road, MADURAI - 625 016

on

Thursday, 20th September 2007

7.00 p.m.

All are welcome


நூல் கிடைக்குமிடங்கள்

யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா, ராஞ்சி-834 001. ✆ : 0651-2460071
யோகதா சத்சங்க தியான கேந்திரம், மதுரை ✆ : 0452-2384805 / 98421 79797
சென்னை-10. ✆ : 044-32623665 கோவை ✆ : 9443335856; சேலம் ✆ : 0427-2444304
திருச்சி ✆ : 0431-2431540 website : yssofindia.org; ysdkchennai.org

RAE-4075

எண்ணங்களாலும் பாதிப்பு!

இந்தக் காலத்தில் எல்லோரும் நோயும் நொடியுமாக அவஸ்தைப்படுகிற மாதிரி, நாற்பது, ஐம்பது வருஷங்களுக்கு முந்தியெல்லாம் இல்லை. காரணம் என்னவென்றால் இப்போது அநேகருக்கு மனஸில் நெறியில்லாமல் இருப்பதும், அநேக துராசாரங்கள் வந்திருப்பதும்தான். 'சாஸ்த்ராய ச ஸுகாய ச' என்பார்கள். அதாவது சாஸ்த்ர பிரகாரம் நெறியோடு, ஆசாரத்தோடு இருப்பதுதான் ஸௌக்யமாக, ஆரோக்யமாக இருக்கவும் உதவுவது என்று அர்த்தம். இப்போது எச்சில் தீண்டல் பார்க்காததாலேயே அநேக வியாதிகள், தொற்று நோய்கள் பரவிக்கொண்டு வருகின்றன. இப்படி வியாதிக்குக் காரணமாயிருக்கிற அநாசாரத்தை ஃபாஷன் என்ற பெயரில் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.



சரீர வியாதிதான் தொற்றுகிறது என்றில்லை. எண்ணங்களும் பிறத்தியாரை பாதிக்கவே செய்கின்றன. இப்போது ஸயன்ஸில் கூடச் சொல்கிறார்கள். 'மூளை எண்ணங்களாக வேலை செய்வதுகூட ஒரு எலெக்ட்ரிக் கரண்ட்தான்; சிந்தனா சக்திக்குப் (thought-power) பிறரையும் பாதிக்கிற தன்மை இருக்கிறது' என்று. அதனால் நாம் சரீரத்தையும், புத்தியையும் சுத்தமாக வைத்துக்கொண்டிருப்பதாலும் பிறரின் தேக மன ஆரோக்யங்களுக்கு உபகாரம் பண்ணியவர்களாக (அபகாரம் பண்ணாதவர்களாகவாவது) ஆகிறோம்.

நேராக மூளையைச் சுத்தப்படுத்திக் கொள்கிறேன் என்று உட்காருவதைவிட, நான் சொன்ன அநேக தினுஸான பரோபகாரங்களை - எல்லாவற்றையுமோ, சிலவற்றையோ நிறையச் செய்து கொண்டிருந்தாலே, தானாகச் சித்தம் சுத்தமாகிவிடும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

நா.வே.அருள்

அழைப்பு மணியில் ஒலிக்கும்
அவர்களின் ஆயுள் ரேகைகள்

கனத்த தோல் பைக்குள்
அடைத்து வைக்கப்பட்ட
அவர்களின் வாழ்நாட்களை
உங்கள்
அலட்சியப் பார்வையின் பொருட்டு
காட்சிக்கு வைக்கிறார்கள்

'சார் ப்ளீஸ்' என்று பேசத் தொடங்கி
'ஒருமுறை உபயோகிச்சுப் பாருங்க' வரை
நழுவும் நுகர்வோரை
வீசிப்பிடிக்க
வாயில் தொங்கும் வார்த்தைகள்

அவர்கள் மொழியிலிருக்கும்
மொத்த வார்த்தைகளுக்கும்
ஒற்றை அர்த்தம்:
'எப்படின்னா வாங்குங்க சார்!'

சிந்திச் சிதறும் சில்லறை வார்த்தைகளை
ஏந்திக்கொள்ள
பிச்சைக்காரத் தட்டுகளாய்
இருசெவிகள்

எக்ஸ்க்யூஸ் மி சார்!



சொன்னதையே சொல்லும்
நவீன ரோபோக் கிளிகளாய்

உலகத் தொழிற்கூடங்களின்
நவீன சிசுக்களாய்...

வலம் வந்து கொண்டேயிருக்கிறார்கள்

தட்டப்பட்ட கதவு
அடித்துச் சாத்தப்படுகிறபோதெல்லாம்
கதவிடுக்கில் மாட்டித்
துடித்துக்கொண்டிருக்கும்
அவர்களின் இதயங்கள்!

மேஷம்: பொன், பொருள் சேரும். நண்பர், உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகளைப் பற்றின மனக்கவலை தீரும். திருமணக் காரியம் கைகூடும். வழக்கு வெற்றி அளிக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். ராகு / கேது / சனி / குரு வழிபாடு செய்து வரவும்.

ரிஷபம்: சுப நிகழ்ச்சிகள் கைகூடும். கொடுக்கல், வாங்கல் நன்றாக இருக்கும். கல்வி வளம் சிறப்படையும். பணக் கஷ்டம் இருக்காது. வேலைப் பளு அதிகரிக்கும். பொறுப்பான பதவி கிட்டும். வழக்கு வெற்றி அளிக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வரவும்.

மிதுனம்: எதிரியை வெல்லும் வாரம். உத்தியோகத்தில் இடமாற்றம் ரெடி. திருமணம் கைகூடும். உடல்நலம் சீராகும். பணக்கஷ்டம் இருக்காது. குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். வீடு/வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். குரு வழிபாடு செய்து வரவும்.

கடகம்: சுபகாரியம் கைகூடும். உடல் நிலையில் கவனம் தேவை. படிப்பில் அக்கறை செலுத்தவும். யாருக்கும் ஜாமீன் போட வேண்டாம். வாகனத்தில் செல்லும்போது உஷார். கணவன் - மனைவி விட்டுக்கொடுத்துப் போவது நற்பலனைத் தரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வரவும்.

சிம்மம்: மன நிறைவான வாரம். வியாபாரத்தில் நல்ல ஆதாயம் கிட்டும். குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. சத்ரு தொல்லை விலகும். கல்வி வளம் மேலோங்கும். வழக்கு வெற்றி அளிக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. வீடு / மனை வாங்க நல்ல தருணம். நண்பர், உறவினர் மூலம் நற்பலன் கிட்டும். ராகு / கேது / சனி / குரு வழிபாடு செய்து வரவும்.

கன்னி: வேலையில் உயர்வு கிட்டும். வாக்கு நாணயம் காப்பாற்றப்படும். மன தைரியம், தன்னம்பிக்கை உண்டாகும். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். உடல் நிலை பாதிக்காது. தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். செலவுகள் சுபமானதாக இருக்கும். குரு / சனி வழிபாடு செய்துவர நன்மை ஏற்படும்.

நடக்குமென்பார்;



துலாம்: எடுத்த காரியம் கைகூடும். ஆடை, ஆபரணப் பொருட்கள் சேரும். வீடு / மனை மூலம் ஆதாயம் கிட்டும். புதிய தொழில் துவங்க நல்ல நேரம். நல்லவர்கள் உதவி கிட்டும். வேலையில் நல்ல பெயர் கிட்டும். திருமணத் தடை விலகி கைகூடும். எதிர்ப்பு, தொல்லை விலகும். வழக்கு வெற்றி பெறும். ராகு / கேது / வழிபாடு செய்துவர நற்பலன் பெருகும்.

விருச்சிகம்: நீண்ட தூரப் பிரயாணம் வந்து சேரும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். குழந்தைகளால் மன சந்தோஷம் கிட்டும். சுபநிகழ்ச்சி கைகூடும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். உடல்நலம் நன்றாக இருக்கும். வழக்கு வெற்றி அளிக்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு நற்பலனை அளிக்கும்.

தனுசு: பொன், பொருள் சேரும். கடல் கடந்த மனிதர்களால் அனுகூலம் ஏற்படும். செலவுகள் சுபமானதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. இல்லற வாழ்வு நற்பலனை அளிக்கும். சிலருக்குப் புத்திர பாக்கியம் கிட்டும். சாதுக்கள் தரிசனம் கிட்டும். நீண்ட நாள் பிரார்த்தனை நிறைவேறும். நண்பர் / உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். கல்வி வளம் மேலோங்கும். குரு வழிபாடு செய்து வர நன்மை உண்டாகும்.

மகரம்: வாக்குவாதம் தவிர்க்கவும். திருமணக் காரியம் நிறைவேறும். கொடுக்கல், வாங்கல் கவனம் தேவை. குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. பூமி மூலம் ஆதாயம் கிட்டும்.வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. கல்வியில் அக்கறை தேவை. நிதானத்துடன் செயல்பட்டால் நற்பலன் நடக்கும். வேலையில் பளு அதிகரிக்கும். எதிலும் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. ராகு / கேது / சனி வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

கும்பம்: உத்தியோகத்தில் மாற்றம் வரும். குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுத்து நடந்துகொள்வது நற்பலனை அளிக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். நீண்ட காலக் கடன் தொல்லை தீரும். வராத நிலுவைகள் வசூலாகும். படிப்பில் முன்னேற்றம் கிட்டும். தடை விலகித் திருமணம் நடக்கும். ராகு / கேது / சனி / குரு வழிபாடு செய்து வரவும்.

மீனம்: வீடு / மனை வாங்க ஏற்ற காலம். செலவுகள் சுபமானதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். எதிர்பாராத தனயோகம் கிட்டும். குழந்தைகள் மூலம் சந்தோஷம் கிட்டும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். பரிகாரம் தேவையில்லை. ●

நடக்கும்!

16.9.07 முதல் 22.9.07 வரை

தஞ்சை பரத்வாஜ்

பரத்வாஜ் பதில்கள்... அடுத்த வாரம்...

தித்திக்கும் திங்கள்

இது உங்கள் எண்ணங்களை எழுத்து களாக்கும் பகுதி. இந்த வார தித்திப்பைக் காண்போமா?



கலாசாரம்!

"விற்பனைப் போட்டியாலும், வாசகர்களைக் கவர்ந்து இழுக்கும் எண்ணத்தாலும் பெரும்பாலான பத்திரிகைகள் நமக்கென்று உள்ள கலாசாரத்திலிருந்து விலகி, தொலைவில் சென்று கொண்டிருக்கின்றன. கல்கி போன்ற மிகச் சில பத்திரிகைகளே எழுத்துகளிலும், எண்ணங்களிலும் அவற்றைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன. தவிர மற்ற பத்திரிகைகளின் தலையங்கங்கள், பிரச்னையைச் சொல்லி கேள்விக்குறியுடன் நிறுத்திக்கொள்ளும். கல்கி இவற்றிலிருந்து விடுபட்டுத் தீர்வை, முடிவைச் சொல்லும். இந்த வார பாகிஸ்தானின் தலைவலி தலையங்கம் அது போன்றதே" என்று மகிழ்கிறார் **வேலூர் வெ.ராம்குமார்.**

கனவு!

"இதற்கு முன்பு 'பார்த்திபன் கனவு' படித்ததில்லை. இப்போது படித்துக் கொண்டிருக்கிறேன். நான் மட்டுமின்றி, எனது பிள்ளைகளும் படித்துவிட்டு அமரர் கல்கியின் எழுத்து நடையில் லயிக்கிறார்கள். ஒவ்வொரு



தன்னம்பிக்கை!

"தராகவின் நடு நிலை பதில்கள் என்னை எப்போதுமே கவரும் அம்சம். ஒரு பக்கக் கதைகள், சின்னச் சின்னத் துணுக்குகளை வெளியிடுங்கள். வளரும் இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கை முக்கியம். அதிலும் போட்டிகள் அதிகரித்துள்ள இன்றைய காலகட்டத்தில் அவர்களை உற்சாகப்படுத்தி எதிர்கால பயத்தை நீக்க வேண்டியது அவசியம். அதற்காகத் தொடர் கட்டுரைகளை வெளியிடுங்கள். முக்கியமான ஒன்று, பக்கங்களை இன்னும் அதிகமாக்குங்கள். விலையைப் பத்து ரூபாயாக்கினாலும் வாங்குவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை" என்று சொல்கிறார் கும்ப கோணம் **ஜெகா.**





விளம்பரம்!

"விளம்பரங்கள் அதிகமின்றி கல்கியை நீங்கள் கொண்டு வருவது பாராட்ட வேண்டிய விஷயம். அரசியல் கார்ட்டூன்கள் மிகவும் பிடிக்கும். சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு, சிறுசிறு மருத்துவக் குறிப்புகளை எதிர்பார்க்கிறோம். கல்கியின் இந்தத் தரம் என்றும் தொடர வேண்டும்'' என்று வாழ்த்துகிறார் **கோயம்புத்தூர் ஆர்.நாராயணசாமி.**

கேள்விக்குறி இல்லை!

வாரமும் ஆசிரியர் பக்கம் அற்புதமாக அமைகிறது. மண்ணெண்ணெய் வண்டியை இழுக்கும் பெண்ணைப் பற்றியும் அதைத் தொடர்ந்து சொல்லியுள்ள கருத்துகளும் பெண்களின் சம உரிமை வேட்கையைக் கேலி செய்யும் ஆண்களுக்கு உறைக்கும் விதமாக உள்ளது'' என்று முடிக்கிறார் **திருநெல்வேலி ஆர்.ஜெயலெட்சுமி.**



ஊக்கம்!

"'உங்கள் ஊரில் கல்கி' என்ற திட்டம் மூலம் வாசகர்களைத் தேடி வந்து அவர்களுக்காக விழா நடத்தியதும், இப்போது இப்படித் தொலைபேசி மூலம் தித்திப்பை அளிப்பதும் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. வேறு எந்தப் பத்திரிகையும் வாசகர்களை இந்தளவுக்கு கௌரவப்படுத்தியதாகத் தெரியவில்லை. இடையிடையே கல்கியை வாங்குவதை நிறுத்தியிருந்த நான், இப்போது வாரம் தவறாமல் வாங்குவதன் காரணம் இந்த ஊக்கப்படுத்துதல்தான்!'' என்று நெகிழ்கிறார் **சேலம் செல்வராஜா.**

8 ஜகஜ்ஜால ஜோடி

சீக்ரெட் ஆஃப் சிறுநீரகம்

ஈராக்கின் எண்ணெயை உறிஞ்சும் ஜகஜ்ஜாலம் பற்றி, ஜார்ஜ் புஷ்ஷிடம் கேட்கலாம். அணைமேல் அணை கட்டி காவிரித் தண்ணீரை உறிஞ்சுவது குறித்து, கர்நாடகத்திடம் கேட்டறியலாம். இளிச்ச வாய் வாடிக்கையாளர்களை உறிஞ்சிக் கொழுக்கும் நரித்தனம் பற்றி, கிரெடிட் கார்டு நிறுவனங்களிடம் கேட்கலாம். ஆனால், நீங்கள் சாப்பிடும் உணவிலிருந்து, சர்க்கரை மற்றும் தாதுச் சத்துக்களை சமர்த்தாக உறிஞ்சும் விந்தையைப் பற்றி யாரிடம் கேட்பீர்கள்! எங்களின் பி.சி.டி. குழல்கள்தான், இந்த விந்தைமிகு தொழில் நுட்பத்தின் சொந்தக்காரர்கள்.



ஒற்றைச் செங்கல் முறையில் அடுக்கப்பட்ட பி.சி.டி. டிரான்ஸ்போட்டர்கள்!

கண்ணபிரானின் கைகளில் இருக்கும் புல்லாங்குழல், தனது துளைகள் வழியே இனிய இசையை வெளியேற்றுகிறது. எங்களின் பி.சி.டி. குழல்களோ, தமது துளைகளின் வழியே இனிய சர்க்கரையை உறிஞ்சிக்கொள்கின்றன. நெப்ரானின் முதல் பகுதி கிளாமருல்லா என்றால், அதைத் தாங்கிப் பிடித்திருக்கும் பவுமென் காப்ஸ்யூல் உருண்டையிலிருந்து தொடங்கும் இரண்டாவது பகுதிதான் பி.சி.டி. குழல்கள். இந்தச் சுருண்ட குழல்கள் அனைத்தும், எங்களின் கார்டெக்ஸ் பகுதியில்தான் காலங்காலமாக இருக்கின்றன. பி.சி.டி.யின் வட்ட வடிவமான உள்பகுதியில், செங்கற்களை ஒற்றை வரிசையில் அடுக்கியது போன்ற அமைப்பில் உறிஞ்சும் டிரான்ஸ்போட்டர் செல்கள் உட்கார்ந்திருக்கின்றன. இந்தச் செல்களின் வழியே உடலுக்குத் தேவையானதை உறிஞ்சும் பணியை இடைவேளை எடுத்துக்கொள்ளாமல் பி.சி.டி.க்கள் செய்து கொண்டிருக்கின்றன. விமானம் தரையிறங்கியதும் ஓடு பாதைக்கு விரைந்து வந்து, நம்மை விமான நிலையத்தின் லாபிக்கு அழைத்துச் செல்லும் வாகனங்களைப் போன்றவை இந்த டிரான்ஸ்போட்டர் செல்கள்.

இந்த டிரான்ஸ்போட்டர்கள் எவ்வளவு சர்க்கரையை உடலுக்குள் உறிஞ்சிக் கொள்ளலாம் என்பதற்கு ஓர் எல்லையை இறைவன் செட் செய்து வைத்திருக்கிறார். அதாவது உங்கள் ஒவ்வொருவரது இரத்தத்திலும் இருக்க வேண்டிய சர்க்கரையின் இயல்பான அளவு 110mg

அந்த

முதல் 120mg வரை இருக்கலாம். ஆனால், இந்த பி.சி.டி. குளுக்கோஸ் டிரான்ஸ்போட்டர்களிடம் 180mg வரை சர்க்கரையை உறிஞ்சும் கொள்திறன் இருக்கிறது. இரத்தத்தின் இயல்பான சர்க்கரை அளவையும் தாண்டி உறிஞ்சும் திறன் இந்தச் செல்களுக்கு அதிகமாக இருப்பதால், எல்லா சர்க்கரையும் இரத்தத்துக்கு வந்துவிடும். இப்போது நீங்கள் சர்க்கரைச் சத்து அதிகமுள்ள அரிசிச் சோற்றையோ, மாவுப் பண்டங்களையோ இஷ்டத்துக்கு மண்டுகிறவராக இருந்தால், உங்கள் உணவிலிருந்து பெறப்படும் உபரி சர்க்கரை அளவு, எங்கள் பி.சி.டி. குளுக்கோஸ் டிரான்ஸ்போட்டர்களின் உறிஞ்சும் திறனான 180mgயைவிட அதிகமாகிவிடலாம். இப்படி 180mgக்கும் அதிகமாக சர்க்கரை இருந்தால், பி.சி.டி. குழல்கள் கைவிட்ட நிலையில் அதனைத் தாண்டி உபரி சர்க்



சரியான வம்பு டாக்டரா இருக்காரே, மெடிக்கல் மேட்டர்ல அண்டை மாநிலம், அண்டை நாட்டை எல்லாம் இழுத்து விட்டுட்டாரே!

கரையானது சிறுநீர் வழியே வெளியேறத் தொடங்கும். பி.சி.டி.யின் இந்த உறிஞ்சும் கொள்திறன், சரியாக இயங்குவதால் மட்டுமே சிறுநீர்ப் பரிசோதனையின் மூலம் 1+, 2+, 3+ என்று உடலில் உள்ள சர்க்கரை அளவின் தீவிரத்தை அளவிட முடிகிறது. பி.சி.டி குழலைத் தவிர நெப்ரானின் வேறு எந்தப் பகுதியும் சர்க்கரையை உறிஞ்ச முடியாது. பி.சி.டி.யின் இந்த

ஓர் அவதாரம்!


ஸ்பெஷல் தன்மை யைத்தான் 'டி - மேக்ஸ்' (T-max - Transport - maximum) என்ற பட்டப் பெயரால் அழைக்கிறார்கள். பி.சி.டி.யின் இந்த 'டி.மேக்ஸ்' ஜாலம் மட்டும் இல்லையென்றால் இரத்தச் சர்க்கரையின் அளவையும், சிறுநீர்ச் சர்க்கரையின் அளவையும் பகுத்தறிய முடியாது.

அடுத்து சர்க்கரையையும், தாதுக்களையும் சுமந்து வரும் நீர் எப்படி உறிஞ்சப்படுகிறது!? 'வாட்டர் சேனல்ஸ்' எனப்படும் நீர் உறிஞ்சும் வழிகள், பி.சி.டி. ஹென்லே, டி.சி.டி.. ஆகிய மூன்று குழல் பகுதிகளிலுமே இருக்கின்றன. பிறகு அமினோ ஆசிட்ஸ் எனப்படும் புரத வகைகளை உள்ளே கூட்டிச் செல்ல, விசேஷ டிரான்ஸ்போட்டர்கள் பி.சி.டி.யில் உண்டு. உறிஞ்சும் அதிசயத்தில் இந்த மூன்று செயல்முறைகள் தவிர, பி.சி.டி.. மூக்கை நுழைக்கும் நான்காவது விவகாரம், இரத்தத்தின் அமிலத்தன்மையை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஒற்றைக் காலில் நிற்பதுதான்.

பொதுவாகக் குடிநீரின் காரத்தன்மை (அல்கலைன்) என்பது 7ph என்ற அளவில் இருக்க வேண்டும். இந்த அளவுக்குக் கீழே போனால், அது அமிலத்தன்மை (ஆசிட்ஸ்) நிறைந்த தரமற்ற தண்ணீர் ஆகிவிடுகிறது. இப்போது நீங்கள் அருந்தும் தண்ணீர் H_2O

டாக்டர் பி.ரவிச்சந்திரன்

என்ற ஒரே மூலக்கூறாக வயிற்றுக்கு வந்து, அங்கிருந்து எங்களை அடைகிறது. இப்போது H_2O-வை H+ எனும் அமிலத்தன்மை கொண்ட மூலக்கூறாகவும், OH(-)எனும் காரத்தன்மை கொண்ட மூலக்கூறாகவும் இரண்டாக உடைத்துப் பிரிக்கும் இரசாயன எதிர்வினை, எங்களது பி.சி.டி.யில் உள்ள செல்களில்தான் நடக்கிறது. இப்படி இரண்டாகப் பிரித்த பிறகு, ரத்தத்தில் OHயை கலந்துவிட்டு, H +ஐ சிறுநீருக்கு அனுப்பி விடும். இப்படித் தண்ணீரை இரண்டாகப் பிரிக்கும்போது, இதில் உள்ள ஆக்ஸிஜன், உடலின் ஒவ்வொரு செல்லும் உயிர்வாழ அவசியத் தேவை. அதேநேரம் இரத்தத்தில் உள்ள கார்பன் டை- ஆக்ஸைடின் ஒரு பகுதி OH-வுடன் கலந்து 'பை கார்பனேட்'டாக மாறுகிறது. கார்பன்டை ஆக்ஸைடு, OH இரண்டையும் சேர்த்து வைக்கும் (CO_2 + OH = பை கார்பனேட்) வேலையைச் செய்வதற்காகவே அவதாரம் எடுத்திருக்கிறது ஒரு என்சைம். (Enzyme- தமிழில் நொதியம் என்று சொல்லலாம்). அதன் பெயர் கார்பானிக் அன் ஹைட்ரேஸ் (Corbonic anhydrase).



“என் மனைவி சொல்லை மீறி என்னால நடக்க முடியாது...”

“ஏன்?”

“மீறிட்டா அப்புறம் என்னால நடக்க முடியாது...”


- கே.ஆனந்தன்

நானூறு ஆண்டுகளாகத் தனிநாடு கோரும் வட அயர்லாந்து போராளிகள் என்றாலும், நமது அண்டை தேச விடுதலைப்புலிகள் என்றாலும் தீவிரவாதிகள், போராளிகள் ஆகிய இரண்டு தரப்பும் கடவுளாக வழிபடுவது இந்த கார்பானிக் அன் ஹைட்ரேட்ஸ் என்சைமைத்தான். எதிரிகளிடம் மாட்டிக் கொண்டால் இவர்கள் விழுங்கும் கொடிய சயனைடு விஷம், ஓடோடிப் போய், காதலோடு தழுவிக்கொள்வது இந்த என்சைமைத்தான். சயனைடு விஷம். இந்த என்சைம் அணுக்களில் ஒன்றை மோதினாலும் மொத்த உடலின் இயக்கமும் சில நொடிகளில் செயலிழந்து, ரெடிமேட் மரணம் உடனே சம்பவிக்கும். இவ்வளவு சக்தி வாய்ந்த இந்த என்சைம், உங்கள் உடலில் உள்ள எல்லா செல்களிலும் இருக்கிறது. ஆனால், எங்களின் பி.சி.டி. குழல் பகுதியில்தான் பைகார்பனேட்டை உற்பத்தி செய்து, மொத்த உடலுக்கும் அளிக்கிறது. இந்த பைகார்பனேட்டின் வேலை, உடலில் உள்ள மொத்த இரத்தத்தின் காரத்தன்மையைச் சீரான அளவில் வைத்துச் சிக்கல் இல்லாமல் உங்கள் ஒவ்வொருவரது உயிரையும் காப்பது. அதாவது இரத்தத்தின் இயல்பான காரத்தன்மை 7.35ph. இது கீழே இறங்கினால் உங்கள் இரத்தத்தில் அதிகரிக்கும் அமிலத்தன்மையை நாங்கள் கழிவாக வெளியே தள்ள இந்த பைகார்பனேட் தான் காரணமாக இருக்கிறது.

இளைஞர்கள் அருந்தும் பீர், மது பானங்கள், அமிலத்தன்மைமிக்க குளிர் பானங்கள், பதப்படுத்தப்பட்ட உணவுகள், ஃபாஸ்ட் புட்கள் போன்றவை கடவுளின் கொடையான 'கார்பானிக் அன் ஹைட்ரேட்' என்சைமை, தனது கடமையைச் செய்யவிடாமல் தடுத்து விடுகின்றன. இதனால் இரத்தத்தில் அமிலத்தன்மை அதிகரிக்கிறது. அதிகரித்தால் என்னவாகும்...?

(இன்னும் பேசுவோம்)

விளையாடாதே கமலா!



''என்னங்க...! பேய்களுக்குக் கால்களே கிடையாதாமே!''

''விளையாடாதே கமலா... அப்புறம் எதுக்காக கொலுசு வேணும்னு நச்சரிக்கறே?''

- குட்டி பிரசன்னா



''படிக்கிற காலத்துல இருந்தே தலைவருக்கு பாஸ் பண்றது ஒரு பிரச்சனையாவே இருக்கு.''

''அப்படியா?''

''ஆமாம். இப்போ எப்படி டைம் பாஸ் பண்றதுன்னே தெரியலைன்னு புலம்பிட்டிருக்கார்.''

- வி.விக்னேஷ்குமார்


''இவ்வளவு பெரிய 'பில்டிங்' யாருடையது?''


''நம்ம டாக்டருடையதுதான்.''

''எப்படி இவ்வளவு சீக்கிரமா வாங்கினார்?''

''நல்லா இருக்கறவங்களுக்கெல்லாம் 'மெடிக்கல் சர்டிஃபிகேட்' கொடுத்துத்தான்.''

- மு.மணிவண்ணன்





''எப்படி கீர?''

''நல்லா கீரன்!''

''அட, உன்னை கேக்கலை, கீரை விலையைக் கேட்டேன்!''

- ஆர்.நாகலிங்கம்

டாக்டர் எம்.ஆர்.ஸ்ரீனிவாசன் - இந்திய அணுசக்தி கமிஷனின் தலைவராக இருந்து, தற்போது பிரதமரின் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவில் இடம்பெற்றிருக்கும் விஞ்ஞானி. நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் வசித்து வருபவர். அண்மையில் திருவல்லிக்கேணி கல்சுரல் அகாடமி ஏற்பாடு செய்திருந்த ஒரு நிகழ்ச்சியில் 'இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான அணுசக்தி ஒப்பந்தம்' குறித்து சொற்பொழிவாற்ற சென்னை வந்திருந்தார். அவரிடம் பேசினோம்...

அணு சக்தியைப் பயன்படுத்துவதற்கு அவசியமான யுரேனியத்துக்கு அமெரிக்கா போன்ற நாடுகளை நம்பியிருக்க வேண்டிய அளவுக்கு ஏன் தட்டுப்பாடு நிலவுகிறது?

''இயற்கைதான் காரணம். இந்தியாவில் ஒரு காலத்தில் வைரம் கிடைத்தது. இப்போது கிடைக்கவில்லை. இப்போது இந்தியாவின் பல இடங்களிலும் பெட்ரோல் கிடைக்கிறது. ஆனால், அதிக அளவில் யுரேனியம் கிடைக்கவில்லை. நம் நாட்டில் உள்ள அணுமின் நிலையங்கள் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது ஒரு பக்கம் என்றால், இன்னொரு பக்கம் மேகாலயாவில் யுரேனியம் இருக்கிறது. ஆனால், அந்தப் பகுதி மக்கள் யுரேனியத்தை எடுப்பதற்கு ஒத்துழைப்பு தராமல் எதிர்க்கிறார்கள். மேகாலயா மற்றும் ஆந்திராவில் கிடைக்கும் யுரேனியத்தைப் பயன்படுத்த முடியுமா என மத்திய அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அப்படிப் பயன்படுத்த ஆரம்பிக்கும்போது நிலைமை ஓரளவு சீராகும்.''

அணுமின் நிலையங்களால் கதிர்வீச்சு அபாயம் உள்ளதே?

''இன்று அந்த அபாயத்தைத் தடுக்கும் வகையில் அணுமின் நிலையங்கள் வடிவமைக்கப்படுவதால் அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். பிரான்ஸ் நாட்டின் மின்சாரத் தேவையில் எண்பது சதவிகிதம், அணுமின் நிலையங்களால்தான் ஈடுசெய்யப்படுகிறது. அங்கே கதிர் வீச்சு அபாயம் ஏதும் நிகழவில்லையே! நம் நாட்டிலேயே கல்பாக்கம், தாராப்பூர் அணுமின் நிலையங்களை எடுத்துக்கொண்டால் இதுவரை எந்தப் பிரச்னையும் வந்ததில்லையே!''

அணுக்கழிவுகளை அப்புறப்படுத்துவது என்றைக்குமே ஒரு பிரச்னையாகத்தானே இருந்து வருகிறது?



✱ டாக்டர் எம். ஆர். ஸ்ரீனிவாசன்

''யுரேனியத்தை ஒரு முறை பயன்படுத்திய பின், கழிவினை அப்படியே அப்புறப்படுத்தாமல், அதனை ரீ-பிராசஸ் செய்து பயன்படுத்த முடியும். அப்படிப் பயன்படுத்துவதால் இரண்டு விதத்தில் நன்மை. ஒன்று நாம் இறக்குமதி செய்ய வேண்டிய யுரேனியத்தின் அளவு குறையும். இன்னொன்று அணுக் கழிவுகளின் அளவும் கணிசமாகக் குறைந்துவிடும்.''

யுரேனியத்துக்கு மாற்றான தோரியம் நம் நாட்டில் அபரிமிதமாகக் கிடைக்கிறதே... அதைப் பயன்படுத்துவதில் என்ன தடை?

''தோரியத்தைப் பயன்படுத்துவதற்கான

தொழில்நுட்பம், யுரேனியத்துக்கான தொழில்நுட்பத்திலிருந்து முற்றிலும் மாறு பட்டது. தோரியத்தை முதலில் செறிவூட் டப்பட்ட யுரேனியமாக மாற்றி, அதன் பின்னரே பயன்படுத்த முடியும். இந்தச் செயல்முறை பக்குவப்படுத்தப்பட வேண்டும். தோரியத்தை நம் அணுமின் நிலையங்களில் பயன்படுத்த ஆரம்பிப் பதற்கு இன்னும் இருபது ஆண்டுகள் பிடிக் கும்.''

அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டால், இந்தியா அணு ஆயுதப் பரிசோதனை செய்யத் தடை வந்து விடுமா?

அம்சங்கள் குறித்தும் அப்போது அலசி ஆராய்ந்த பிறகே இறுதி முடிவு எடுக்க வழிவகை இருக்கிறது.''

இந்தியா அணு ஆயுதப் பரிசோதனை செய்யும் உரிமையை விட்டுக்கொடுப்பது ஆபத்து என்று சொல்லப்படுகிறதே?

''இந்தியா முதன்முதலாக 1975-ஆம் ஆண்டு அணு ஆயுதப் பரிசோதனை நடத்தியது. அடுத்து, அதாவது இருபத்து நான்கு ஆண்டுகள் கழித்து 1990-ஆம் ஆண்டில்தான் பரிசோதனை நடத்தியது. எனவே, அடிக்கடி அணுகுண்டு வெடித் துப் பரிசோதனை நடத்துவது என்பது இந்தியாவின் நோக்கமல்ல. ஒரு கட்

அணு ஒப்பந்த விவகாரம்...

விஞ்ஞானிகளை ஓரம்கட்டியதா மத்திய அரசு?

''123 ஒப்பந்தத்தில் அணு ஆயுதப் பரி சோதனை பற்றி எதுவும் குறிப்பிடப்பட வில்லை. ஆனால், அமெரிக்காவின் அணு ஆயுதச் சட்டத்தில், ஒரு சில குறிப்பிட்ட நாடுகள் தவிர மற்ற நாடுகள் அணு ஆயுதப் பரிசோதனை செய்தால் அந்த நாட்டுட னான ஒத்துழைப்பை நிறுத்த வழி இருக் கிறது. ஒப்பந்தத்தின் பதினான்காவது ஷரத்து, ஒப்பந்த முறிவு குறித்துப் பேசு கிறது. ஒரு வேளை இந்தியா அணு ஆயுதப் பரிசோதனை நடத்தினாலும், அந்தப் பரி சோதனை நடத்தப்படும் சூழ்நிலை, அதனை நடத்த வேண்டிய அவசியம், இந்தியாவின் அண்டை நாடுகளில் நிலவும் சூழ்நிலை, இந்தியாவின் பாதுகாப்பு குறித்த நிலைமை உள்ளிட்ட பல்வேறு

டத்தில் உலக நாடுகள் அனைத்தும் அணு ஆயுத உற்பத்தியை நிறுத்த வேண்டும். அதன் பிறகு படிப்படியாகத் தங்கள் வசமுள்ள அணு ஆயுதங்களை அழித்து விட வேண்டும்.''

அமெரிக்காவுடனான 123 ஒப்பந்த விஷ யத்தில் நாட்டின் அணுசக்தித் துறை விஞ்ஞானிகளை ஓரம்கட்டி, அவர்களது கருத்துகளுக்கு உரிய மதிப்பளிக்க மத்திய அரசு தவறிவிட்டது என்கிற விமர்சனம் குறித்து...

''அந்த விமர்சனம் தவறு. ஒவ்வொரு கட்டத்திலும் விஞ்ஞானிகளை மத்திய அரசு கலந்தாலோசித்தது.''

- எஸ்.சந்திரமௌலி

படம்: **ஸ்ரீஹரி**

அம்மா... அக்கா... மாதங்கி!

ஜார்ஜினா கந்தசாமி

தனிக் குடித்தனம் போன பின்தான் பிரச்னை ஆரம்பித்தது மாதங்கிக்கும் கேசவ்வுக்கும். முதலாம் ஆண்டு பொறியியல் கல்லூரியில் சேர்ந்த சில வாரங்களிலேயே இருவரும் இதயங்களைப் பரிமாறிக் கொண்டனர். நட்பும் காதலுமாய் இணைந்து வளர்ந்து செழித்த உறவு. இரு தரப்புப் பெற்றோரும்கூட முதலில் ஜாதி பார்த்துத் தயங்கிவிட்டுப் பின் வேறு வழியில்லாமல் தலையை ஆட்டிவிட்டனர்.

கேம்பஸ் இன்டர்வியூவிலும் இருவரும் வெற்றி பெற்று, நல்ல வேலைகளிலும் அமர்ந்ததும் திருமணம் நடந்தேறி தனிக்குடித்தனமும் வந்தாயிற்று.

அலுவலக நெருக்கடியில் இருவருக்குமே வேலைப்பளு அதிகம். இதனால் வீட்டுப் பொறுப்புகள் பூதாகாரமாய் விஸ்வரூபம் எடுக்கலாயின.

ஒரு நாள் காலை, கண்விழித்து எழுந்த கேசவின் குரல், ''மாதங்கி!'' என்று உரத்து ஒலித்தது. பதில் ஏதும் வராததால், கோபம் தலைக்கேற சமையல் அறைக்குச் சென்றவன், அங்கே அவளைக் காணாமல் முன்னறைக்குச் சென்றான். அங்கு மாதங்கி லாப்டாப்பின் முன் கவிழ்ந்திருந்தாள். மூச்சு வாங்க வந்து நின்ற கேசவை நிமிர்ந்து பார்த்தவள், கண்கள் விரிய,

''யேய், நீ எழுந்தாச்சா? ஃப்ரீயாயிருந்தால் கொஞ்சம் காஃபி கலந்து தர்றியா'' என்றாள்.

கேசவ் அதிர்ந்து போனான். இன்னமும் காஃபி கையில் வரவில்லையே என்ற கோபத்தில்தான் அவன் அவளைத் தேடி வந்திருந்தான். தன் வீட்டில் அம்மா, அக்கா இருவருமே தன்னைத் 'தாங்கு தாங்கு' என்று தாங்கியது மனத்தில் நிழலாடியது. இங்கே, கதையே மாறுகிறதே!

இருந்தாலும் கோபமும் மாறாமல், வியப்பும் கலையாமல், இரு உணர்வுகளும் கலந்த ஒரு குழப்பத்தில் ''காஃபி நீ கலக்கலையா?'' என்றான், புருவங்களை நெரித்தபடி.

''எங்கே! இதோ இந்த ப்ரொபோசலை முடிக்க வேண்டும். ராத்திரி ரெண்டு மணி வரையில் போராடிவிட்டு, கழுத்து வலி தாங்க முடியாமல் படுத்துவிட்டேன். இப்போ வேலை மும்முரத்தில் காஃபி வேண்டும் என்றுகூடத் தோன்றவில்லை. பார்த்தாயா? நீதான் எழுந்துட்டியே, பாலைச் சூடு பண்ணி காஃபி கலந்துடு.''

''எனக்கு இன்னிக்குச் சீக்கிரம் போகணும்.''

''ஓ, அப்போ கவலைவிட்டது! நீ கேண்டீனிலேயே சாப்பிட்டுக்கோ. நானும் ஏதாவது வழியில் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு மறுபடி லாப்டாப்பில் நுழைந்துவிட்டாள் மாதங்கி.

இதற்காகவா திருமணம் செய்து கொண்டோம்? என்னென்ன கற்பனைகள், எவ்வளவு எதிர்பார்ப்புகள்! கேசவ் குமைந்தான். மாதங்கி மட்டும் எப்போதும் போல்தான் இருந்தாள் - சிரிப்பும் விளையாட்டுமாய். அவன்மீது அன்பைப் பொழிந்தாள்.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை

இருந்தும் தனிக்குடித்தனம் வந்த இந்த இரண்டு மாத காலத்தில் ஏதோ என்னவோ, நெருட ஆரம்பித்திருந்தது மட்டும் உண்மை.


அன்று அலுவலகத்தில் கம்ப்யூட்டரின் மீது கண்கள் பதிந்திருந்தாலும் மனம் அலை மோதியது கேசவுக்கு. மாலை சென்று மாதங்கியைப் போய்ப் பிக்-அப் செய்ய வேண்டும் என்ற எண்ணமே கசந்தது போலத் தோன்றியது. காஃபி ஸ்டேஷனில் பேப்பர் கப்பை பிடித்தபடி நின்றுகொண்டிருந்தபோது இடுப்பில் மொபைல் அதிர்ந்தது. சட்டென்று எடுத்துப் பார்த்தான் - மெஸெஜ். அன்று அவளுக்குத் தாமதமாகும் என்றும் கேசவ்வை வீட்டுக்குச் செல்லும்படியும் கூறியிருந்தாள்.

உள்ளே பொங்கிய வெள்ளம் வடிந்தது போன்ற உணர்வில் வேகமாய் அலுவலக லாபிக்கு வந்தவன், மணியைப் பார்த்தான். மாலை ஐந்து. சட்டென்று அக்காவின் நம்பரைச் செலக்ட் செய்து அழுத்தினான்.

''அக்கா, வீட்டில் இருப்பாயா? உன்னைப் பார்க்கணும்.''

''ஓ, வாயேன்!'' என்றாள் கமலி.

தூரத்தில் அலைகளின் இடைவிடாத இரைச்சல். கையில் மணலை எடுப்பதும், விரல்களினூடே ஓடவிடுவதுமாய்க் குனிந்திருந்த தம்பியைக் கவலையோடு பார்த்தாள் கமலி.



அவனை விடவும் ஐந்து வயது மூத்தவள். மாதங்கியை அவள் நன்கு அறிவாள் - சுட்டிப் பெண், கெட்டிக்காரி, துணிச்சல்காரி; கேசவுக்கு ஏற்றவள் என்று அவள் கருதியிருந்தாள். இன்று ஏதோ பேச வேண்டும் என்று கேசவ் கூறியபோது உடனே எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்து விட்டு அவனுடன் பீச்சுக்கு வந்தாள். அவள் வீட்டில் மாமியார், மாமனார் என்று அவ்வளவு சுதந்திரமாகப் பேச முடியாதுதான்.

அவன் இதுவரை தன்னிடம் கொட்டியதையெல்லாம் மெல்ல மனதுக்குள் ஓட்டிப் பார்த்தாள் கமலி. வருத்தம், கவலை, குழப்பம் - இதில் குழப்பமே அவனுள் மேலோங்கியிருந்தது.

''சரி, அவளை உனக்குப் பிடிச்சிருக்கா, இல்லையா?'' என்றாள் சட்டென்று.

''என்னக்கா நீ? கண்டிப்பாகப் பிடிச்சிருக்கு. அவளில்லாமல் ஒரு வாழ்க்கையை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது.''

''ம், அப்போ சரி. இப்போ என்ன பிரச்னை?''

''இதுதான் அந்த வாழ்க்கையா என்று தோன்றுகிறது. எங்கோ ஏமாந்துவிட்டது போல உணர்கிறேன்.''

''சரி, நீ கற்பனை செய்திருந்த வாழ்க்கை என்ன?''

''என்னவா? ஒரு சாதாரணக் குடும்ப வாழ்க்கை. ஒன்றாகச் சாப்பிட்டுத் தூங்கி, ஓய்வு நேரத்தில் வெளியே சென்று... பின்னர் காலப்போக்கில் குழந்தைகள் பெற்றுக் கொண்டு... இதுதான்! வேறு என்ன அசாதாரணமாகக் கற்பனை செய்து கொண்டிருக்கப் போகிறேன்?'' கேசவுக்குக் கோபம் வரும்போல் இருந்தது. கமலி மெல்ல அவனது கரத்தை வருடினாள்.

''கேசவ்! சாதாரணக் குடும்ப வாழ்க்கை என்று இப்போது வர்ணித்தாயே, அதை எங்கே பார்த்தாய்?''

''ஏன், நம் வீட்டில், அக்கம் பக்கத்தில்... உன் வீட்டில்!''

''ஆ! அதுதான் விஷயம். அம்மாவோ, நானோ எப்போதாவது வேலைக்குப் போயிருக்கிறோமா?''

தயங்கியபடி, ''இல்லை'' என்றான்.

''அப்போ, மாதங்கி எங்களைப் போல இல்லை; இருக்கவும் முடியாது, இல்லையா?'' என்றாள். கேசவ் கண்கள் விரிய, ''கமலிக்கா!'' என்றான்.

''ம் கேசவ்! மாதங்கி ஒரு புரொஃபஷனல் இன்ஜினீயர். மாதம் அறுபதாயிரத்துக்கும் மேல் உன்னைப்போலவே சம்பாதிக்கிறாள். உனக்கு வேலையில் இருக்கும் அதே டென்ஷன், அதே எரிச்சல் அவளுக்கும் இருக்கும் இல்லையா? அதில் கவனம் சென்று கொண்டிருக்கும்போது, எங்களைப் போல ஒரு சாதாரணக் குடும்பப் பெண்ணாக அவளால் எப்படி இருக்க முடியும்?''

''சம்பாதிக்கும் திமிர் என்கிறாயா?'' - கோபத்துடன் கேட்டான் கேசவ்.

''திமிர் இல்லை. பொறுப்பு, கனம், ரெஸ்பான்சிபிலிட்டி - சுமை.''

கேசவ் பதில் கூறவில்லை. அவன் கரங்கள் மணலை அளைந்தன.

''அவள் உன்னை அலட்சியம் செய்கின்றாள். உன் தேவைகளைக் கவனிக்கவில்லை என்பது உன் குறை, இல்லையா?''

''ம்... ம்...'' முனகல்தான் பதிலாக

நான் காத்தவராயன்!

உற்சாகத்தில் இருக்கிறார் கரண். ''இருக்காதா பின்னே! ஏனோ தானோன்னு ஏதேதோ படங்கள், கேரக்டர்கள்னு நடிச்சிட்டிருந்தேன். சட்டுன்னு ஒரு நாள் நின்னு யோசிச்சப்பதான் தோணுச்சு, நாம போற பாதை சரியான்னு. அப்பத்தான் முடிவெடுத்தேன் - ஒரு லட்சியம் தேவைன்னு. கதாநாயகனா மட்டும் பண்றதுன்னு எனக்குள்ள ஒரு திட்டம் போட்டு வாய்ப்புக்காக காத்திருந்தேன். சும்மா இல்ல, தவம் மாதிரி இருந்தேன். மெல்ல மெல்ல எனக்கான விடியல் தென்பட ஆரம்பிச்சது. கொக்கி, கருப்பசாமி குத்தகைதாரர், தீ.நகர்னு தொடங்கி இதோ, இப்ப 'காத்தவராயன்' ஆரம்பிச்சாச்சு. ஒரு படத்துக்கும் அடுத்த படத்துக்கும் சரியான

வந்தது அவனிடமிருந்து.

''அந்த வீட்டில் நீங்கள் ரெண்டு பேர் தான் இருக்கிறீர்கள். யார், யாரை கவனித்துக் கொள்ளணும்?''

''யார், யாருக்குத் தரணும்?'' என்ற தனது காஃபி வாசகம், சற்றே மாறி எதிரொலிப்பது போலத் தோன்றியது அவனுக்கு.

''ஒரு வீட்டின் வேலைகள் என்னென்ன என்று உனக்குத் தெரியுமா?''

''ம்ஹூம்.''

''இதுதான் - நாங்கள் உன்னை அப்படி வளர்த்து விட்டோம். இதோ, என்னை எடுத்துக்கொள். நான் வேலைக்குப் போக வில்லைதான். ஆனால், வீட்டு நிர்வாகமே ஒரு முழு நேரப் பொறுப்பாக உள்ளது. இத்தனைக்கும் வேலையைப் பகிர்ந்து கொள்ள அவரோட அம்மா, அப்பா இருவரும் இருக்கிறார்கள். ஆனால், உன் வீட்டில் அந்த வேலைக்காரப் பெண்ணைத் தவிர வேறு யாருமில்லை. எல்லாமே மாதங்கிதான் செய்கிறாள். நீ ஏதாவது செய்வதுண்டா?''

''ம்ஹூம்'' மாதங்கி வெளிப்படையாய்க் கேட்டும் தான் உதவுவதைத் தவிர்த்து விட்ட சமயங்கள் அவனுக்குள் குறுகுறுத்தன.

''சில சமயங்களில் வேலைப் பளுவினால் அவளால் செய்ய முடியாமல் போகலாம். சரி, அவளை நீ எப்படிக் கவனித்துக் கொள்கிறாய்?''

கமலியின் 'நீ'யில் அழுத்தம் இருந்தது.

''ம்?'' கேசவ்வின் புருவங்கள் சுருங்கின. ''ஏதாவது எனக்குப் பிடித்திருப்பதை வாங்கித் தருகிறேன் - புடைவை ஜுவெல்லரி, சின்னச்சின்ன பரிசுகள். லைப்ரரி போனால் புத்தகம் எடுத்து வருகிறேன், வேறு என்ன?''

''ம்... ம்... துணி மடிப்பது, பேப்பர், மாகசின் எடுத்து அடுக்கி வைப்பது... காய்கறி வாங்குவது?''

''இல்லையில்லை... இதெல்லாம்...''

''இதெல்லாம் லேடீஸ் டிபார்ட்மெண்ட், அப்படித்தானே?'' இப்போது கமலி வாய்விட்டுச் சிரித்துவிட்டாள்.

''மாதங்கி ஒரு சராசரிப் பெண்ணாக இருக்க வேண்டும் என்கிறது உன் கற்பனை. நிஜம் அதுவல்ல. அவள் வேறு விதம். உன்னுடன் இணையாக நான்கு வருடங்கள் படித்தவள்தானே அவள்? படிக்கும் காலத்தில் இருந்த புரிதலும், இனிமையும் இப்போது எப்படிக் காணாமல் போகும்? எதிர்பார்ப்புகளுக்கும், நிதர்சனத்துக்கும் இடையே உள்ள ஒரு இடைவெளிதான் இந்தக் குழப்பம்! நன்றாக யோசி. அவளுடன் கலந்து பேசு. ஒன்றாக இருக்கவும், ஓய்வு நேரத்தை இனிமையாகக் கழிக்கவும் திட்டம் போடுங்கள். வீட்டு வேலையோ, ஒருவரை மற்றவர் கவனிப்பதோ, தேவையின் அடிப்படையில் இருக்கட்டும், ஆண் - பெண் அடிப்படையில் அல்ல.''

ஜெண்டர்! கமலி ஜெண்டர் பேசுகிறாள்! கார்ப்பரேட் உலகில் ஜெண்டர் பற்றித் தெரியாதவனல்ல கேசவ். அது வீட்டு உலகிலும் உள்ளது என்பதைப் புரிந்துகொள்ளத்தான் சற்றே தாமதமாகி விட்டது.

முகம் விரியப் புன்னகைத்தபடி, ''ரொம்ப தாங்க்ஸ்கா, போலாமா? உன் வீட்டில் தேடுவார்கள்'' என்றான் கேசவ். ●

இடைவெளி மட்டுமல்ல, கேரக்டர் முதற்கொண்டு எல்லாமே வேறுபட்டிருக்கணும்னு விரும்பறவன் நான். என் மனசுக் கேத்தபடி 'காத்தவராயன்' அமைஞ்சிடுச்சு. இவன் தன் ஊர் மக்களை மட்டுமல்ல, தயாரிப்பாளரையும் நிச்சயம் காப்பாத்துவான். தேவை ரசிகர்களோட வாழ்த்துக்கள்தான். அது நிச்சயம் எனக்கு இருக்கு. இல்லேன்னா இவ்வளவு தூரம் வந்திருக்க முடியாதே!" என்கிறார் கரண். கலக்குங்க பாஸு!

– ரேவதி



சுஜாதா

வாரம் ஒரு பாசுரம் 49

என்ன செய்யப் போகிறாய்?



அழகான பெண்களைப் பெற்ற தாய்மார்களின் இன்றைய கவலைகள் என்னென்ன? அவர்களில் பக்தியுள்ள தாய்மார்கள் பகவானிடத்தில் எப்படி வேண்டிக்கொள்வார்கள்? இவளுக்கு என்னதான் வைத்திருக்கிறாய், நல்ல புத்தியைக் கொடு.' இப்படியெல்லாம் மனதில் வேண்டிக்கொள்வது சகஜமே. தாய் மார்களின் கவலைகள் நூற்றாண்டுகள் கடந்தாலும் மாறாது என்பதற்கு உதாரணங்கள் பல பிரபந்தத்தில் உள்ளன.

சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் சாலையில் கோவளம் அருகில் எட்டாம் நூற்றாண்டுக் கோயில் உள்ளது. அதன் பெயர் திருவிடவெந்தை. சுருக்கமாக இன்று திருவடந்தை என்று சொல்கிறார்கள். மார்பில் லட்சுமிக்கு இடம் தந்த தந்தை போன்ற திருமாலின் உறைவிடம் என்று பொருள். அதில் லட்சுமி வராகப் பெருமாளும் அகிலவல்லி நாச்சியாரும் எழுந்தருளியுள்ளனர்.

திருமங்கையாழ்வார் இந்தக் கோயிலுக்கு வந்திருக்கிறார். பெரிய திருமொழி இரண்டாம் பத்து ஏழாம் திருமொழியில் பத்து அற்புதமான பாடல்கள் திருவிடவெந்தையைப் பற்றிப் பாடியிருக்கிறார். 'என் மகளுக்கு என்னதான் நீ தீர்மானித்திருக்கிறாய்' என்று பகவானைப் பார்த்து ஒரு தாய் கேட்பதாகப் பாடல்கள் அமைந்துள்ளன. ஓர் உதாரணம் பாருங்கள்.

'திவளும் வெண் மதிபோல் திரு முகத்து
அரிவை
செழும் கடல் அமுதினில் பிறந்த
அவளும் நின் ஆகத்து இருப்பதும்
அறிந்தும்,
ஆகிலும் ஆசை விடாளால்;
குவளை அம் கண்ணி, கொல்லி
அம் பாவை -
சொல்லு; நின் தாள் நயந்திருந்த
இவளை, உன் மனத்தால் என் நினைந்து
இருந்தாய்?
இடவெந்தை எந்தை பிரானே!'


(அரிவை - பெண், ஆகம் - உடம்பு,
நயந்து - விரும்பி)

'சந்திரன்போல முகத்தை உடைய இந்தப் பெண், அமுதத்தில் பிறந்த மகாலட்சுமி உன் உடம்பில் இருப்பதை அறிந்தும் உன்மேல் ஆசையை விடவில்லை. குவளை மலர்க் கண்ணும் கொல்லிப்பாவை போல உடலமைப்புமாக நிற்கிறாள். சொல்லு! உன்னை விரும்பும் இவளை என்ன செய்யப் போகிறாய் திருவிடவெந்தைப் பிரானே!'

என்ன செய்வது? ஒரு என்.ஆர்.ஐ. மாப்பிள்ளையைப் பார்த்து அமெரிக்காவுக்கு அனுப்பிவிடட்டுமா என்று பெருமாள் கேட்கலாம்!

(படிக்கலாம்)

* கமிட்டிக்கு உரியவர்



தராசு

● ஜி.மாரியப்பன், சின்னமனூர்.

? சன் டி.வியில் சமீப காலமாக, ஜெ. பற்றிய செய்திகளை விவரமாகக் காட்டுகின்றனரே, கவனித்தீரா?

! சன் டி.வி இதுநாள் வரை செய்து வந்த கலைஞர் பிரசாரப் பணியை, இனி கலைஞர் டி.வி ஏற்றுக்கொண்டு விட்டதால், சன் டி.வி தன்னை நடுநிலை சேனலாகக் காண்பித்துக்கொள்ள நினைப்பது இயல்பே. ஆனால், கலைஞர் டி.வியின் ப்ரீவியூ காட்சிகள், கலைஞரைத் திருப்திப்படுத்தவே தயாரிக்கப்பட்டவை போலத் தோன்றுகின்றன. இது புத்திசாலித்தனம் அல்ல.

● ஜே.துரைராஜ், சென்னை - 116.

? வானதி திருநாவுக்கரசுவின் வெற்றிக்கு யார் காரணம்... 1. கல்கி (கிருஷ்ணமூர்த்தி) 2. ஆச்சி (காளியம்மை)?

கூவத்தைச் சுத்தப்படுத்த மாநகராட்சியால் முடியாதா?




* வெற்றி வீரர்!

! இருவருமே காரணம்தான். 'கல்கி' ஊக்குவித்தார்; ஆச்சி பக்கபலமாக நின்றார். இவற்றை விடவும் அவரது அயராது உழைப்பு, சோதனையைக் கண்டு தளராத தன்னம்பிக்கை முக்கிய காரணங்கள்.

● கே.கே.வெங்கடேசன், சென்னை-37.

அமெரிக்காவுடனான அணு ஆயுத ஒப்பந்தத்தை முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் வரவேற்றுள்ளாரே?

! அமெரிக்காவுடன் நாம் செய்து கொண்டு இருப்பது அணு ஆயுத ஒப்பந்தம் அல்ல; அணு சக்தி ஒப்பந்தம். அமெரிக்க ஒத்துழைப்பை வரவேற்கலாம். ஆனால், ஒப்பந்தத்தின் ஷரத்துகள் பல, மிகவும் கடுமையானவை. நமது அணு ஆயுதச் சோதனைக்கு, தயாரிப்புக்குத் தடை விதிக்கின்றன. இது நமது சுதந்திரத்தைப் பாதிக்கும் என்பதால்தான் பி.ஜே.பி.யும், இடதுசாரிகளும் இதனை எதிர்க்கின்றனர். அப்துல் கலாமை, தற்போது உருவாகியுள்ள ஒப்பந்த பரிசீலனை கமிட்டியில் சேர்த்துக்



* கண்டுபிடிப்புக் காப்புரிமை!

* இனியும் அப்படித்தான்!

* கௌரவ டாக்டர்!

கொண்டிருக்கலாம்.

● **அ.யாழினி பர்வதம், சென்னை - 78.**

? "மகாபலிபுரம் இடையாது; மாமல்லபுரம் என்பதே சரி" என முதல்வர் சொல்கிறாரே...?

! அவர் சொல்வது சரிதான். ஆனால், தம்முடைய கண்டுபிடிப்பு என்பதுபோல அவர் பேசியது சரியல்ல. மாமல்லபுரம் பற்றி 'பார்த்திபன் கனவு' தொடரில் இந்த வாரம் வந்துள்ளதைப் படியுங்கள். அது 1942ல் எழுதப்பட்டது!

● **அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி - 21.**

? "சட்டத்துக்கு உட்பட்டுச் செயல்படுவது எந்த விதத்திலும் கிரிமினல் குற்றம் ஆகாது" என ஜெயலலிதா கூறியிருப்பது எதைக் காட்டுகிறது...?

! அவர் சட்டத்தை மதிக்கும் அளவு தர்மத்தை மதிப்பதில்லை என்பதையும் குயுக்தி படைத்த வழக்குரைஞர்களின் துணையுடன் சட்டத்துக்கு உட்பட்டு அதர்மம் செய்யலாம் என்பதையும் காட்டுகிறது!

● **பா.க.மணிவண்ணன், திருப்பூர்.**

? பா.ம.க., தி.மு.க. கூட்டணியை விட்டு வெளியே வருவது எப்போது?

! வெளிவருவதில் ஆதாயம் இல்லை. ஏனெனில் அது மத்திய அரசையும் பாதிக்கலாம். ஆனால், வெளிவருவதாகப் பூச்சாண்டி காட்டுவதில் நிறைய ஆதாயங்கள் உள்ளன. அது பா.ம.க.வின் தனித்தன்மையை உறுதி செய்வதால்! எனவே இந்நிலை அடுத்த தேர்தல்வரை தொடரும்.

● **இரா.கல்யாணசுந்தரம், அனுப்பானடி.**

? "மந்திரி பதவி எனது உரிமை; மத்திய அரசிடம் பிச்சைக் கேட்கவில்லை" என்று சிபு சோரன் கூறுகிறாரே!

! பாவம், மந்திரி பதவி அளிப்பது பிரதமரின் உரிமை என்கிற அடிப்படை விஷயம்கூடத் தெரியாமல் புலம்புகிறார்.

● **என்.கோமதி, நெல்லை - 7** ★

? மகாராஷ்டிராவின் விதர்பா பகுதியில் மத்திய அரசால் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட 'செக்' பணமில்லை எனத் திரும்பி விட்டதே...?

! பட்டினிச் சாவைச் சந்தித்து வாடும் குடும்பங்களுடைய வெந்த புண்ணில் வேல்! நிவாரண திட்டங்கள் எப்படி முன் யோசனையே இன்றித் தீட்டப்பட்டு வெற்றுவேட்டாக முடிகின்றன என்பதற்கு மற்றும் ஓர் உதாரணம்!

● **எல்.மாறன், மேல்பட்டி.**

? அஞ்சலை, ரஞ்சிதம், ராக்காயி அரசுக்குச் செலுத்தும் மறைமுக வரிப் பணத்தில் வசதியாய் அரசு மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் ஒரு வருடத்துக்குக்கூட கிராமங்களுக்குச் சென்று பணி புரிய மாட்டார்களாமே?

! இவ்விஷயத்தில் அமைச்சர் அன்புமணி காட்டியுள்ள விவேகத்துக்கு ஒரு கௌரவ டாக்டர் பட்டமே தரலாம். மாண

❐ **ரூ 100 பரிசு பெறுபவர்:**

ஆர்.நாகராஜன்,
சென்னை - 117



★ சட்டத்துக்குள் வட்டம்!



★ அறியாமைப் புலம்பல்

வர்கள், மனிதாபிமானம் உள்ள டாக்டர்களாக உருவாகலாம். அடிப்படையான சேவை உணர்வை ஏற்று, சில்லறை வேறுபாடுகளைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.

● வே.நா.கதிர்வேல், வேலூர் - 6.

? குஜராத்தில் உள்ள சூரத் நகரில், கிருஷ்ண ஜெயந்தி விழாவையொட்டி பக்தர்களுக்கு வழங்கப்பட்ட டீ-ஷர்ட்களில், முதல்வர் நரேந்திர மோடியை கிருஷ்ணராகச் சித்திரிக்கும் படம் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டதாமே?

! தம்மை யார் யார், எப்படி எப்படியெல்லாம் அவமானப்படுத்த முயன்றாலும் கிருஷ்ணா always had the last laugh! இனியும் அப்படித்தான் நடக்கும்.

● ஆர்.நாகராஜன், சென்னை - 117

? சர்வாதிகாரி முஷாரஃப்பும், ஜனநாயகம் விரும்பும் பேனசீரும் கூட்டணி அமைப்பதில் யாருக்கு லாபம்?

! அமெரிக்காவுக்கு! ஜனநாயக மேல்பூச்சில் சர்வாதிகாரம் தொடரும் என்பதால்.

● கே.என்.பாலகிருஷ்ணன்,
சென்னை - 91.

? கூவத்தைச் சுத்தப்படுத்த மாநகராட்சியால் முடியாதா...?

! முடியாது. சுவாமி சத்ய சாயிபாபா சுத்தப்படுத்திக் கொடுத்தாலும் மீண்டும் அசுத்தமாகத்தான் முடியும் - வரலாறு காணாத வேகத்துடன் பாதாளச் சாக்கடை சீர்திருத்தங்களை நிகழ்த்தினாலொழிய!

★ ரூ 50 பரிசு பெறுபவர் :
என்.கோமதி,
நெல்லை - 7

● வெ.கல்யாணி,
திருநெல்வேலி - 11.

? மத்திய அமைச்சர் பிரியரஞ்சன்தாஸ் முன்ஷி, நெடுமாறனைத் தவிர்க்கும் பொருட்டே மக்கள் தொலைக்காட்சி ஆண்டு விழாவுக்குக் கடைசி நிமிடத்தில் வராது இருந்தார் என்கிற செய்தி...?

! இலங்கைத் தமிழர்களுக்கு மருந்துகள் எடுத்துப் போவதாகச் சொல்லிக்கொண்டு ஈழம் செல்லும் நெடுமாறன், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்பது அவரே பெருமைகொள்ளும் விஷயம். எனவே, 'அவரைச் சந்திப்பது தர்மசங்கடம்' என்று மத்திய அமைச்சர் கருதியிருந்தால் நியாயமே. ஆனால், உள்துறை அமைச்சரும், அமைச்சரவையும் பிரச்னையைச் சந்திக்க வேண்டுமேயொழிய தவிர்க்கக் கூடாது.

● வே.சித்ரா, கும்மிடிப்பூண்டி.

? புதிய கட்சி துவங்கிய சரத்குமாருக்கு கருணாநிதி வாழ்த்துத் தெரிவித்தது எதைக் காட்டுகிறது?

! அரசியல் பண்பாடு அடியோடு மறைந்துவிடவில்லை என்பதை.

● வி.எஸ்.ஸ்ரீனிவாசன், சோழவந்தான்.

? எத்தனையோ விதமான உலகப் பற்றுகளுக்கு மனிதன் ஆளாவது ஏன்?

! திருக்குறளில், 'அவா அறுத்தல்' அதிகாரம் எண் 37 - முதல் குறளையும் கடைசி குறளையும் படித்துத் தெளிவு பெறுவோம். ○



* கச்சேரி மேடை

'செப்டெம்பர் மாதத்தில் ஒரு தீபாவளி' என்று கொண்டாடும் அளவுக்கு இருந்தது அந்தத் தனியாவர்த்தனம்! டெல்லி சாய்ராமின் மிருதங்க வாசிப்பு, அவர் திருவாரூர் பக்தவத்சலத்தின் சிஷ்யர் என்று தீர்மானமாகப் பிரகடனம் செய்ய, பிரசன்னாவின் கடம் வெளிப்படுத்திய ஓசை வேறுபாடுகள் அவரை வி.சுரேஷின் சிஷ்யராகக் காட்டிக் கொடுத்தன.

இந்த இரண்டு கலைஞர்களும் சேர்ந்து, வேறு இரு சக கலைஞர்களுக்கு விருது கிடைத்த மகிழ்ச்சியைத்தான் தீபாவளியாகக் கொண்டாடினார்கள். சென்னை மயிலாப்பூர் பாரதிய வித்யா பவனில் கடந்த செப்டம்பர் 9 அன்று நிகழ்ந்த அந்தக் கொண்டாட்டத்தில், பிரதான கலைஞர் ரஞ்சனி ஹெப்பாரின் எழிலார்ந்த இசை சஞ்சாரங்கள், ஆர்ப்பாட்டமின்றி உயர்ந்து ஒளிசிந்தும் அவுட் வாணங்களாக ஜொலித்தன. வயலின் கலைஞர் அக்கரை சுபலக்ஷ்மியின் வாசிப்போ, சுறுசுறுவென்று பளபளத்த கலர் கம்பிமத்தாப்பூ!

* இறைவணக்கம் :
திவ்யா ரமேஷ்



ஏமாந்தால் பள்ளிச் சிறுமி என்று எண்ண வைக்கக்கூடிய பேபி முகம் ரஞ்சனி ஹெப்பாருக்கு. இருபத்து நான்கு வயதில் மியூசிக் அகாடமியில் இசை பயிற்சி ஆசிரியர்! மியூசிக் எம்.ஏ. படித்துள்ள அவருடைய பாட்டின் தரமும் ஆழமும் வியக்க வைக்கின்றன. அக்கரை சுபலக்ஷ்மி அவருக்குச் சற்றே மூத்த அக்கா போல் இருக்கிறார். அவரது வயலின் வாசிப்பே அவர் பாட்டிலும் வல்லவராக இருக்க வேண்டும் என்பதைக் காட்டிக் கொடுக்கிறது. கர்நாடக சங்கீத உலகில் 24-26 என்பது எல்.கே.ஜி. வயது தான். அந்தப் பருவத்திலேயே பி.எச்.டி. தரத்தை எட்டிவிட்டனர் இந்த இரண்டு கலைஞர்களும். இவர்களுக்கு இவ்வாண்டின் கல்கி கிருஷ்ண





எஸ்.கே.ஜி. வயதில் பிஹெச்.டி!

மூர்த்தி நினைவுப் பரிசும், விருதும் வழங்கப்பட்டதைத் தொடர்ந்துதான் கச்சேரியும் நடைபெற்றது.


சம்பிரதாய சுத்தமாக வர்ணத்துடன் ஆரம்பித்த ரஞ்சனி ஹெப்பார், ஹரி காம்போதியை வெகு அழகாக ஆலாபனை செய்து அமரர் கல்கியின் 'வண்டாடும் சோலை தனிலே' கீர்த்தனையைப் பாடி ரசிகர்களை நெஞ்சு நெகிழச் செய்தார். தன்யாஸி ஆலாபனையில் சில அசாத்தியமான பிடிகள்; கல்யாணியில் கனிந்து சொட்டிய பாவம்; நா மொரால கிம்ப என்ற தன்யாஸி கீர்த்தனையைக் கையாண்ட முதிர்ச்சி என ரஞ்சனி ஹெப்பாரின் அன்றைய கச்சேரி அவரது அருமையான எதிர்காலத்துக்குக் கட்டியம் கூறியது.

ஆவர்த்தனத்துக்குப் பிறகு அமைந்த துக்கடா பாடல்களில் கர்ணரஞ்சனி, பஹாடி போன்ற மாறுபட்ட ராகங்களைக் கையாளுவதிலும் தம் திறமையைப் பதிவு செய்தார் ரஞ்சனி.

அக்கரை சுபலக்ஷ்மியோ, ரஞ்சனியின் குரலோடு இழைந்தபோது அனுசரணையோடும் தனித்து ஆலாபனை, நிரவல்-ஸ்வரம் வாசித்தபோது அழுத்தமான தனி முத்திரையோடும் பிரகாசித்தார். வயலின் வாசிப்பில் சிலருக்கு வில் திறன் இருக்கும்; சிலருக்கு விரல் திறன் பிரமாதமாக இருக்கும். சுபலக்ஷ்மியின் வில் திறனும் விரல் திறனும் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டன! வெளிப்பட்ட இசையோ, இதயத்திலிருந்து ஊற்றாகக் கிளம்பி, வயலின் வழியே உருக்கொண்டது.

கச்சேரிக்கு முன் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து கலைஞர்களைக் கௌரவித்தவர் தமிழகத்தின் முன்னாள் டி.ஜி.பி.யும் பாரதிய வித்யா பவன் சென்னை கேந்திரத் தலைவரு







* வரவேற்புரை : கல்கி ராஜேந்திரன்

மான வி.ஆர்.லக்ஷ்மி நாராயணன். தமது பதவிக் காலம் முழுவதிலும் அர்ப்பணிப்பு உணர்வோடு போலீஸ் துறையில் பணியாற்றிய விழாத் தலைவரையும் ரசிகர்களையும் வரவேற்ற கல்கி ராஜேந்திரன் சொன்னார்:

''காவல் துறைக்கும், அமரர் கல்கிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சுதந்திரப் போராட்டத்தின்போது கல்கியை ஆங்கிலேய அரசாங்கத்தின் போலீஸ் மூன்று முறை கைவிலங்கிட்டுக் கைது செய்து, சிறையில் அடைத்து, சர்க்கார் விருந்தாளியாக வைத்திருந்தது. முதல் முறை அவர் பிரிட்டிஷ் அரசாங்கம் விதித்திருந்த 144 தடைச் சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டி, சிறைத் தண்டனை அளித்தது. அடுத்த முறை அவர் மீது இராஜ துரோகக் குற்றம் சாட்டி சிறையில் அடைத்தது. மூன்றாம் தடவை, காந்திஜியின் அறைகூவலை ஏற்று, தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டபோது, கைது செய்து சிறை



* குருநாதர்கள் செங்கல்பட்டு ரங்கநாதன், ரவிகிரண்...

தண்டனை அளிக்கப்பட்டது. அது மட்டுமல்ல... தாம் மேற்கொண்ட சில தேச நலப் பணிகளை முடிக்கவிடாமல் ஆங்கிலேய போலீஸார் தம்மைக் கைது செய்து விடுவார்களோ என நினைத்த கல்கி, சில காலம் தலைமறைவு வாழ்க்கையையும் மேற்கொள்ள நேரிட்டது.

ஆனால், அதே கல்கி பின்னாளில் - இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, போலீஸாருக்கு ஆதரவாக சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த இராஜாஜியிடம் பரிந்து பேசி இருக்கிறார்! போலீசார் பல்வேறு கோரிக்கைகளையும் வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்திருந்த நேரம் அது. ஸ்ட்ரைக் தொடங்குவதற்கு முந்தின நாள் மாலை, கல்கி ராஜாஜியைச் சந்தித்தபோது போலீசார் வேலை நிறுத்தம் செய்வது தவறுதான் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு எடுக்கும் நிலைக்கு அவர்கள் ஏன் தள்ளப்பட்டார்கள் என்பதைப் பார்க்க வேண்டாமா? அவர்களது பிரச்னைகளைத் தீர்த்து வைக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை இல்லையா?' என்று சுட்டிக்காட்டினார். அதனை ஏற்றுக்கொண்ட இராஜாஜி, 'காவல் துறையினரின் பிரச்னைகளை அரசாங்கம் பரிவுடன் பரிசீலிக்கும்' என்று அறிவிக்க, போலீஸ் ஸ்ட்ரைக் வாபஸ் ஆனது.''

வி.ஆர்.லக்ஷ்மி நாராயணன் தமது சிறப்புரையில், ''கல்கி ஐம்பத்தைந்து வயது வரைதான் வாழ்ந்தார். ஆனால், அவரது படைப்புகள் எழுதப்பட்டு எழுபதாண்டுகள் கடந்தும் இன்றும் தமிழ் மக்கள் மத்தியில் வாசிக்கப்படுகின்றன'' என்றவர், ''நான் அமெரிக்கா சென்றிருந்தபோது அர்பானா பல்கலைக்கழகத்தின் நூல் நிலையத்துக்குச் சென்றிருந்தேன். அங்கே இருந்த பெண்மணி, 'உலகத்தின் சிறந்த புத்தகங்கள் எந்த மொழியில் வெளியாகி இருந்தாலும் சரி, அவற்றின் தலைப்பைச் சொல்லுங்கள்; அந்தப் புத்தகம் எங்கள் நூல் நிலையத்தில் இருக்கும்' என்றார். என் மனைவி 'தமிழ்' என்று சொல்ல, நான் 'கல்கி' என்றவுடன் அந்தப் பெண்மணி நூலகத்தில் இருக்கும் நூல்களின் விவரத்

தைக் கம்ப்யூட்டரில் தட்டியதும், அமரர் கல்கியின் நூல்களும், லேட்டஸ்ட் கல்கி வார இதழும் அந்த நூலகத்தில் இருப்பது தெரிய வந்தது'' என்று நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார்.

தமது பணிக்கால அனுபவங்களை 'அப்பாயின்ட்மென்ட்ஸ் அண்டு டிசப்பாயின்ட்மென்ட்ஸ்' என்ற தலைப்பில் நூலாக எழுதியுள்ள லட்சுமி நாராயணன், அரசியல்வாதிகளுடனான தமது சில அனுபவங்களையும், அவர்கள் குறித்த தமது கருத்துக்களையும் கூட விழா மேடையில் கூறத் தயங்கவில்லை.

''இங்கே முதலமைச்சர் கருணாநிதியும், ஜெயலலிதாவும் தமிழ்நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு ஒரு முறை சந்தித்து, தேனீர் அருந்தினாலே போதும் தமிழக காவல்துறை சந்தித்துக் கொண்டிருக்கும் பாதிப் பிரச்னைகள் தீர்ந்துவிடும்'' என்றபோது அரங்கில் பலத்த கைத்தட்டல் எழுந்தது.

அமரர் கல்கி, தமது கட்டுரைகள், விமர்சனங்கள் மூலம் தமிழிசைக்கும், தமிழகக் கலைகளின் மறுமலர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றினார். எத்தனையோ மேடைக் கலைஞர்களை ஊக்குவித்து முன்னேற உதவினார். அப்படிப்பட்டவரின் நினைவாக ஒவ்வோர் ஆண்டும் அவரது பிறந்த தினத்தன்று சிறந்த எதிர்காலம் உடைய இளம் இசைக் கலைஞர்களுக்குப் பரிசும் விருதும் அளித்து, கடந்த பத்தாண்டுகளாகக் கௌரவித்து வரும் கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளையைப் பாராட்டினார் வி.ஆர்.லக்ஷ்மிநாராயணன்.

ரஞ்சனி ஹெப்பாரின் வயதை விஞ்சும் திறமைக்கு வித்திட்டவர்கள் செங்கல்பட்டு ரங்கநாதன், டாக்டர் எம்.ஸ்ரீனிவாசன், சௌம்யா என்று பலர். எட்டு வயதில் வாய்ப்பாட்டு கற்றுக்கொள்ள ஆரம்பித்த அக்கரை சுபலக்ஷ்மிக்கோ அப்பா அக்கரை சுவாமிநாதன்தான் முதல் குரு. அதன்பின் அவரது திறமைக்கு மெருகூட்டியவர்கள் பி.எஸ்.நாராயணசுவாமியும், சித்ரவீணை ரவிகிரணும். தங்களது சிஷ்யைகளுக்கு அளிக்கப்படும் கௌரவத்தைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்து ஆசி கூற செங்கல்பட்டு ரங்கநாதன், சௌம்யா, ரவிகிரண் ஆகியோர் வந்திருந்தது நிகழ்ச்சிக்குச் சிறப்பு என்றால், அறக்கட்டளையினர் அவர்களையும் சால்வை போர்த்தி, நினைவுப் பரிசளித்து கௌரவித்தது பெரும் சிறப்பு. விருது பெற்ற கலைஞர்கள் தங்கள் ஏற்புரையில், தங்களுக்குக் கிடைத்திருக்கும் விருதுகளை, தங்கள் பெற்றோர்களுக்கும், தங்களுக்கு இசையைப் போதித்த குருமார்களுக்கும் சமர்ப்பித்து நெகிழ்ந்தார்கள்.



★ ... சௌம்யா ஆகியோருக்குக் கௌரவம்

அடுத்து டீ.வி. நிகழ்ச்சியைப்போல ஒரு சின்ன பிரேக். அதன் பிறகுதான் கச்சேரி... நிகழ்ச்சி முடிந்து வீடு திரும்பிய மூத்த பெண்கள் பலர், ''இரண்டு குழந்தைகளுக்கும் சுற்றிப் போடணும்'' என்று பேசியபடி சென்றனர்! அவர்களுடைய ஆசையை இந்த வார மேலட்டையில் நிறைவேற்றிவிட்டோம்!

– **எஸ்.சந்திரமௌலி**

அட்டைப் படம் மற்றும் படங்கள் : **ஸ்ரீஹரி**

அட்டையில் : **இவ்வாண்டின் அமரர் கல்கி கிருஷ்ணமூர்த்தி விருது பெறும் இளம் கர்நாடக இசைக் கலைஞர்கள் அக்கரை சுபலக்ஷ்மி, ரஞ்சனி ஹெப்பார்**

முதன் முதலாக...

என் பேரு ஆம்ஸ்ட்ராங். நிலாவைத் தொட்டாரே... அவர் பேருதான். எதை நினைச்சு எங்கப்பா இந்தப் பேரை எனக்கு வெச் சாருன்னு தெரியல. ஆனா நான் நினைவு தெரிஞ்ச நாள்லயே முடிவு பண்ணிட்டேன் - நிலாவைத் தொட்ட ஆம்ஸ்ட்ராங் மாதிரி நாமளும் உயர்ந்த விஷயத்தைக் குறிக்கோளா வச்சுக்கணும்னு. சின்ன வயசுலயே காமிக்ஸ் நிறைய படிப்பேன். விஷுவலா வர்ற அந்தப் படக் கதைங்க எனக்குள்ள ஏற்படுத்தின பாதிப்போ என்னவோ, எனக்கு போட்டோகிராஃபி மேல ஆர்வம் உண்டா யிருச்சு. ஆமா... அடுத்து அப்படியே சினிமாட்டோகிராஃபி மேல நேசம் தொடங்கி, சினிமாதான் வாழ்க்கைன்னு ஒரு நாள் முடிவு பண்ணி சென்னையை நோக்கிக் கிளம்பிட்டேன். துவாரகாநாத் ஸார்கிட்டதான் முதன் முதலா அசிஸ்டண்டா சேர்ந்தேன். கிட்டத் தட்ட அஞ்சு வருஷத்துக்கு மேல ஆச்சு... பல பேர்கிட்ட வேலை பார்த்து, இப்போ நான் ஒளிப்பதிவாளர் பி.கண்ணன் சார்கிட்ட அஸோஸியேட் கேமராமேன்.

தவம்

ஒளிப்பதிவுன்றது சாதாரண விஷயமில்லீங்க. அது ஒரு தவம். ஷூட்டிங் ஸ்பாட்ல டைரக் ஷன் துறைக்குச் சமமா எங்களுக்கு மரியாதை





கிடைக்கும். ஓர் ஒளிப்பதிவாளருக்குக் குறைஞ்சபட்சம் மூணு அஸிஸ்டெண்டுங்க, ஒரு அஸோஸியேட் இருப்பாங்க. ஆபரேடிவ் கேமராமேனா ஒளிப்பதிவாளர் இருப்பார். அவரோட இன்ஸ்ட்ரக்ஷன்படி அஸோஸியேட்டும், இவரோட இன்ஸ்ட்ரக்ஷன்படி அசிஸ்டெண்ட்டுங்களும் வேலை செய்வாங்க. லைட்டிங் பார்க்கறது, ஷாட்ல எல்லாம் கரெக்டா இருக்கான்னு கவனிக்கறது, கண்டினியூட்டி ரிப்போர்ட் எழுதறதுன்னு பல வேலைகளைச் செய்வோம். டைரக்டர் என்ன விரும்புறாரோ அதை ஒட்டித்தான் ஒரு ஒளிப்பதிவாளரோட பணிகள் இருக்கும். ஒரு காட்சி எடுக்கறதுக்கு முன்னாடி ரெண்டு பேரும் யோசிச்சுத் திட்டமிட்டுச் செய்வாங்க. உதவியாளர்களை ஒளிப்பதிவாளர் நல்லா கவனிச்சுக்குவாங்க. நிச்சயமா சம்பளம் உண்டு. கூடக் குறைய இருக்கலாம், ஆனா ஏமாத்த மாட்டாங்க. தினமும் நம்ம கேட்டகரிக்கு ஏத்த மாதிரி பேட்டாவும் தருவாங்க.

டைரக்ஷன் ஃபீல்டுலகூட சமயத்துல

...ராட்டத்துக்கு மத்தியில் தூக்கம்!

பலர் வேலை இல்லாம இருப்பாங்க. ஆனா எங்க துறைல பெரும்பாலும் ஏதாவது ஒர்க் இருந்துட்டே இருக்கும். டெக்னிக்கல் சம்பந்தப்பட்ட ஃபீல்டுங்கறதால வேலை வாய்ப்புக்குக் குறைச்சல் இல்ல. ஆனா நல்லா வேலை தெரிஞ்சாத்தான் மதிப்பு, சம்பளம் எல்லாம்.

அதிர்ஷ்டம்


வாசல் திறந்தே இருக்கறதால பலர் இன்னைக்கு சினிமாவுக்குள்ள நுழைஞ்சிடறாங்க. ஆனா வந்த பிறகுதான் அதோட வீரியத்தைத் தாக்குப்பிடிக்க முடியாம தவிடுபொடியாயிடுறாங்க. எங்க ஒளிப்பதிவுத் துறைய எடுத்துக்கிட்டா, மிகக் குறைஞ்சபட்ச நாலேஜ்ஜோடதான் வர்றாங்க. அடிப்படை புரிஞ்சு வர்றவங்க ரொம்பக் குறைச்சல். வந்துட்டு கத்துக்கலாம்ங்கற பிசினஸ் இங்க உதவாது. இங்க யாரும் யாருக்கும் சொல்லிக் கொடுக்கறதில்ல. அப்படியே வேலை செய்ய, உங்களுக்குப் பழகிடும். அதுதான் அனுபவம். இதுக்கெல்லாம் தயார்படுத்திக்கிட்டு வந்தீங்கன்னா, உங்களை மாதிரி அதிர்ஷ்டசாலி யாரும் இல்ல. சரி, என்ன பண்ணலாம்? ஏராளமா பண்ணலாம்.

வெளில இருந்துக்கிட்டே சினிமாவ கத்துக்கங்க. நல்ல புத்தகங்கள் படிங்க. படம் பாருங்க. ஷூட்டிங் போய் வேடிக்கை பாருங்க. அடிப்படை புரிஞ்சுக்கிட்டு உள்ள வந்தா, எல்லாமே தெளிவா இருக்கும். நீங்களும் தெளிவா இருப்பீங்க.

உறவு நெருக்கம்...

ஒளிப்பதிவாளருக்கும் எங்களுக்கும் உள்ள நெருக்கம், அப்பா - மகன் உறவைப் போல ரொம்ப உன்னதமானது. அவர் எங்களைத்





திட்டுவார். ஆனா அதுல அந்த நேர கோபம் மட்டும்தான் இருக்குமேயொழிய வெறுப்போ, வேதனையோ இருக்காது. தட்டிக் கொடுத்து கட்டிப்பிடிச்சுப் பாராட்டி வேலை வாங்கற ஒளிப்பதிவாளர்களும் இங்க இருக்காங்க. ஓர் ஆர்ட்டிஸ்டை அழகா காட்டவும் எங்களால முடியும், அசிங்கமா காட்டவும் எங்களால முடியும். நேர்ல, கேமரால எப்படி இருப்பாங்க, எந்தக் கோணத்துல இருப்பாங்கன்னு யோசிச்சு பார்த்துப் பார்த்துச் செய்வோம். லைட்டிங் தான் எங்களோட மூலதனம். இன்னைக்கு விதவிதமா லைட்ஸ் வந்தாச்சு. அதேமாதிரி ஃபிலிம். என்ன சிச்சுவேஷன்ல படம் பிடிக்கிறோமோ அதுக்கேத்த ரோல்ஸும் வெரைட்டியா இப்ப கிடைக்குது. எல்லா அசிஸ்டென்ட்டுகளுக்குமே ஆங்கில அறிவு கண்டிப்பா தேவை. எடுக்கப்போறது ரீஜினல் லாங்குவேஜ்



படமா இருந்தாலும் இன்னைக்கு சினிமாவ பொறுத்தவரைக்கும் ஆங்கிலம் இன்றியமையாத மொழியா இருக்கு. டெக்னிக்கலான ஒளிப்பதிவை கத்துக்க இது ரொம்ப முக்கியம். இன்னொன்னு அசிஸ்டென்டுங்க தங்களை மேம்படுத்திக்கத் தேவையான பல சினிமாட்டோகிராபி சம்பந்தமான புத்தகங்கள் ஆங்கிலத்துல தான் இருக்கு.

போராட்டம்

முன்னாடியே சொன்ன மாதிரி சம்பளம்லாம் எங்களுக்குப் பிரச்னை இல்ல. படத்துக்கு நடுவுல விளம்பர வாய்ப்புகளும் வர்றதால பணத் தட்டுப்பாடு அவ்வளவா இருக்காது. ஆனா வீட்டுப் பிரச்னைகள் உண்டு. சினிமா ஆள்னு தெரிஞ்சா இங்க வீடு கொடுக்க மாட்றாங்க. நானே ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கேன். பெரிய போராட்டத்துக்கு மத்தியிலதான் இங்க நாம நல்லா தூங்க முடியுது. திருமணமும் சமயத்துல சிக்கல் ஆகறது உண்டு. சாதிச்சுட்டுத்தான் கல்யாணம்னு ஓடிட்டிருக்கும்போது வயசு காத்திருக்கறதில்ல. இங்க லேட் மேரேஜுன்றது தவிர்க்க முடியாத விஷயமா இருக்கு பலருக்கும். சினிமால இருக்கான்னு பலரும் வெளில பெருமையா பேசிக்குவாங்க. ஆனா தனக்குன்னு வந்தா யோசிக்க ஆரம்பிச்சிடுறாங்க. இது அந்நியமான விஷயம் இல்ல. மக்கள் உணர்வோட கலந்த நிழல். நிஜத்திலிருந்து நிழலை ஒதுக்கவே முடியாதுங்கறதுதானே உண்மை!

அலாதியான பாதிப்பு!

ஒளிப்பதிவாளர் டைரக்டராகறது இங்க ரொம்ப ஈஸி. காரணம் ஒரு படத்தோட மொத்த விஷயத்தையும் உள்வாங்கும்போது சினிமாட்டோகிராபரும் ஒரு நல்ல படைப்பாளியா மிளிர்றார். டெக்னிக்கலா கேமராவை ஹேண்டில் பண்ற மனுஷனா இருந்தாலும் காட்சிகளும் வசனங்களும் அவருக்குள்ள ஏற்படுத்துகிற பாதிப்பு அலாதியானது. சரியான ஒரு ப்ளாட் ஃபார்ம் கிடைக்கும்போது ஒட்டுமொத்தமா டைரக்ஷனா அது அவருக்குள்ளருந்து வெளிப்படுது. என்னைக் கேட்டா, விஷுவலா ஒரு படத்தைத் தரணும்னா ஒளிப்பதிவாளர் தாராளமா டைரக்டராகலாம்.

சந்திப்பு : **மு.மாறன்**



* டாக்டர் கார்த்திக் குணசேகரன்

இனி இல்லை இம்சை!

அன்று முகூர்த்த நாள்! உறவினர் ஒருவரின் மகளுக்குத் திருமணம். நடுத்தர வயதுப் பெண்மணியான ஆனந்தி, குளித்து முடித்து மங்கலகரமாகப் புறப்பட்டார். இவருடைய அலங்காரத்தைப் பார்த்து ரசித்த கணவர் ஒரு ஜோக் சொன்னார். அதைக் கேட்டுச் சிரித்த ஆனந்தியின் முகத்தில் அடுத்த விநாடியே ஓர் அதிர்ச்சிப் பரவல்! போச்சு! புத்துணர்ச்சி பொங்க புறப்பட்டவர் அப்படியே அமர்ந்துவிட்டார். ஆனந்தி சிரித்த சிரிப்பில் உடல் குலுங்க, சிறுநீர் கசிய ஆரம்பித்துவிட்டது. துவண்டுபோனார். திருமணத்துக்குச் செல்லவே இல்லை.

''இத்தகைய பிரச்னைகள் அடிக்கடி ஆங்காங்கே நடந்துகொண்டிருக்கின்றன. சிறுநீர்க் கசிவு, மலக் கசிவு, அடியிறக்கம் போன்ற பிரச்னைகள், சுகப் பிரசவமாகக் குழந்தையைப் பெற்றெடுக்கும் 40 சதவிகிதப் பெண்களுக்கு ஏற்படுபவைதான். மருத்துவரைத் தேடி ஆலோசனை பெற்றால், வெகுவிரைவில் நலம் பெற முடியும்'' என்கிறார். சென்னை, தி.நகரிலுள்ள குணா அசோஸியேட்ஸ் இன் யூரோகைனகாலஜி மற்றும் ரிஸர்ச் ஃபார் இன்கான்டினென்ஸ் மருத்துவ மையத்தைச் சேர்ந்த டாக்டர் கார்த்திக் குணசேகரன்.

''இப்படிக் கசிவுகளும் அடியிறக்கமும் ஏற்படுத்துவதற்கு முக்கிய காரணம் கர்ப்பப்பை, கருப்பாதை, சிறுநீர்ப்பை, மலக் குடல் போன்ற முக்கிய உள்ளுறுப்புகளைத் தாங்கிப் பிடித்திருக்கும் அடித்தளம் (Pelvic Floor) பாதிப்படைந்திருப்பதுதான்.

இப்படிச் சிக்கலைச் சந்திக்கும் பெண்கள் வெளியில் சொல்லவும், மருத்துவரிடம் கலந்தாலோசிக்கவும் தயங்குகிறார்கள். அத்தோடு இல்வாழ்க்கையிலும் தயக்கம் காட்டுகின்றனர்.

இதற்குத் தீர்வு அளிக்கும் விதமாக யூரோஜைனகாலஜி எனும் சிறப்புப் பிரிவு தோன்றியுள்ளது'' என்று கூறும் டாக்டர் கார்த்திக் குணசேகரன் அமெரிக்காவிலுள்ள புகழ்பெற்ற க்ளிவ்லண்ட் மருத்துவமனையின் யூரோகைனகாலஜியில் ஃபெலோஷிப் பட்டம் பெற்றவர். GAURI எனும் மருத்துவ மையத்தை அணுகினால் பூரண நலம் பெற முடியும் என்கிறார் இவர்.

இந்தியாவில் முதல் ஐ.எஸ்.ஓ. சான்றிதழ் பெற்ற கான்டினென்ஸ் சென்டரான GAURI-ல் பெண்களுக்குச் சோதனை (Pelvic Floor Examination) செய்து Day Care (Surg) அறுவை



சிகிச்சையும் செய்யப்படுகின்றது.

இங்கே Cystocopy, Urodynamics சிகிச்சை முறைகளும் உள்ளன.

GAURI மையமும் 'மங்கையர் மலர்' மாத இதழும் இணைந்து சென்னை தியாகராய நகர் ஜி.ஆர்.டி. கிராண்ட் டேஸ் ஹோட்டலில் 23.9.2007 மாலை 4.00 மணிக்கு இலவச சிறப்புக் கருத்தரங்கம் நடத்துகின்றன. சிறுநீர்க் கசிவு பிரச்னைகள் / தீர்வுகளுக்கான ஆலோசனைகளை நேரில் கேட்டறிந்து கொள்ளலாம். மேலும் விவரங்கள் பெற தொலைபேசி எண் : 32904166 அல்லது www.urogynecology.in எனும் இணைய தளத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

– சா.ஜெயராஜ்

நியாயமான



கல்கி 09.09.07 இதழின், அட்டைப் படக் கட்டுரையாக வெளிவந்த 'இந்தியாவைப் பிளக்கும் இஸ்லாமிய தீவிரவாதம்' குறித்தும் அதே இதழ் தலையங்கம் குறித்தும் ஏராளமான கடிதங்கள் எமக்கு வந்து சேர்ந்துள்ளன. அதிக கடிதங்கள் 'சரியான நேரத்தில் சரியான கோணத்தில் வெளிப்பட்டிருக்கும் கட்டுரை' என்று ஆதரித்திருந்தாலும் சில ஆதங்கக் கடிதங்களும் உண்டு. அந்தக் கடிதங்களின் ஆதங்கமெல்லாம் கல்கி ஒரு சார்பு நிலையோடு அந்தக் கட்டுரையை வெளியிட்டிருப்பதாகத் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதுதான். ஆனால், அந்தக் கட்டுரையின் நோக்கம் இஸ்லாம் சகோதரர்களைத் தீவிரவாதிகளாகச் சித்திரிப்பதல்ல; மாறாக, தீவிரவாதத்தில் ஈடுபடுபவர்களில் இஸ்லாம் சமூகத்தினரின் பெயர் அடிபடுகிறபோது, இந்தியாவின் மத ஒருமைப்பாடு உணர்வு ரீதியாகப் பலவீனப்பட்டுப் போகிறது என்பதே.

பாபர் மசூதி இடிக்கப்பட்டபோதும், குஜராத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிராக வன்முறைகள் தலை விரித்தாடிய போதும் கல்கி தனது தலையங்கம் மூலம் வலிமையான எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறது என்பதை கல்கி இதழை வாசித்தறிந்தவர்கள் அறிவார்கள்; ஆனால், மறந்து விடுகின்றார்கள். கட்டுரைக்கு வந்த கடிதங்களும், இஸ்லாமியரின் உரிமைக்காகக் குரல் கொடுத்த கல்கியின் முந்தைய தலையங்கமும் வாசகர்களின் பார்வைக்குத் தரப்பட்டுள்ளன. யார் தவறு செய்தாலும் எதிர்த்துக் குரல் கொடுப்பது நம் கடமை.

(-ஆர்)



✉ தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் எந்த மதத்திலும் சேரத் தகுதியற்றவர்கள். அப்படியிருக்கும்போது இஸ்லாமிய தீவிரவாதம் என்பது தவறு.

- பி.தேவி, பாபநாசம்

✉ மனித உயிர்களைக் காவு வாங்கும் தீவிரவாதிகள் முஸ்லிம்களாக இருக்கும்போது இஸ்லாமிய தீவிரவாதம் என்று குறிப்பிடுவதில் என்ன தவறு?

- ப.ராமகிருஷ்ணன், காயக்காடு

கவலை!

✉ 'இஸ்லாமிய தீவிரவாதம்' என ஓங்கி ஒலிக்கும்போது அதனைக் கண்டிக்கும் தைரியம் ஏன் அந்த மதத்தைச் சார்ந்தவர்களிடம் இல்லை என்பது நியாயமான கவலையே!

- பி.மீனா கணபதி,
திருநெல்வேலி,

✉ தீவிரவாதிகள் அனைவரும் இஸ்லாமியர்களாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. மாறாக, மனிதர்களாக இருக்க மாட்டார்கள் என்பது நிதர்சன உண்மை!

- இரா.சக்கரபாணி,
கோ.புதூர்

✉ தீவிரவாதத்தை இப்படித் தைரியத்துடன் பத்திரிகைகள் எதிர்த்தாலே அது முறியடிக்கப்பட்டு விடும்.

- பா.சு.மணிவண்ணன்,
திருப்பூர் - 4

✉ அட்டைப்படக் கட்டுரை அபாயகரமான எச்சரிக்கையாகத் தோன்றுகிறது.

- எஸ்.ஆர்.ஹரிஹரன்,
எஸ்.ஜி.இசட்கான்

✉ 'ஜிஹாதி' அமைப்புகளின் தீவிரவாத செயல்பாட்டால் அப்பாவி முஸ்லிம்கள்தான் அதிகம் பாதிக்கப்படுவார்கள்.

- என்.பாலகிருஷ்ணன், மதுரை,
- செல்வராஜா, சேலம்
- அ.முரளிதரன், மதுரை

பாபர் மசூதி இடிக்கப்பட்டதைக் கண்டித்து டிச.20, 1992 கல்கி இதழில் எழுதப்பட்ட தலையங்கத்தில் சில பகுதிகள்:

வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ்., சிவசேனா இயக்கங்கள் பி.ஜே.பி.யை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, தங்களுக்கு வேண்டியதைச் சாதித்துக் கொண்டன. அவர்களுக்குக் கோயில் கட்டும் நோக்கத்தைவிட மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கும் நோக்கம்தான் முக்கியம்.

பி.ஜே.பி. தலைவர்களின் கண்மூடித்தனமான பிடிவாதப் போக்கினால், மதச்சார்பற்ற இந்திய அரசியல் சாசனத்துக்கு மகத்தான துரோகம் இழைக்கப்பட்டு விட்டது. இந்தியாவிலேயே மதக் கலவரங்கள் தூண்டிவிடப்பட்டு, இதுவரை ஆயிரம் மக்களுக்கு மேல் பலியாகியுள்ளார்கள் (அதிகாரபூர்வ எண்ணிக்கையைவிட உண்மையில் உயிர் பலிகள் அதிகமாகவே இருக்கும்). உலக நாடுகள் அத்தனையும் நம்மைக் கண்டிக்கவும் பரிகசிக்கவும் செய்கின்றன. உலக அரங்கிலே இந்தியா தலைகுனிய நேரிட்டிருக்கிறது. உபயம்:அத்வானி அண்டு கம்பெனி.

கல்யாண்சிங்கும், அத்வானியும் இப்போது வருந்தி, ''பொறுப்பேற்கிறோம்'' என்கிறார்கள். காலம் கடந்த ஞானோதயம்.

வெறுமனே, ''பொறுப்பேற்கிறோம்' என்று கூறி என்ன பயன்? செயலிலே காட்ட வேண்டும். இந்த அக்கிரமத்துக்குப் பரிகாரம் என்ன?

அத்வானி அண்டு கம்பெனியின் பேச்சு சத்தியமானது என்றால், ''மசூதியைத் திரும்பக் கட்டுங்கள். நாங்கள் ஒத்துழைக்கிறோம்'' என்று மத்திய அரசிடம் மனம் திறந்து கூறட்டும். மசூதியைத் திரும்பக் கட்டும் பணியில் முஸ்லிம்களுடன் இந்துக்களின் கரசேவையும் இணையட்டும்.

இதை அத்வானி செய்தால், கோடிக்கணக்கான முஸ்லிம் மக்களின் மன்னிப்பை மட்டுமல்ல; நன்மதிப்பையே அவர் திரும்பப் பெற முடியும்.

திருமணத்தில் அதிக சந்தோஷம்

● **எம்.தணிகாசலம், செங்கல்பட்டு**

நான் கவிதைகள் எழுதுவேன்... காதலிக்கலாம் என்றால் குண்டாக இருக்கிறேன்.. என்ன செய்ய..?

மகாகவி பாரதியார் போல கவிதைகள் எழுதி தேசத்தைக் காதலியுங்கள். மனித நேசத்தைக் காதலியுங்கள், பராசக்தியைக் காதலியுங்கள், பச்சைக் குழந்தையைக் காதலியுங்கள். குண்டாக இருப்பதால் உங்களை வருங்காலம் 'மகா-ஹெவி பாரதியார்' என்று போற்றும்.

● **க.பார்த்திபன், சென்னை**

அய்யா கிரேஸி, நீங்கள் ராஜாவாக பல்லக்கில் அமர்ந்தபடி, வாயில் ஜர்தா பீடா போட்டுக் குதப்பியபடி வீதியில் துப்பிக்கொண்டு பவனி வருவதுபோல கனவு கண்டேன்...?

பல்'Luck'-ல் பவனி வரும் இதே பார்த்திபன் கனவு எனக்கும் வந்தது. அதில் நீங்கள் பல்லக்குக்கு முன்னே 'கிரேஸி மன்னர் பான்-பராக்... பான்-பராக்... பராக்' என்று கட்டியங் கூறிக்கொண்டு அதே வீதியில் அங்கப்பிரதட்சணம் செய்துகொண்டு போனீர்கள்.

● **என்.சண்முகம், திருவண்ணாமலை**

புலி பசித்தால் புல்லைத் தின்னுமா?

குஷியாக ஒரு குழப்பல். பசி வெறியில் ஒரு வேளை, புலிக்குக் கொம்பு முளைத்தால் புலி பசுவாகும். கொம்பு முளைத்த பசுத் தோல் போர்த்திய புலி புல்லைத் தின்னும். அதே கொம்பு புல்லுக்கு முளைத்தால் புல், புலி ஆகிவிடும். புலியாக மாறிய புல் பசுவாக மாறிய புலியைத் தின்றுவிடும். இன்னும் இருக்கு. புலியாக மாறிய அந்தப் புல்லுக்கு ஒரு பூனை பிறக்கலாம். அந்தப் பூனை கண்ணை மூடிக்கொண்டு கணக்குப் போடும் கெட்டிக்கார 'கணக்குல புலியாக' இருக்கலாம். 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' என்ற கேள்விக்கும் நீங்கள் இதே பதிலை வைத்துக்கொள்ளலாம்.

● **கே.எஸ்.நாராயணன், சென்னை**

பெண்கள் நாட்டின் கண்கள் என்கிறார்கள். அப்படியானால் ஆண்கள்?

கண்ணுக்கும் இருக்கும் கருவிழியை 'பாப்பா' என்கிறோம். பாப்பாவை ஆங்கிலத்தில் Pupil என்பார்கள். Pupil என்பதற்கு நல்ல மாணவன் என்ற வேறு பொருளும் உண்டு. இன்றைய நல்ல மாணவர்கள்தான் நாளைய People, அதாவது நாட்டு மக்கள். SO நல்ல பாப்பாக்களை பெற்றுத்தரும் பெண்கள் நாட்டின் கண்கள் என்றால், ஆண்கள் அந்தக் கண்களைக் காக்கும் இமைகள். இமையும், விழியும் இணைந்தால்தானே பாப்பா!

● **எம்.சம்பத், கரூர் மாவட்டம்**

எப்போதும் சந்தோஷமாகவே வாழ்க்கை இருந்தால், சுவாரஸ்யமாக இருக்குமா..?

சந்தோஷம் வேறு, சுவாரஸ்யம் வேறு. கேள்விக்குப் பதில் தேடுவது சுவாரஸ்யம்; சுவையான பதில் கிடைத்தால் சந்தோஷம். வாங்கும் சம்பளம் சந்தோஷம். செய்யும் வேலையில் Job Satisfaction சுவாரஸ்யம். இன்னும் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் காதல் சுவாரஸ்யமானது. கல்யாணத்தில் முடிந்தால் சந்தோஷம். அதன் பிறகு பிள்ளை குட்டிகள், அவர்களுக்குக் கல்யாணம் என்று சுவாரஸ்யம் வேறு ரூட்டில் போகும். 'சுவாரஸ்யமான சந்தோஷம்' சித்தர்கள் சொன்னபடி 'சும்மா இருந்து சுகம் பெறுவதுதான்.'

● **ஆர்.அஜிதா, கம்பம்**

தம்பதிகளுக்கிடையே பிரி



கிரேஸியைக் கேளுங்கள்

யாருக்கு ?

யம் கூட என்ன வழி?

பிறருக்காக விளம்பர இடைவேளைகூட விடாமல் பிரியாமல் இருங்கள். பிரியம் தானாகக் கைகூடும்.

● **ஜி.லஷ்மி வாசுதேவன், வேளச்சேரி**

காமெடி நடிகர்கள் வாழ்க்கையில் சீரியஸாக இருப்பார்களா...?

அப்படிப் பார்த்தால் வைத்தியர்கள் வாழ்க்கையில் நோயாளிகளாக இருப்பார்களா? இல்லை, வக்கீல்கள்தான் வாழ்க்கையில் குற்றவாளிகளாக இருப்பார்களா? இதெல்லாம் வெறும் சங்க கால கர்ண பரம்பரை சந்தேகங்கள். நாம் நம் உடம்பில் ஸெண்ட் போட்டுக் கொண்டால்தான் நம்மைச் சுற்றி நறுமணம் பரப்ப முடியும். யாம் பெற்ற இன்பத்தைத்தான் இவ்வையகம் பெறத் தர முடியும்.

மு.ரா.பாலாஜி, கோலார் தங்கவயல்

கிரேஸி, திருமணம் என்றதும் அதிகமாய் சந்தோஷப்படுவது ஆண்களா? பெண்களா?

பெண்களைப் பெற்ற ஆண்கள்!

அ.ராஜா ரஹ்மான், கம்பம்

மனிதனுக்கு மறதி மட்டும் இல்லாமல் போயிருந்தால்?

அடச்சே... நல்ல பதில் யோசித்து வைத்திருந்தேன். எழுதும்போது மறந்து விட்டது!

●





Registered with the Registrar of Newspaper of India under No.1041/57* Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG s Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.